T/300/0265

# கல்விப் பாரம்பரியங்கள்

பேராசிரியர் வ. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

370.009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பாரம்பரியங்கள்


**பேராசிரியர் வ. ஆறுமுகம்**

தலைவர்,

கல்வியியற்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



கல்விக் கழகம்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம்

1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TITLE : KALVIP PARAMPARIYANKAL

AUTHOR : PROFESSOR V. ARUMUGAM

LANGUAGE : TAMIL

EDITION : FIRST EDITION — JULY 1994

COPYRIGHT : AUTHOR

SIZE : 18.5 cm. X 12.5 cm.

PUBLISHERS : EDUCATION SOCIETY,
UNIVERSITY OF JAAFFNA,
JAFFNA, SRI LANKA.

PRINTERS : MULLAI PRINTERS, ADIYAPATHAM ROAD,
NALLUR, JAFFNA.

SUBJECT : EDUCATION

PRICE : RS. 100/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்களின் மணிவிழா ஞாபகார்த்த வெளியீடாகக் கல்விப் பாரம்பரியங்கள் என்னும் இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்விச் சமூகத்தினால் வெளியிடப்படுகின்றது.

ஏறத்தாழ நான்கு தசாப்தங்களாகக் கல்வியோடும் கல்வி நிறுவனங்களோடும் தம்மை இணைத்துக் கொண்டு, சீரிய கல்விப் பயனை இந்நாடு பூராவும் பெறும் வகையில் அரும் சேவையாற்றி வருபவர் இப் பேராசான் அவர். இலங்கையின் கல்வி வளர்ச்சியில் வரலாற்றுப் புகழ்பெற்ற யாழ்ப்பாண மாவட்டத்தில் பேராசிரியரின் பிறப்பும் வாழ்வும் இணைந்தது போல அவரது கல்விப் பணியும், சமூகவாழ்வும் இணைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற்துறையின் தலைவராகவும் கல்விப் பேராசிரியராகவும் துலங்கும் இவரது புலமைத்துவம், கல்விசார்ந்த குறிக்கோள், தொழில் அனுபவம், சமூகநோக்கு என்பவற்றின் கூட்டு விளைவாகக் கல்விப் பாரம்பரியங்கள் என்னும் இந் நூல் அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

பேராசிரியரின் 60 ஆவது அகவையின் நிறைவைக் கொண்டாடும் வாய்ப்பு எமது கல்விக்கழக நிர்வாகத்திற்குக் கிடைத்தமையானது மிகவும் மகிழ்ச்சிக்கும், பெருமைக்கும் உரிய அம்சமாகும். இந்த மணிவிழாவை நினைவு கூரும் வரலாற்றுப் பதிவாக இவரின் ஆக்கத்தில் உருவான இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை எமது கல்விக்கழக வெளியீட்டுக்காக மனமுவந்து முன்வந்து ஆக்கித்தந்த பேராசிரியர் அவர்கட்கு எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்பணியை செவ்வனே நிறைவேற்றுவதற்கு எமக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை நல்கிய கல்வியற்துறை விரிவுரையாளர்களுக்கும், நூல் வெளியீட்டில் முழுமனதுடன் தேவையான உதவிகளை நல்கிய எமது சக மாணவர் தொகுதியினர்க்கும், ஏனைய ஆதரவாளர் கட்கும் எமது நன்றிகள்

இந்நூலை உரியகாலத்தில் சிறப்புற அச்சிட்டு உதவிய முல்லை அச்சகத்தினர்க்கும் எமது நன்றிகள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக்
கல்விக்கழகம்

1994 - 07 - 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

'கல்விப் பாரம்பரியங்கள்' என்ற பெயரில் வெளிவரும் இந்நூல் ஒன்பது கட்டுரைகளை உள்ளடக்கியதாகும். அண்மைக காலத்தில், கல்விசார் செயற்பாடுகள் சிலவற்றில் எனது பங்களிப்பாக அமைந்த கட்டுரைகள், உரைகள் ஆகியவற்றுள் ஒன்பது தெரிந்தெடுக்கப்பட்டு நூலுருவாக வெளிவருகின்றது. அவை கல்விப் பாரம்பரியத்தின் பல்வேறு கணுக்களோடு தொடர்புபட்டவை என்ற வகையில் 'கல்விப் பாரம்பரியங்கள்' என்ற பெயர் பொருத்தப்பட்டது.

இதில் அடங்கியிருக்கும் கட்டுரைகளில் பின்வருவன குறிக்கப்பட்ட மலர்களுக்காக எழுதப்பட்டு அச்சுருவில் வெளிவந்தவை அல்லது வெளிவர இருப்பவை:-

1. 'கல்வியில் கடமையும் அர்ப்பணமும்'
—யாழ். இந்து மகளிர் கல்லூரி,
பொன் விழா மலர், 1993.

2. 'ஆசிரியனின் பல்வகைத் தோற்றங்களும் செயற்பாடுகளும்' — காரைநகர் விக்னேஸ்வராக் கல்லூரி,
பவள விழா மலர் (வெளிவர இருப்பது)

3. 'கல்வி அன்றும் இன்றும்'
— உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்,
பவள விழா மலர், 1992

4. 'எமது கல்வி' — இணைப்பாரிய அதிபர்
இணுவில் செ. சோதிப்பெருமான்
பாராட்டுவிழா மலர், 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 'இலங்கைக் கல்வியில் சோர்கன் அறிக்கை'

— கலைஞானம் 4, யாழ். பல்கலைக் கழகக் கல்விக் கழக வெளியீடு, 1990

'யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம்', 1970க்குப் பின் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள்—எதிர்பார்ப்பும் நிறைவேற்றமும்' என்ற இரண்டும் முறையே யாழ். இந்துக் கல்லூரியில் இ. சபாலிங்கம் நினைவுப் பேருரையாகவும், யாழ். பல்கலைக் கழகத்தில் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரையாகவும் இடம் பெற்ற உரைகளின் எழுத்து வடிவமாகும். இந்த ஏழின் வெளியீட்டுக்கும் அந்தந்த நிறுவனங்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஞ்சிய இரண்டில் 'இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் சைவக் கல்வி' என்பது முன்னரே எழுதப்பட்டாலும் இதுவரை வெளியிடப்படாதது. 'பன்மைச் சமூகத்தில் கல்வியின் நோக்கும் போக்கும்' என்பது புதிதாக எழுதப்பட்டது.

இந்த ஒன்பது கட்டுரைகளும் கல்வியுலகில் தொடர்புகொள்வோருக்கு ஏதோ வகையில் உதவும் என்ற எண்ணத்தில் தொகுக்கப்பட்டு நூலுருப் பெறுகின்றன. கட்டுரைகளில் ஆங்காங்கு வெளியிடப்பட்டிருக்கும் எனது சொந்தக் கருத்துக்களும் விளக்கங்களும் வெறும் விமர்சனத்துக்காக அல்ல என்பதைப் பணிவுடன் குறிப்பிட விரும்புகிறேன். அவை, பள்ளிக்கூட மட்டத்திலும் பல்கலைக் கழக மட்டத்திலும் ஆசிரியர் தொழிலில் நான் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் எழுந்த எனது நம்பிக்கைகள், பயன்கருதி, அவை கல்வியுலகுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இக் கட்டுரைகளை நூலுருவில் வெளியிட முன்வந்த யாழ். பல்கலைக் கழகக் கல்விக் கழகத்தினருக்கு எனது கடப்பாட்டினைத் தெரிவிக்கின்றேன்.

கல்வியியற் துறை
யாழ். பல்கலைக் கழகம்
18-07-1994

வ. ஆறுமுகம்

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | i |
| முன்னுரை | iii |
| 1. யாழ்ப்பாணத்தில் சைவக்கல்விப் பாரம்பரியம் | 01 |
| 2. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் சைவக்கல்வியின் நிலை | 12 |
| 3. எமது கல்வி | 21 |
| 4. ஆசிரியனின் பல்வகைத் தோற்றங்களும் செயற்பாடுகளும் | 28 |
| 5. கல்வியில் கடமையும் அர்ப்பணமும் | 38 |
| 6. கல்வி - அன்றும் இன்றும் | 48 |
| 7. 1970 க்கும் பின் இலங்கைக் கல்வியில் புதியபோக்குகள் - எதிர்பார்ப்பும் நிறைவேற்றமும் | 57 |
| 8. இலங்கைக் கல்வியில் மோர்கன் அறிக்கை | 82 |
| 9. பன்மைச் சமூகத்தில் கல்வியின் நோக்கும் போக்கும் | 97 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம்

'சைவக் கல்விப் பாரம்பரியம்' எனப் பேசும்போது அதற்கான வரைவிலக்கணத்தையும், அத் தொடர் குறிக்கும் எல்லைகளையும் வகுக்கவேண்டிய முதற்தேவை கருத்திற்கொள்ளப்பட்டேயாகவேண்டும். 'சைவக் கல்வி' என்பது சைவ சமயம்பற்றிய கல்வி, சைவக் கல்விச் சூழலில் வழங்கப்படும் கல்வி எனப் பொருள் கொள்ளலாம். அத்தகைய கல்விக்கிருந்த வரலாறும், அது போற்றிப் பேணிய விழுமியங்களும் அதன் பாரம்பரியத்துள் அடங்கும். பாரம்பரியத்தைப்பற்றிச் சிந்திக்கும்போது அதனைப் பேணிப் பாதுகாத்தவர்கள், அதற்கெனத் தொண்டாற்றியவர்கள், தொண்டாற்றிய அமைப்புக்கள் என்பவற்றையும் கருத்திற் கொள்ளவேண்டியது தவிர்க்கமுடியாததாகும். எனவே, இவை அனைத்தையும் கருத்தில் வைத்தே 'யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம்' அணுகப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்று நோக்கில் பார்க்கும்போது, இலங்கைக்குப் பௌத்தமதம் வருவதற்குமுன் வழக்கிலிருந்த மரபு இந்து மரபென்பது அக்காலத்துக்குரிய நூல்கள் மூலம் அறியக்கிடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமண மரபு / புரோகித மரபு என அன்று வழங்கிய அம்மரபு சிங்கள மன்னர்களின் ஆட்சியில் தென்னிலங்கையில், விசேடமாக அரசியலோடு ஒட்டி, நடைமுறையில் இருந்தது. அக்காலத்தில், நாட்டின் வடபகுதியில் வழக்கிலிருந்த மரபுகளைப்பற்றித் திட்ட வட்டமான தகவல்கள் கிடைக்காத நிலையில் பெரும்பாலும் ஊகத்தின் அடிப்படையிலேயே செயற்படவேண்டியுள்ளது. அவ்வடிப் படையில், பூர்வீக காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியிலும் இந்து மரபு வழக்குகளும் செயற்பாடுகளும் இடம் பெற்றிருக்கவேண்டும் எனக்கொள்ளுவது பொருந்தும். இந்தியாவிலிருந்து வந்த பிரா மணக் கல்வி மரபு, அடிப்படையிற் கொண்டிருந்த தத்துவமும் செயற்பாடுகளும் எமது சைவக் கல்வி மரபின் மூலங்களாக அமைந்தன என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாகும். பிரா மண மரபின் காலத்துக்கூடான வளர்ச்சி சார்ந்த மாற்றம், யாழ்ப் பாணப் பாரம்பரியத்தின் பிரதிபலிப்பாக, சைவக் கல்வி மரபாக உருப்பெற்றது எனக்கூறுவது நியாயமானதேயாகும். தமிழையுக் சைவத்தையும் கண்களெனப் போற்றிவளர்த்த யாழ்ப்பாண அர சின் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் சைவக் கல்விப் பாரம் பரியம் யாழ்ப்பாணத்தில் கால்கொண்டுவிட்டது என்பதை வரலாற் றில் காண்கின்றோம்.

பதினாறாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற் றாண்டின் நடுக்கூறுவரை, யாழ்ப்பாணத்தில் சைவக் கல்வியின் நிலை அவலமானதாகத்தான் இருந்தது. அடுத்தடுத்துத் தொடர்ந்த அந்நியர் ஆதிக்கம் நாடு முழுவதும் சுதேசிய பாரம்பரியங்களை அடக்கியொடுக்கும் நிலையே அக்காலத்தில் காணப்பட்டது. முத லில் வந்த போர்த்துக்கேயருடைய செயல்முறைகள் பெரிதும் வன் முறைகளாகக் காணப்பட்டன. அவர்களைத் தொடர்ந்த டச்சுக் காரர், ஆங்கிலேயர் இருவரும் கிறிஸ்தவப் பிரசாரத்திலும் மத மாற்ற நடவடிக்கைகளிலும் போர்த்துக்கேயருக்குச் சளைத்தவர் களல்ல என்றாலும், அவர்களுடைய அணுகுமுறை வேறுவிதமான தாயிருந்தது. 'ஒரு கையில் வாளும் மறு கையில் பைபிளும் கொண்டு செயற்பட்டவர்கள் எனப் பிரசித்திபெற்ற போர்த்துக் கேயரின் காலத்தில் பௌத்தம், சைவம் இரண்டுமே பதுங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிற்றான் வாழ்ந்தன. போர்த்துக்கேயர் கத்தோலிக்கத்தை மக்கள்மீது கட்டாயப்படுத்தித் திணித்தனர். டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் அதேவிதமான பலாத்காரப் பாதையிற் போகா விட்டாலும், அவர்களும் சுதேசிய மதங்களையும் பாரம்பரியங்களையும் பாதிக்கத்தான் செய்தார்கள்.

மிஷனரிமாருடைய ஒழுங்கமைந்த, நிறுவனப்படுத்தப்பட்ட திட்டமிட்ட பிரசாரம் ஒருபுறம், மத மாற்றத்துக்கு அனுசரணையாக இருந்த ஆட்சியாளர்களுடைய போக்கு மறுபுறமாகச் செயற்பட்டு, சுதேசிய சமயங்களை அவற்றின் சொந்த நாட்டிலேயே ஒளியிழக்கச் செய்தன. அடுத்தடுத்துவந்த மேலைநாட்டு ஆதிக்க அலைகள் சுதேசிய மரபுகளை அள்ளிக்கொண்டு போகும் அபாயம் இருந்தது.

அந்த இருள் சூழ்ந்த காலங்களில் சைவக் கல்வியின் பாதுகாவலராகப் பணியாற்றிய பெருமை கோவில்கள், மடங்கள், திண்ணைப்பள்ளிக்கூடங்கள் என்பவற்றுக்கேயுண்டு. எம்மவர்களின் பாரம்பரியத்தின் வரலாற்றில், சமயத்தை வளர்ப்பதில் கோவில்களும் மடங்குகளும் தமக்கெனத் தனித்துவமான இடத்தை வகித்துள்ளன. சமய வளர்ச்சிக்கு நிலைக்களனாகக் கோயிலும், சமயஞ்சார்ந்த அறிவு வளர்ச்சிக்கு அடித்தளமாக மடமும் இயங்கி வந்துள்ளன. அந்த இயக்கமே எமது சைவப் பாரம்பரியத்தை அன்றும் அழிவிலிருந்து காப்பாற்றியது. ஆதிகாலத்துக் குரு-சிஷ்யமுறையின் வழியில் சைவக் கல்வியை வளர்ப்பதில் திண்ணைப்பள்ளிக்கூடங்கள் பணியாற்றின. தமிழ் சங்கீதம், என்பு மொழிகளிலும், சைவ சமயத்திலும் ஆழமான அறிவுபடைத்த ஆசான்கள் தத்தம் இல்லங்களில் வழங்கிய கல்வியே திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வியாகும். அத்தகைய செயற்பாடுகளே அந்நிய ஆக்கிரமிப்பில் தளர்ந்துபோய்நின்ற சைவக் கல்விப் பாரம்பரியத்துக்குக் கைகொடுத்தன. அந்தக் காலங்களில் மூச்சைப் பாதுகாத்துக்கொண்ட சைவக் கல்வி அதன் மறுமலர்ச்சி யுகத்திலிருந்து ஏறுநடை போடத்தொடங்கியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறு–1842ஆம் ஆண்டு தொட்ட காலப்பகுதி – யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப்பாரம்பரியத்தின் புத்தெழுச்சிக் காலமெனலாம். அக்காலத்தில், சைவசமயத்தின் இழிநிலை யாழ்ப்பாணத்தில் சமூக மேல்மட்டத்தினரிடையே விழிப்பினை ஏற்படுத்தியது. அவர்களை இருவகைப் பட்ட பணிகள் எதிர்பார்த்திருந்தன.

1. கிறித்தவ மதப்பிரசாரத்தினால் இடம்பெற்ற மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்துவது.

2. சைவசமயக் கருத்துக்களையும் அவற்றின் மேம்பாட்டையும் மக்கள் மத்தியில் நிலைநாட்டுவது.

இதனடிப்படையில். பிள்ளைகளுக்குச் சைவசமயச் சூழலில் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற இயக்கம் 1842 இல் ஆரம்பமாகியது. வைத்திலிங்கச் செட்டியார், சிறாப்பர் குருநாதமுதலியார், இரகுநாத முதலியார் ஆகிய 'உயர்குடிப் பிறப்பாளர்கள்' ஒன்றுசேர்ந்து, கிறிஸ்தவ மதப்பரம்பலை தடுக்க சைவசமயக் கல்வியைப் பரப்புவதற்கென ஒரு பாடசாலையை 30–09–1892 இல் நிறுவினர். அவர்கள் 'நாவலர் தமது இயக்கத்தைப்பற்றித் தீவிரமாகச் சிந்திப்பதற்கு முன்னர் சைவக்கோட்பாடுகளை மீண்டும் நிலைநிறுத்த முயற்சி எடுத்தனர்.' இதில் சைவக்கல்விப் பாரம்பரியத்தின் புத்தெழுச்சியின் தொடக்கத்தைக் காண முடியும். நாவலருடைய செயற்பாடுகள் அதற்கு கனதியையும் காத்திரத்தையும் கொடுத்தன.

நாவலருடைய செயற்பாட்டின் தன்மையையும் அவர் கையாண்ட முறைகளும் அவர் கருத்தில் கொண்ட பணிக்கு சாலவும் பொருந்துவனவாக அமைந்தவை குறிப்பிடத்தக்கது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியபகுதியில் நாவலர் சந்திக்க வேண்டியிருந்த அறைகூவல்கள் பல. அவையாவன:

1. யாழ்ப்பாணத்தில் பரவிக்கொண்டிருந்த கிறித்தவ மதமாற்று நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சைவ சமயிகளிடையே அவர்களது சமயம் பற்றிய விழிப்பினை ஏற்படுத்தி சைவசமயத்தில் பற்றினை உறுதிப்படுத்தல்.

3. சைவ சமய அறிவினைப் பெருக்குதல்

4. சைவக்கல்விக்கு வித்திடுதல்.

அவர் வாழ்ந்த காலத்துச் சூழ்நிலை அதற்கு ஏற்றதாக அமைந்தது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டதைப்போன்று நாவலருடைய வாழ்க்கையின் ஆரபத்தில் அவர் பதினான்கு வருடங்களாக வதிந்த கிறித்தவச் சூழலே அவருடைய பணியினைச் சைவருக்கு நல்கியது. (யாழ். வெஸ்லியன் மெதடிஸ்த மத்திய பாடசாலையில் கல்வி பெற்று, சிறிது காலம் அங்கே ஆசிரியராகவும் பெர்சிவல் பாதிரியாரிடம் மொழிப்பெயர்ப்பாளராகவும் கடமையாற்றிய காலம்). அதற்கூடாக கிறித்த சமயம் பற்றியும், மிஷனரிமாருடைய தந்திரோபயங்கள் பற்றியும் நாவலர் கொண்டிருந்த அறிவும் அனுபவமும் அவருடைய வேலையைச் சுலபமாக்கின.

யாழ்ப்பாணத்துச் சைவர்களுடைய இழிநிலைக்குக் காரணம் அவர்களுக்குப் பயன்படக்கூடிய சைவ மாரிவான கல்வி அளிக்கப்படாமையே. என்பதை நாவலர் உணர்ந்தார். கல்வியைக் காட்டிச் சைவர்கள் கிறித்தவத்திற்குக் கவர்ந்திழுத்த பாதிரிமாரின் உத்திகளை முறியடிப்பதற்கு சைவத்தையும் ஒருங்கே வளர்க்கும் நோக்கத்துடன் பள்ளிக்கூடங்களைத் தாபிக்கும் பணி நாவலரால் ஆரம்பிக்கப்பட்டது. 1848 இல் வண்ணார்பண்ணையில் நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடர்ந்து, யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் சைவக் கல்வியைப் பரப்புவதற்குப் பல பள்ளிக்கூடங்கள் தோன்றின. அவை கிறித்தவ மதமாற்று முயற்சிகளுக்கு எதிரான 'பாதுகாப்பு அரண்களாக'ச் செயற்பட்டன என்பது மிகையாகாது.

சைவக் கல்வியை வளர்த்தெடுப்பதற்கு வேண்டிய பள்ளிக்கூட அமைப்பினை உருவாக்குவதில் நாவலர் காட்டிய பாதையில் தொடர்ந்தவர்கள் பலர். கால ஒழுங்கில் அவர்களைக் குறிப்பிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதாயின், சைவபரிபலாணசபை, சேர். பொன்னம்பலம் இராமநாதன் சைவவித்தியா விருத்திச் சங்கம், புத்தூர் மலவராயர் கந்தையா உபாத்தியார், சுந்தரோடை கந்தையா உபாத்தியாயர், செல்லிப் பளை பாவலர் துரையப்பாப்பிள்ளை எனப் பட்டியற்படுத்தலாம். இவர்கள் ஒவ்வொருவருடைய முயற்சியிலும் சைவக் கல்வியின் சீரான வளர்ச்சி நோக்கில் இலக்காகியிருந்தது என்பது தெளிவாகும்.

தனி நபர்கள் முயற்சிகள் குறிப்பிட்ட பகுதியிற் பணியாற்ற அவற்றைப் பலப்படுத்தும் வகையில் நிறுவன அமைப்புக்கள் தோன்றின. நாவலருடைய அபிமானிகள் சிலர் சேர்ந்து 16-03-1880 'சைவப்பிரகாச சமாஜியம்' என்ற சபையினையும் 'உதயபானு' என்ற தமிழ்ப் பத்திரிகையையும் தோற்றுவித்தனர் நாவலர் தூண்டிவிட்ட சைவ உணர்வினையும், சைவர்களுடைய நலன்களையும் பேணுவதாக அவர்கள் நோக்கம் அமைந்தது. சைவ பரிபாலன சபை, யாழ். இந்துக் கல்லூரி அதிகாரசபை சைவ வித்தியாவிருத்திச் சங்கம் என்பவற்றின் பணி சைவக் கல்வியின் வளர்ச்சிக்கென நிறுவன அமைப்பு அதுவரை இல்லாத குறையைப் போக்கியது.

1888 இல் சைவ பரிபாலன சபையும், 1923 இல் சைவ வித்தியாவிருத்திச் சங்கமும் செயற்பட ஆரம்பித்தன. சைவ பரிபாலன சபையின், செயற்பாட்டோடு இணைந்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபையும் இதனுள் அடக்கப்படலாம். அச்சபை 1902 இல் அமைக்கப்பட்டபோது அது யாழ் இந்துக் கல்லூரியின் அபிவிருத்தியையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. அதன் செயற்றிறமை பலராலும் மதிக்கப்பட்டு வளர்ந்த போது, கொக்குவில், உரும்பிராய், வட்டுக்கோட்டை காரைநகர், சாவகச்சேரி, தொண்டமானாறு ஆகிய இடங்களிலும் இந்து ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் அமைவுற்று அதனுடன் இணைந்தியங்கும் நிலைமை உருவாகியது. (அவை எல்லாம் காலப்போக்கில் இந்துக் கல்லூரிகளாக உயர்வுபெற்றன) அவ்விணைப்பு சைவக்கல்வி நிறுவனங்களிடையே ஒத்துழைப்புக்கு வழிவகுத்ததன் மூலம் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியையும் உறுதிப்படுத்தியது. அந் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட காரணம் ஒன்றாகவே இருந்தமையினாலும், அதிபர், ஆசிரியர்கள் கலந்துமாறப்பட்டதுடன் பொதுப் பரீட்சைகளும் நடத்தப்பட்டன. அத்தகைய பணி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பள்ளிக்கூட வலை ஒன்றினைப் பின்னிச் சைவ சமயிகளை ஒருவரோடொருவர் பிணைத்தது.

யாழ்ப்பாணத்தில் நிலவிய சைவக் கல்விப்பாரம்பரியத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது அதற்கெனச் செயற்பட்ட பள்ளிக்கூட அமைப்புடன், அதன் அடிப்படைத் தத்துவ நிலைக்களனையும் பார்ப்பது அவசியமாகும். சமயச் சூழலில் கல்வியை வழங்குவதற்கெனப் பள்ளிகூடங்கள் அமைக்கப்பட்ட அதே வேளை, அவற்றில் சமய அறிவினை வளர்ப்பது மட்டுமல்லாமல், பொது மக்களிடையே சமய விளக்கத்தைப் பிரபல்யப்படுத்தவும் வேண்டிய தேவை இருந்தது. இதனை நிறைவேற்ற எழுந்த செயற்பாடுகளிலும் நாவலருடைய உருவம் முன்னுக்குக் காணப்படுகின்றது. பள்ளிக்கூடங்களை அமைப்பதில் மட்டுமல்லாமல் வேறுவழிகளிலும் நாவலர் சைவத்தையும் சைவக்கல்வியையும் பேணினார். கோயில்கள் சபைகள் ஆகிய இடங்களில் சமயப் பிரசங்கங்களையும் விரிவுகளையும் நிகழ்த்துதல், சைவசமயப் பிரசாரத்தை மேற்கொள்ளச் சமயப் பிரசாரகர்களைப் பயிற்றுவித்தல்; மாணவர்களுக்கேற்ற சைவசமய நூல்களை ஆக்கி வெளியிடுதல்; மக்கள் மத்தியில் காணப்பட்ட சைவம்பற்றிய தவறான கருத்துக்கள், வழக்குகள் என்பவற்றைப் போக்குவதற்குக் கண்டனப் பிரசுரங்கள் வெளியிடுதல்; வயதில் முதிர்ந்தவர்களுக்குத் தமது இல்லத்தில் கல்வி வழங்குதல் என்பன அவற்றுள் அடங்கும். நாவலருடைய காலத்தில் சைவமறுமலர்ச்சியில் முக்கிய தேவைகளாக இருந்தவை சைவ சமயிகளிடையே மதமாற்றத்தைத் தடுத்தல், சைவர்களிடையே வைதிக நெறியினைப் பாதுகாத்தல் என்ற இரண்டும் எனலாம் அவரால் வெளியிடப்பட்ட சைவ சமய நூல்கள் சமயப் பாரம்பரியத்தையும் இலட்சியங்களையும் நிறுவி நிலைநாட்ட வழிகோலின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மக்கள் மத்தியில் "வைதீக சமய உண்மைகளையும் கருத்துக்களையும் பிரசாரம் செய்யவும்" சைவர்களின் அரசியல், சமூக, சமய அபிலாட்சைகளை வெளிப்படுத்தக்கூடிய பத்திரிகைகள் மற்றும் இலக்கியம், சமயம், தார்மீகம், விஞ்ஞானம் ஆகிய துறைகள் சார்ந்த நூலகம் ஒன்றினை நிறுவுதல்" என்ற நோக்கங்களுடன். "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற மகுடவாசகத்தை மேற்கொண்ட சைவ பரிபாலன சபையின் பங்களிப்பு இதில் பிரதானமானதாகும். அன்றைய காலகட்டம் இந்தியாவிலும் சமய மறுமலர்ச்சி முனைப்பெடுத்த காலம் என்பது நோக்குதற்குரியது. 'பிரம சமாஜ்', 'ஆரிய சமாஜ்' 'பிரமஞான சபை' என்பவற்றின் செயற்பாடுகளும், இராமகிருஷ்ண பரமகம்சரின் ஞானோபதேசங்களும் மக்கள் மத்தியிற் செறிந்தோங்கிய காலம். அத்தகைய செல்வாக்குகளும் யாழ்ப்பாணத்திலும் அழுத்தம் செலுத்தியது இயல்பேயாகும். அவற்றினால் உந்தப்பட்டு செயல்வேகம், அர்ப்பணம், ஒழுங்கமைப்பு என்பன பிரகாசிக்கச் சைவக் கல்வி எழுச்சி பெற்றது.

சைவ பரிபாலன சபையின் செயற்பாடு சைவக் கல்வியின் விஸ்தரிப்புடன் நின்றுவிடாது சைவ சமயப் பிரசார வேலையிலும் பரந்தது. நாவலர் தொடக்கி வைத்த சமயப் பிரசார பிரசங்கங்கள் தொடர்ந்தன. வண்ணார்பண்ணையில் நாவலர் ஆச்சிரம மண்டபம் நிரந்தர பிரசங்க மண்டபமாயிற்று. நாவலர் திட்டமிட்டிருந்தபடி சைவசமயப் பிரசாரகர்கள் பயிற்றப்பட்டு யாழ்ப்பாணப் பிரதேசந் தழுவிய பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. சைவ சமயத்தின் உண்மையினையும் மேன்மையினையும் பரப்பும் தகைமையுடைய பிரசாரகர்கள் உருவாக்கப்பட்டுச் செயலிலும் ஈடுபடுத்தப்பட்டார்கள். மாதகல் சிறீ ஏரம்பையர், பிரம்மசிறீ சங்கர சுப்பையர், கோப்பாய் வேலுப்பிள்ளை உபாத்தியாயர், தாவடி சோமஸ்கந்த பண்டிதர், புலோலி வ. குமாரசுவாமிப்புலவர் ஆகியோர் அவ்வரிசையின் முன்னோடிகளாவர். பிரசாரப் பணிகளை மேலும் சிறக்கச் செய்ய 'இந்து சாதனம்' என்ற பெயருடன் தமிழிலும் 'Hindu Organ' என்ற பெயருடன் ஆங்கிலத்திலும் இரண்டு பத்திரிகைகள் 1889 இல் ஆரம்பிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாநாடுகள், பிரசங்கங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றுக்கூடாக வும், பாடநூல்கள், துண்டுப்பிரசுரங்கள் முதலியவற்றை வெளி யிடுவதன் மூலமும், சைவக் கோவில்களின் புனரமைப்பு வேலை களை ஊக்குவிப்பதன் மூலமும் அச்சபை சைவத்தையும் சைவப் பாரம்பரியத்தையும் வளர்த்து நிலைநாட்டியுள்ளது.

சைவக் கல்வியின் வளர்ச்சியில் சமய இலட்சியமும் தத் துவமும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டமை கருத்திற் கொள்ளத் தக்கது. சேர் பொன்னம்பலம் இராமநாதன் வலியுறுத்தியதைப் போன்று திரிகரண சுத்தியின் பேரில் ஆத்ம சுத்தியைத் தேடும் சாதனமாகப் பள்ளிக்கூடம் கருதப்பட்டது. மெய்ப்பொருளைக் கண்டறிந்து, ஈசனின் நற்றாழ் தொழுது, நாடோறும் கற்றோர் உலகொன்றினை உருவாக்கும் பாதையிலேயே சைவ மறுமலர்ச்சி யாளருடைய சிந்தனை சென்றதெனலாம். அதன் வழியில் சைவ சமய அறிவும் உணர்வும் ஒருங்குசெறிந்து வேரூன்றின.

இவ்விதமாக எழுச்சிபெற்ற சைவக் கல்விப் பாரம்பரியம் வைதீக நெறியில் பழமையிலமிழ்ந்து புதுமைக் கருத்துக்கள் அறிவர்சங்கள் என்பவற்றைத் தன்னுடன் இணைத்துக்கொள்ள வில்லை என்று பொருள் கொள்ளத் தேவையில்லை. அது ஒரு பொருத்தமற்ற சிந்தனையாகவே இருக்கும். நாவலர் காலத்திலி ருந்தே இவ்வுண்மையைக் காணலாம். நாவலருடைய பள்ளிக் கூடங்களில் தமிழ் மூலம் கல்வி வழங்கப்பட்டாலும், அவர் ஆங் கிலத்தை எதிர்க்கவில்லை. பிற மதத் தாக்குதல்களிலிருந்து சைவத் தைக் காப்பாற்றும் பணியில் பலம்வாய்ந்த கருவியாகத் தமிழ் உடனடியாக உதவியது. அதன்மூலம் மக்களுடைய உள்ளங்களைத் தொடக்கூடியதாக இருந்தது. எனினும், ஆங்கிலத்தின் தேவையை யும் அவர் உணர்ந்திருந்தார். 1872 இல் வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கிலப் பாடசாலையை அவர் தொடக்கியது இதனை நிரூபிக்கின்றது.

அரச உத்தியோக மோகமும், அதற்கான வாய்ப்புக்களும் பெரும்பாலானோர் ஆங்கிலக் கல்வியை நாடச் செய்தன. அதற் கூடாக மேற்கத்தைய அறிவியற் கருத்துக்களையும் அறியமுடிந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அந்தக் கவர்ச்சி சைவர்களைக் கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களுக்கு இழுத்துச் சென்றது. அதனைத் தடுப்பதற்கும் சைவப் பள்ளிக்கூடங்களும் ஆங்கிலக் கல்வி, மேற்கத்தைய கல்வி என்பவற்றையும் வழங்கவேண்டியிருந்தது. சைவ சமய விழுமியங்களின் வளர்ச்சி ஆங்கிலக் கல்விக்கோ அல்லது மேற்கத்தைய அறிவியற் கருத்துக்களுக்கோ தடையாக இருக்கவில்லை. பழமையான மரபுகள், உண்மைகள் என்பவற்றைப் பேணிய அதே வேளை, புதிய கருத்துக்கள், இலட்சியங்கள் என்பவற்றை இளஞ் சந்ததியினர் பெறுவது வரவேற்கப்பட்டது. ஆனால், இராமநாதன் அவர்கள் கூறியபடி "அத்தகைய கருத்துக்கள் எமது சிறப்புப் பொலிந்த பாரம்பரிய கலாசாரத்தையும் நாகரிகத்தையும் மாசுபடுத்தாமற் பார்த்துக்கொள்ளும்" வகையிற் செயற்பாடுகள் எச்சரிக்கையுடன் இருந்தன.

காலஞ் சுழன்றும் இன்னும் சைவக் கல்விப் பாரம்பரியம் தலை தூக்கிய வண்ணமே நிலைபெற்றுக் காணப்படுகின்றது என்று கூறலாம். காலத்தின் தேவைகள் அதன் செயல்வடிவத்தில் சிலவற்றை நீக்கி; அவற்றினிடத்தில் புதியவற்றைப் புகுத்தியிருக்கலாம். பள்ளிக்கூடங்களை அரசு பொறுப்பேற்றமை, பாடநூல்கள் அரச கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியீடப்படுதல், அத்தகைய துறைகளில் தொடர்பணியினைத் தேவையற்றதாக்கிவிட்டன. பள்ளிக்கூட மட்டத்தில் சமயபாடத் துறைசார்ந்த கல்வியும் செயற்பாடும் ஒரு புறமும், சமயம் சார்ந்த இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் இன்னொரு புறமும் சமய பாரம்பரியத்துக்கு முட்டுக்கொடுக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

ஆனால், எல்லாம் நிறைவாக இருக்கின்றது என நாம் திருப்திப்பட முடியுமா? பள்ளிக்கூட மட்டத்துக்கு அப்பால் சைவக் கல்விப் பாரம்பரியம் தழைத்து நிற்கின்றதா என்பது நியாய பூர்வமான கேள்வியேயாகும். தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம், திருநெல்வேலி சிவகுருநாதர் குருபீடம் என்பன சமயப் பண்பாடு, அறிவு வளர்ச்சி என்பவற்றில் பணியாற்றுகின்றன. சைவ பரிபாலன சபையும் தனது தொண்டினைத் தொடர்கின்றது. இருந்தும், மனக் குறைகள் இருக்

கத்தான் செய்கின்றன. உயர்மட்டத்தில் செயற்படக்கூடிய நிறுவன அமைப்பு எமக்கில்லையே என்ற அங்கலாய்ப்பு நியாயமானதே. பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் ஆகியோரிடையே செயற்படும் அமைப்புக்களுக்கு இணையானவை எம்மிடையே இல்லை என்ற உண்மை - எவ்வளவு கசப்பானதாக இருந்தாலும், ஏற்கத்தான் வேண்டும்.

இன்றைய காலகட்டம் எம்மைப் பொறுத்தவரை பல வழிகளிலும் இக்கட்டான ஒன்றாகும். சமூக சூழலில் தோற்றும் புதிய நிலைமைகள், தேவைகள் அவற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை வேண்டிநிற்பது யதார்த்தமே. ஆனால், அதற்காகப் பேணப்பட வேண்டியவற்றைச் சமூகம் புறக்கணிக்குமேயானால் அது தனது அத்திவாரத்தையே அழித்துவிடுவதற்கு ஒப்பாகும். தனது பண்பாட்டையும் பாரம் பரியத்தையும் மறப்பவன் ஈற்றில் தானே மறைவான். இது வரலாற்று உண்மை. இதனை நாமும் மறத்தலாகாது. எமது சமயப் பாரம் பரியமும் எமக்குரிய முது சொத்தாகும். அதனைப் பேணி வளர்ப்பது எமது கடமை. எமது பாரம் பரியத்தின் பெருமையும் அது பற்றிய அறிவையும் வழி வழியாக வழங்கவேண்டியது எமது பாரிய பொறுப்பாகும். இளந் தலைமுறையினரிடம் அப்பற்றையும் பணியையும் ஒப்படைத்துச் செயற்படச் செய்யாதுவிட்டால், வரலாற்று மன்றில் நாம் தலை குனிந்தே நிற்கநேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

# இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் சைவக்கல்வியின் நிலை

இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், சைவக்கல்வி யின் வளர்ச்சியினையும் வரலாற்றினையும் நோக்க முற்படுபவர் கடந்துவரும் கால கட்டங்களில் இருபதாம் நூற்றாண்டின் முற் பகுதி முக்கியத்துவம் பெறும் ஒரு பகுதியாகும். யாழ்ப்பாண இராச்சியத்து அரச பரம்பரையினருடைய காலத்தில் காலூன்றி. மேற்கத்திய ஆட்சியாளர் காலத்தில் 'மறையும் நிலையில் மங்கிக் கிடந்த' சைவக் கல்வி மீண்டும் எழுச்சியுற்ற காலம் அதுவாகும். அழிந்தொழியும் நிலையிலிருந்த சைவக் கல்வி புத்துயிர் பெற்று எழுந்த காலமாக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தைக் கொண் டால், அவ்வெழுச்சி சூல் கொண்ட காலம் பத்தொன்பதாம் நூற் றாண்டின் பிற்பகுதியாகும். இக்காலப் பகுதியில் சைவக் கல்வி பெற்ற புத்துணர்ச்சிதான் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு வித்து என்ற வகையில் அதனை நாம் முதலில் நோக்குவது பொருத்தமுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1505 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்துசேர்ந்த போர்த்துக்கீசர், அவர்களையடுத்து டச்சுக்காரர், பின்னர் ஆங்கிலேயர் ஆகியோருடைய ஆட்சிக் காலங்கள் கிறீத்துவ மதகுருமாருடைய மதமாற்று முயற்சிகள் மேலோங்கிய காலங்களாகும். ஒருபுறம் அந்த மிஷனரிமாருடைய ஒழுங்கமைந்த, திட்டமிட்ட பிரசாரம், மறுபுறம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தோருடைய போக்குகள் எல்லாம் சேர்ந்து, சுதேசிய சமயங்களைச் சொந்த நாட்டிலேயே ஒளியிழக்கச் செய்தன. கிறீத்தவ மதக்குழுக்கள் ஏற்கெனவே பள்ளிக்கூடங்களை அமைத்து நடாத்தி வந்த பகுதிகளில் அரசாங்கம் பள்ளிக்கூடங்களை அமைக்கவேண்டிய தேவையில்லை என்று 1831 இல் கோல்புறூக் ஆணைக்குழுவினர் செய்த விதப்புரை நிலைமையை மோசமாக்கியது. யாழ்ப்பாணத்தை பொறுத்தமட்டில் கிறீத்தவப் பாடசாலைகள் தவிர்ந்த, முறைமையான, கல்வி நிலையங்கள் வேறு இல்லாமையால் சைவக் கல்வி பெரும் இடுக்கண்ணுக்கு உள்ளானது.

அந்த இருண்ட காலப்பகுதியில் சைவக் கல்வியைச் சிறிதளவேனும் காப்பாற்றிய பெருமை கோவில்கள், மடங்கள் திண்ணைப்பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றையே சாரும். சைவசமயமும் சைவக் கல்வியும் பல பக்கங்களிலும் இருந்து 'தாக்குதலுக்கு' ஆட்படுத்தப்பட்டாலும் மக்கள் செய்த நற்றவப்பயன் அவற்றை அழியவிடாது பாதுகாத்தது. அத்தகைய சூழ்நிலையிலேயே 'இந்துக்களின் சீர்திருத்த நாயகன்' என்று போற்றப்பட்ட நல்லைநகர் ஆறுமுகநாவலர் தோன்றினார்.

சைவசமயத்தின் இழிநிலை யாழ்ப்பாணத்தில் சமூக மேல் மட்டத்தினரிடையே விழிப்பினை ஏற்படுத்தியது. அவர்கள் இருவகைப் பணிகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டியிருந்தது. ஒன்று கிறீத்தவ மதப்பிரசாரத்தைத் தடுத்து நிறுத்துவது, மற்றையது சைவ சமயக் கருத்துக்களையும், அதன் மேம்பாட்டினையும் மக்களின் மத்தியில் நிலைநாட்டுவது. யாழ்ப்பாணத்தில் சைவசமயச் சூழலில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும் என்ற இயக்கம் 1842 இல் ஆரம்பமாகியது. வைத்திலிங்கச் செட்டியார், முத்துவேலுச் செட்டியார், சிறாப்பர் குருநாத முதலியார், இரகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத முதலியார் ஆகிய 'உயர்குடிப் பிறப்பாளர்கள்' ஒன்று சேர்ந்து, கிறித்தவமதப் பரம்பலைத் தடுத்துச் சைவ சமயக் கல்வியைப் பரப்புவதற்கென ஒரு பாடசாலையை நிறுவினர்.

ஒரு நாட்டினையோ அல்லது ஒரு சமூகத்தையோ அழிவென்னும் இருள் சூழுங் காலங்களிலெல்லாம் இந்த அழிவினின்றும் அதனைக் காப்பாற்ற ஒரு 'தலைவன்' தோன்றுவது வரலாற்று நியதி. யாழ்ப்பாணத்துச் சைவமக்களைப் பொறுத்து இது முற்றிலும் உண்மை ஆகும். அப்படியான தலைவர்களில் ஒருவரே ஆறுமுகநாவலர் அவர்கள் (1822 – 1879). நாவலர் தோன்றிய காலம் யாழ்ப்பாணத்தில் சைவமக்களிடையே முதியவர்கள் கிறித்தவப் பாதிரிமாரின் செயற்பாட்டுக்கு முன்னர் முனைப்பற்றிருந்த காலம். இளஞ் சந்ததியினர் அதே கிறித்தவச் செல்வாக்குக்கு உட்பட்டுத் தம்மையும் தம் பாரம்பரியத்தையும் மறந்திருந்த காலம். அந்நிலைமையில் நாவலர் பல அறைகூவல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சைவசமயத்தில் நம்பிக்கையின் பலத்தை உறுதிப்படுத்தல், பாதை மாறிய இளந்தலைமுறையினரைத் திருத்தித் திருப்பிக் கொண்டுவருதல் என்பன அவற்றில் முதன்மையானவை.

அன்றைய யாழ்ப்பாணச் சமுதாயத்தைப் பிடித்திருந்த அந்த 'நோய்க்கு' நாவலர் கண்ட மருந்து சீர்திருத்திப் புத்துயிரூட்டப்பட்ட சைவசமயப் பிரசாரமும் சைவசமயச் சூழலில் சைவ சமயமரபிலான கல்வி வளர்ச்சியுமாகும். அதற்காக அவர் சைவசமயப் பிரசங்கங்களை நடத்தியும், யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் சைவப் பள்ளிக்கூடங்களை நிறுவியும் நிறுவுவித்தும் பாடுபட்டார். 1847 ஆம் ஆண்டில் வண்ணார்பண்ணை சிவன் கோவிலில் அவருடைய பிரசங்கத் தொடர் ஆரம்பமாகியது. அதனைத்தொடர்ந்து 1848 இல் வண்ணார்பண்ணையில் தொடக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலை அதைப்போன்ற கல்விக்கூடங்கள் பலவற்றின் பரவலான தோற்றத்துக்கு முன்னோடியாக அமைந்தது. கந்தர்மடம், கோப்பாய், பருத்தித்துறை, உடுவில், இணுவில், மாதகல் வேலணை ஆகிய பகுதிகளிளெல்லாம் சைவப் பள்ளிக்கூடங்கள் உருவெடுத்தன. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் வேறு வழியில்லாமல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்தவப் பள்ளிக்கூடங்களுக்குத் தமது பிள்ளைகளை அனுப்ப வேண்டியிருந்த சைவப் பெற்றோருக்கு அப் பள்ளிக்கூடங்கள் வரப்பிரசாதமாய் அமைந்தன.

பள்ளிக்கூடங்களை அமைப்பதில் மட்டுமல்லாமல் பிறமுயற்சிகள்மூலமும் நாவலர் சைவத்தையும் சைவக்கல்வியையும் பேணினார். கோவில்களிலும், சபைகளிலும் சமயப் பிரசங்கங்களையும் விரிவுரைகளையும் நிகழ்த்துதல்; மாணவர்களுக்கு ஏற்ற சமய நூல்களை ஆக்கி வெளியிடுதல்; பொதுமக்களிடையே காணப்பட்ட தவறான கருத்துக்கள் வழக்குகள் என்பவற்றைப் போக்கக் கண்டனப் பிரசுரங்கள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடுதல், வயதில் முதியவர்களுக்குத் தமது இல்லத்தில் கல்வி வழங்குதல் என்பன அவற்றுள் முக்கியமானவையாகும். அவற்றின் மூலம் பொது மக்கள் மத்தியிலே சைவ சமயச் சம்பந்தமான ஈடுபாடு, விழிப்புணர்ச்சி, அறிவு என்பன விருத்தி செய்யப்பட்டன.

நாவலர் காட்டிய வழியில் அவருடைய சீடர்களும் பிறரும் அவரைத் தொடர அதிககாலம் எடுக்கவில்லை. அவருடைய அடியொற்றித் தொண்டியற்றும் பணியில் அவருடைய சுற்றத்தவரும் 'வாரிசுகளும்' துரிதகதியில் ஈடுபட்டனர். நாவலருடைய மறைவுக்குப்பின் அவருடைய இலட்சியங்களைத் தொடர்ந்தவர்களுள் முதலில் முயற்சியெடுத்தவர்கள் 'சைவப் பிரகாச சமாஜிய'த்தினராகும். யாழ்ப்பாண மக்களிடையே நாவலர் முடுக்கிவிட்ட இந்து உணர்வினையும், பேணிய சமய நலன்களையும் தொடர்ந்தும் காப்பாற்றுவது அவர்களுடைய நோக்கமாயிருந்தது. அதனை நிறைவேற்றும் பொருட்டு 'சைவப்பிரகாச சமாஜமும்', 'உதயபானு' பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டன.

நாவலருக்குப்பின் அவருடைய பணியினைத் தொடரும் பாரிய பொறுப்பு அவருடைய மருகனாகிய வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை மீது சார்ந்தது. அவரும், நாவலரது நன்மாணாக்கர்களில் ஒருவரான த. கைலாசபிள்ளை, இளைப்பாறிய நீதிபதி திரு. ந. செல்லப்பாபிள்ளை, நியாயவாதி எஸ். நாகலிங்கம், நியாயதுரந்தரர் வீ. காசிப்பிள்ளை, திரு. சி. த மு

பசுபதிச்செட்டியார் ஆகிய பெரியோருமாகச் சேர்ந்து 29.04.1888 இல் 'யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை' யை நிறுவினர். அதன் தோற்றத்தில் நாவலருடைய செல்வாக்கினை நிரம்பக் காணமுடியும். சபையின் நிறுவுனரில் பலரும் கிறிஸ்தவப் பள்ளிக் கூடங்களில் பயின்று கிறிஸ்தவர்களுடைய பிரசார முறைகளை நன்கறிந்திருந்தனர். அத்துடன் சமகால இந்தியாவில் இந்து சமய மறுமலர்ச்சியின் முன்னணியில் இயங்கிவந்த 'பிரமசமாஜ்' 'ஆரிய சமாஜ்', 'பிரமஞான சபை' ஆகியவற்றின் செயற்பாடுகள் பற்றியும், இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஞானோபதேசங்கள் பற்றியும் நன்கு உணர்ந்திருந்தார்கள். அத்தகைய செல்வாக்குகளினால் உந்தப்பட்டவர்களிடம் எதிர்பார்க்கக் கூடிய செயல்வேகமும், அர்ப்பணமும், ஒழுங்கமைப்பாற்றலும் 'சைவ பரிபாலன சபை' யினரிடம் காணப்பட்டன.

நாவலருடைய சுவடுகளில் செயலாற்ற முனைந்த அச்சபை நாவலருடைய நெடுநாளைய இலட்சியத்தை நிறைவு செய்வதாய் அமைந்தது. சைவத்தையும் தமிழையும் பேணிப்பாதுகாப்பதற்கு ஒரு சபை வேண்டும் என்ற நாவலரது கனவினை அச்சபை நனவாக்கியது. அதன் மகுட வாசகமாயமைந்த ''மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'' என்னும் அடி சபையின் சேவை சமயப் பணிக்கே முக்கியத்துவம் கொடுத்தது என்பதைக் காட்டியது. எனினும் அதன் சமயப்பணியில் கல்வியும் சைவமும் பிணைந்திருந்தமை அதன் நோக்கங்களிலிருந்து புலப்படும். அவை மேல்வருமாறு :-

(அ) வைதிக சமய உண்மைகளையும் கருத்துக்களையும் நாடெங்கும் பிரசாரம் செய்யவல்ல குழுவொன்றினை அமைத்தல்.

(ஆ) சைவர்களின் அரசியல், சமுக, சமய அபிலாட்சைகளை வெளிப்படுத்தக்கூடிய பத்திரிகைகள், மற்றும் இலக்கியம், சமயம், தார்மீகம், விஞ்ஞானம் ஆகிய துறைகள் சார்ந்த நூலகம் ஒன்றினை நிறுவுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) உயர்தர உலகியற் கல்வியினையும் சமயக் கல்வியினையும் போதிக்கும் திறன் உடைய ஆங்கிலப் பாடசாலை நிறுவுதல்.

(ஈ) பத்திரிகை வெளியிடல்.

(உ) பெண்களைக் கற்பித்தல்.

சபையின் பிரசாரப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு 'இந்து சாதனம்' என்று தமிழிலும் 'Hindu Organ' என்று ஆங்கிலத்திலும் இரண்டு பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சைவக்கல்வியின் வளர்ச்சியில் சைவபரிபாலன சபையின் இடம் இன்றைய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அமைப்பு தொடர்பானதாகும். கிறித்தவ பிரசார வலையில் இந்து சைவப் பிள்ளைகளை மீட்பதற்கு தரமான ஆங்கிலக் கல்வியைச் சைவ சமயச் சூழலில் வழங்கவேண்டிய தேவையினை ஆறுமுகநாவலர் நன்கு உணர்ந்திருந்தார். அதற்காக அவர் 1872 இல் வண்ணார் பண்ணையில் ஒரு சைவ ஆங்கில பாடசாலையைத் தாபித்தார். ஆனால் கிறித்தவர்களின் எதிர்ப்பு. அரசு நன்கொடை மறுப்பு ஆகிய காரணங்களினால் ஏற்பட்ட நிதி நெருக்கடிகளின் விளைவாக, அது அதிக காலம் நிலைத்து நிற்கவில்லை. அதன் பின்னர் 1886 இல் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் திரு. வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை என்பவர் 'Native Town High School' என்ற பெயருடன் ஒரு ஆங்கிலப் பாடசாலையை அமைத்தார். அப் பாடசாலையின் முகாமைப் பொறுப்பு 1889 இல் திரு. எஸ். நாகலிங்கத்தின் கைக்கு மாறியது அப்போது 'Town High School' என்ற பெயரில் இயங்கி வந்த அப் பாடசாலை, சைவ பரிபாலன சபையினரால் பொறுப்பேற்கப்பட்டு. 1895 வரை 'Hindu High School' என்ற பெயருடன் செயற்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியாக வளர்ச்சி பெற்றது.

சைவக் கல்வியின் விருத்தியில் 1902 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்துக்கல்லூரியின் அதிகார சபை சிறப்பிடம் பெறுகின்றது. அமைக்கப்பட்டபோது அச் சபை யாழ்ப்பாணம் இந்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியின் அபிவிருத்தியையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. அதன் செயற்றிறமை பலராலும் மதிக்கப்பட்டு வளர்ந்த போது, கொக்குவில், உரும்பிராய், வட்டுக்கோட்டை, காரைநகர், சாவகச்சேரி, தொண்டமனாறு ஆகிய இடங்களிலும் இந்து ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் அமைவுற்று அதனுடன் இணைந்தியங்கும் நிலைமை ஏற்பட்டது. இவ்விணைப்பு சைவக் கல்வி நிறுவனங்களிடையே ஒத்துழைப்புக்கு வழிவகுத்ததன் மூலம் அக் கல்வியின் வளர்ச்சியையும் உறுதிப்படுத்தியது. இந் நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட காரணம் ஒன்றாகவே இருந்தமையினாலும் அதிபர், ஆசிரியர்களைப் பரஸ்பரம் கொடுத்துக் கலந்து மாறியதோடு பொதுப்பரீட்சைகளையும் நடத்தின இதன்மூலம் கிறித்தவப் பாடசாலைகளின் வளர்ச்சி தடுத்து நிறுத்தப்பட்டு சைவக் கல்வியும் வளர்ச்சியுற்றது.

சைவக் கல்வியின் விஸ்தரிப்பில் ஈடுபடுவதோடு நின்றுவிடாமல், சைவ பரிபாலன சபை சைவசமயப் பிரசார வேலையிலும் ஈடுபட்டது. நாவலர் தொடக்கி வைத்த சமயப் பிரசாரப் பிரசங்கங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றன. வண்ணார்பண்ணையில் நாவலர் ஆச்சிரம மண்டபம் நிரந்தர பிரசங்க மண்டபமாயிற்று. நாவலர் கருத்திற்கொண்டிருந்தபடி சைவசமயப் பிரசாரகர்கள் பயிற்றப்பட்டு. யாழ்ப்பாணம் பிரதேசந்தழுவிய பிரசாரங்கள் கிராமந்தோறும் மேற்கொள்ளப்பட்டன. சைவ சமயத்தின் உண்மையினையும் மேன்மையினையும் பரப்பும் தகைமையுடைய பிரசாரகர்கள் உருவாக்கப்பட்டுச் செயலில் ஈடுபட்டார்கள். மாதகல் ஸ்ரீ ஏரம்பையர், பிரம்ம ஸ்ரீ சங்கர சுப்பையர். கோப்பாய் வேலுப்பிள்ளை உபாத்தியாயர், காவடி சோமஸ்கந்த பண்டிதர், புலோலி திரு. வ. குமாரசுவாமிப் புலவர் ஆகியோர் அத்தகைய பிரசங்கங்களின் முன்னோடிகளாவர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் சைவக்கல்வி தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய நிலைமையினை உருவாக்கியவர்களுள் ஒருவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆவர். நாவலர் மறைந்தபொழுது அவருக்குப்பின் சைவசமய எழுச்சியின் தலைநாயகனாக, நாவலராலேயே தேர்ந்தெடுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட தமிழர் தலைவனாக, முதலிடம் பெற்றவர் இராமநாதன். கிறீத்தவர்களுடைய முறையற்ற செயல்களையும் போக்குகளையும் எந்தளவு தீவிரமாக அவர் எதிர்த்தார் என்பதற்கு 1881 ஆம் ஆண்டுக்குரிய சட்ட நிருபண சபையின் பதிவேடுகள் சான்றாகும்.

சைவக்கல்வியின் சிறப்புக்கு இராமநாதன் தனியாளாக ஆற்றிய தொண்டு அவர் நிறுவிய இரண்டு கலைக்கூடங்களிலும் மிளிர்ந்து புலனாகும். 1913 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 20 ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்ட இராமநாதன் இந்துமகளிர் கல்லூரியும், 1921 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 22 ஆம் தேதி தாபிக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரியும் அக்காலத் தேவையைப் பூர்த்தி செய்தன. 'இங்கிலீசு படிக்க வேண்டும்' என்ற எண்ணம் சைவ சமய மக்களைப் பிறமதப் பாதைகளை நாடத் தூண்டும் நிலையைக் கண்ட இராமநாதன் அந்த அபத்தைத் தடுக்கச் செயற்பட்டார். அவர் நிறுவிய இரண்டு கல்லூரிகளும் சைவ சமயச் சூழலில். சைவப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணிய அதே வேளையில், ஆங்கிலக் கல்வியையும் மேற்கத்திய அறிவியற் கருத்துக்களையும் பெறும் வாய்ப்புக்களையும் மாணவர்க்கு நல்கின பழமை மரபுகள் பேணப்பட்டாலும், புதிய கருத்துக்கள், இலட்சியங்கள் என்பவற்றை இளைஞர் கூட்டம் ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை இராமநாதன் உணர்ந்தார். ஆனால் "அத்தகைய கருத்துக்கள் எமது சிறப்புப்பொழிந்த பாரம்பரிய கலாசாரத்தையும் நாகரிகத்தையும் மாசுபடுத்தாமற் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்ற எச்சரிக்கையையும் விடுத்தார்.

இத்தகைய இயக்கங்களும் செயற்பாடுகளும் சைவநலன் விரும்பிகள் பிறரையும் சைவக் கல்விப் பணியில் ஈடுபடச்செய்தன. அவர்களுள் குறிப்பிடத்தக்க இருவர் கந்தரோடை எஸ். கந்தையா உபாத்தியாயரும், தெல்லிப்பழை தெ. ஆ. துரையப்பாபிள்ளை (பாவலர் துரையப்பாபிள்ளை) யும் ஆவர். கந்தையா உபாத்தியாயர் 'கந்தரோடை ஆங்கிலக் கல்விக்கழகம்' என்ற பாடசாலையை (இன்றைய ஸ்கந்தவரோதயக் கல்லூரி) 1894 இல் கந்தரோடையில் தாபித்தார். துரையப்பாபிள்ளை 'மகாஜன ஆங்கில உயர்தர பாடசாலை' என்ற பெயருடன் ஒரு ஆங்கிலப்

பாடசாலையை (இன்றைய மகாஜனாக் கல்லூரி) தெல்லிப்பழை யில் 1910 ஆம் ஆண்டில் தாபித்தார். இவ்விதம் தனிநபர்களும் கல்வித்துறையில் பணிபுரிய முன்வந்தமை அன்றைய யாழ்ப் பாணச் சமுதாயத்தில் சைவக் கல்வியில் காணப்பட்ட விழிப் புணர்ச்சியைக் காட்டுகின்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, பத்தொன்பதாம் நூற் றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கிறிஸ்தவ சமயத்தின் அமுக்கத் திலிருந்து சைவசமயத்தையும் சைவக்கல்வியையும் விடுவித்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதைக் காணலாம். நாவ லரின் வழிகாட்டலைத் தொடர்ந்து, அவருடைய வழியில் வந்த வர்களும், அவருடைய 'வாரிசுகளும்' அவருடைய செயற்பாட் டினால் ஈர்க்கப்பட்டவர்களும், சைவக்கல்வியைப் பேணிவளர்க் கும் முயற்சியில் தத்தம் பங்களிப்பினைச் செய்தனர். அம் முயற்சி கள் ஓரளவு வெற்றியளிப்பனவாக இருந்தாலும், அவற்றின் மத்தியில் ஒரு முக்கிய குறைபாட்டினை அவதானிக்கலாம். கிராமங்கள் தோறும் ஒவ்வொரு மூலைமுடக்கிலும் காலூன்றியிருந்த கிறிஸ்தவ அமைப்புக்களுக்கு நிகராக, அவற்றைச் சமநிலையில் எதிர்த்து நிற்கக்கூடிய, பரவலான செயற்பாட்டு வீச்செல்லையைக் கொண்ட கட்டுக்கோப்பான அமைப்பு சைவசமயிகளிடம் வளர்ச்சியடைந் திருக்கவில்லை. சைவபரிபாலன சபை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் உருப்பெற்றுவிட்டதென்றாலும் அதன் செயற்பரப் பெல்லை குறுகியதாகவே இருந்தது. ஏனைய முயற்சிகள் எல்லாம் தனிநபர் முயற்சிகளாகவே இருந்தன.

அப்படியான ஒரு நிலைமை, அக்குறைபாட்டினைப் போக்கக்கூடிய ஒரு நிறுவன அமைப்பின் 'தோற்றத்தினை அவாவி' நின்றது. அந்தத் தேவையினை நிறைவு செய்வதாகத் தோன்றி வளர்ந்தது. 'சைவ வித்தியாவிருத்திச் சங்கம்'. இச்சங்கத்தின் வரலாற்றுடன் இரண்டறக் கலந்து 'இந்துபோட் இராசரத்தினம்' என்று பெயர் பெற்றவர் மாண்புமிகு எஸ் இராசரத்தினம் அவர் கள். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினை வழிநடத்தி, சைவக் கல்வியினை இருபதாம் நூற்றாண்டில் ஏற்றம் பெறச் செய்த அவருடைய விவேகத்திறனும் தலைமைத்துவ ஆற்றலும் கூரிய விமர்சனத்திற்கு உரியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

# எமது கல்வி

மனித வரலாறு ஆரம்பத்திலிருந்தே சமூக வாழ்வினை அடிப்படையாகக்கொண்டது. நாகரீகத்தின் தோற்றுவாயாக விளங்கும் சமூகவாழ்க்கைமுறை தொடக்கத்தில் மனிதருடைய தேவைகளின் காரணமாக உருவானதாகக் கொள்ளமுடியுமெனினும், இன்றைய மனிதன் தான் வாழும் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருப்பதை ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாததேயாகும். 'மனிதன் ஒரு சமூகப் பிராணி' என்ற கருத்து ஒன்று கூடி வாழ்தல் / செயற்படுதல் என்ற வகையிலே எழுந்த கூற்றெனக்கொள்ளுதல் பொருத்தமுடையதாகும். ஒன்றுகூடிச் சமூக அமைப்பில் வாழத்தொடங்கிய மனிதன் காலப்போக்கில் அச்சமூகத்தின் மரபுகள், வழக்குகள், விழுமியங்கள் என்பவற்றுக்கேற்பத் தனது வாழ்வை அமைத்துக்கொள்ளும் மனிதன் தான் பிறந்து, வளர்ந்த, சமூகத்தின் எல்லைக்குள் கட்டுப்பட்டு வாழ்வதோடு அதன் நோக்கங்கள், இலட்சியங்கள் ஆகியவற்றைப் பேணிப் பரப்பும் கடமையும் கொண்டிருக்கிறான். அத்தகைய தனது கடமைகளையும் பொறுப்புகளையும் மனிதன் உணர்ந்து செயற்படுவதற்கு அவனுக்கு கல்வி இன்றியமையாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் இன்றியமையாத் தன்மை இன்று பலவழிகளிலும், பல மட்டங்களிலும், வற்புறுத்தப்படுவதாக இருப்பினும், அதன் வரலாறு நீண்ட கதையெனலாம். சமூக வாழ்வின் ஆரம்பத்தில் அதில் இடம்பெற்ற மக்கள் ஒவ்வொருவரும் தமக்கென உரிய தனியான தொழிற்பாடுகளை நிறைவேற்றினர். அவற்றுக்கு பொருத்தமான / தேவையான அறிவினையும் ஆற்றலையும் வழங்கும் வகையில் ஆரம்பக் கல்வி முயற்சிகள் காணப்பட்டன. சமூகக் கட்டமைப்பின் மேல்மட்டத்தில் இருந்தவர்களுக்குக் கூடிய / உயர்ந்த தரத்திலான அறிவும் ஆற்றலும் தேவைப்பட்டமையால் அதற்கான முயற்சிகள் கல்வியில் காணப்பட்டன. ஏனைய சமூக உறுப்பினர்கள் தத்தம் தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் அக்காலக்கல்வியில் படிமுறைத் தோற்றத்தை அவதானிக்கலாம்.

மனித சமூக வாழ்வின் தொடக்கத்தில் 'அரசு' என்ற அமைப்பு இன்றுபோலப் பலம் பொருந்தியதாக, இறுக்கமானதாக விளங்கவில்லை. அத்தகைய நிலையில் அரசின் கடமைகளும் இன்றைக்கிருப்பது போல் பல துறைகளிலும் வியாபித்திருக்கவில்லை. கல்வியும் அப்படியான ஒரு துறையாகவே இருந்தது. இன்று, உலகின் எந்த நாட்டினை எடுத்துக் கொண்டாலும், கல்வியை வழங்குவதில் முழுப் பொறுப்பினையும் சுமக்காவிட்டாலும் கணிசமான பொறுப்பினை அரசே ஏற்றுக்கொண்டுள்ளதைக் காண்கிறோம் அன்றைய நிலை அப்படியானதன்று. கல்வியைப் பெற விரும்பியவர்கள் அதனை வழங்கக் கூடியவர்களிடம் சென்று பெற்றனர். அந்த மரபில் 'குரு' என்ற உயர் தரத்தில் வைத்துப் போற்றப்பட்ட ஆசிரியன் தன்னை நாடிவரும் சீடர்களில் கற்பதற்கு வேண்டிய தகுதியும் திறனுமுடையவர்களைத் தெரிந்து அங்கீகரிக்கும் வழக்கு இருந்தது. அங்கிருந்து குருவுக்கும் சீடனுக்குமிடையிலான உறவு நெருக்கமானதாகவும் புனிதத்தன்மையுடையதாகவும் பேணப்பட்டது. அத்தகைய கல்வியைப் பெறுவதில் எம் மக்கள் கண்ணுங் கருத்துமாக இருந்தனர் என்பதை

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்கை நன்றே"

என்ற பாடல் தெளிவாகக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களைத் தெரிவுசெய்து கல்வியை வழங்குவதற்கான அக்காலச் செயற்பாடு ஒருவனுக்கு கிடைக்கும் கல்வியானது அவனுக்குக் கிடைக்கும் ஒரு 'சலுகை' என்று விமர்சிக்கப்படக்கூடியதாகவே இருந்தது. அந்த நிலை இன்று மாறிவிட்டது. ஐ. நா. சபையினரால் பிரகடனப்படுத்தப்பட்டு அதன் சகல அங்கத்துவ நாடுகளினாலும் அங்கீகரிக்கப்பட்ட 'அடிப்படை மனித உரிமைகள்' கல்வியை மனிதனுடை பிறப்புரிமைகளுள் ஒன்றாக வற்புறுத்தியுள்ளது. (மனித உரிமைகள் பிரகடனம், பிரிவு 26). அதற்கிணங்க ஆகக்குறைந்தது ஆரம்பக் கல்வியையாவது பெறுவதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு. அந்தமட்டில் எம்மால் திருப்திப்பட்டுவிட முடியுமா?

கல்வி எமது உரிமை என்று கோஷமிட்டால் மட்டும் போதாது. அந்த உரிமையை நிலைநாட்டுவதற்கு எமக்குச் சில கடமைகளும் உண்டு என்பதை மறுக்க முடியாது / மறக்கக்கூடாது. அவ்வுரிமைகள் நிலைக்கா என்பதை நாம் மறக்ககூடாது. அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் வகையில். அதன் பெருமையையும் பயனையும் உணரமுடியாதவர்கள் மத்தியில் அதனைக் கட்டாயப்படுத்தும் கடமை அரசுக்கு உண்டு எமது நாட்டை எடுத்துக்கொண்டால் 'கட்டாயக் கல்வி' என்பது சித்தாந்தமாகவே இன்றுமுள்ளது. பள்ளிக்கூடத்தில் கல்வி கற்க வேண்டிய பருவத்தினர் அத்தனைபேரும் கல்வி கற்பதை உறுதிப்படுத்தவேண்டியது அரசினுடைய கடமையாகும் அதற்காகத் தனது அதிகாரங்களைச் சட்ட உருவில் பலப்படுத்த வேண்டியது அரசினுடைய பொறுப்பு ஆனால் அது நடைபெறவில்லை. கற்க வேண்டியவர்களைக் கட்டாயப்படுத்திப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி அப்படிச் செல்லாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வழிசெய்யும் சட்ட திட்டங்கள் எதுவும் எம்மத்தியில் இன்று இல்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

கல்வியில் மாணவர்களது ஈடுபாட்டினைக் கட்டாயப்படுத்தும் கடமையை ஏற்கவேண்டியவர்கள் வரிசையில் அடுத்து இடம் பெறுவது சமூகம். மனிதனைத் தனது மரபுகள் / சம்பிரதாயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றால் கட்டுப்படுத்திச் செயற்படுத்தும் சமூகம் அவன்பால் தனக்கும் கடமைகளுண்டு என்பதை மறந்துவிட முடியாது. அத் தகைய கடமைகளுள் கல்வியை உறுதிப்படுத்துதலும் ஒன்று. சமூக அழுத்தங்களுக்கூடாக மாணவர்களது பள்ளிக்கூட வரவினை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பள்ளிக் கூடத்தில் முதலாம் ஆண்டில் சேரும் மாணவன் உரிய காலத்திற்கு முன்னர் பள்ளிக்கூடத்தைவிட்டு இடைவிலகும் நிலை உருவாவதற் குச் சமூகம் பொறுப்பேற்கவேண்டும். அதைத் தவிர்க்கும் / தடுக் கும் வழிமுறைகளைச் சிந்தித்துச் செயற்படுத்த முயற்சிக்க வேண்டும். இப் பொறுப்பில் சமூகம் சிரத்தைகாட்டாவிட்டால் ஈற் றில் பாதிப்புக்குள்ளாவது அதுவேயாகும்.

சமூகத்தினுடைய செயற்பாட்டுக்கு வலுவும் வளமும் கொடுப் பது பெற்றோருடைய கடமையாகும்.

" ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே "

என்று பாடிய பழந் தமிழ் நற்றாயின் தத்துவத்தை நாம் மறந்து விடலாகாது.

" தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல் "

என்பது வள்ளுவர் வாசகம். இப்படியான சிந்தனைகளின் தழுவ லில் எமது செயற்பாடு நிறைவு காணவேண்டும். பிள்ளைகளைப் பெற்று வளர்த்துவிடுவதோடு பெற்றோரின் பங்கு நின்றுவிட முடி யாது. கற்பதற்கு வேண்டிய வாய்ப்புகள், வசதிகள், உந்தல்கள் எல்லாவற்றையும் பிள்ளைகட்கு அளித்தல் வேண்டும். அவற்றோடு கட்டாயத்தையும் கடைப்பிடிக்கலாம்.

இவற்றுக்கு மத்தியில் அடிப்படையிற் காணப்படும் பிரச்சி னையும் ஒன்று உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அன் றைய வழக்கில் கல்வி ஒரு 'தானமாக'க் கருதப்பட்டது. தன்னை நாடிவந்த, தன்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சீடர்கள் அனைவ ருக்கும் முகங்கோணாது. அறிவினை வரையறாது வழங்கினான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய குரு. இன்றோ நாம் கல்வியைத் 'தானஞ் செய்கின்றோமா' என்று கவலைப்படவேண்டிய நிலை நம்மிடையே காணப்படுகின்றது.

'மனிதனை மனிதனாக்குவது கல்வி' என்பது சுவாமி விவேகானந்தர் கூற்று. மனிதனுடைய 'மனிதத்துவம்' மிளிர்வதற்கு அவனுடைய தேவைகள் தீர்க்கப்பட்டு நிம்மதியான வாழ்க்கை வாழக்கூடிய வசதிகள் இருத்தல் அவசியம். உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்று அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய கல்வி ஒன்றினாலேயே அது முடியும். இந்த வகையிலான கல்வியைப்பெறும் ஒருவன் அதன் உச்ச பயனைப் பெறக்கூடிய முறையில் செயற்படுவது இன்றியமையாதது. 'கல்வி கரையில, கற்பவர் நாட்சில' என்பது ஆன்றோர் வாக்கு. அதன் உட்கிடை எமது இன்றைய காலநிலைகளுடன் தொடர்புறவேண்டும். ஹேபேட் ஸ்பென்சர் என்ற கல்விச் சிந்தனையாளர் கருத்து இங்கு பொருண்மையுடையது. 'எமது வாழ்நாள் குறுகியது. அது மட்டுமல்ல. பல விடயங்களில் அதைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே காலத்தை, அறிவைத் தேடுவதில், அதிக உயர்ந்த நன்மையைப் பெறக்கூடிய முறையில் உபயோகப்படுத்த வேண்டும். எனவே தேவையற்ற விடயங்களைக் கற்காது மிக உபயோகமான விடயங்களைக் கற்கவேண்டும். எங்களுக்கும் மற்றவர்க்கும் மிக உயர்ந்த நன்மையைத் தரக்கூடிய அறிவைத் தேடவேண்டும். எங்களைப் பூரண வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதுதான் கல்வியின் பிரதான நோக்கம்' என்பது அவர் கூற்று. பூரண வாழ்க்கையான மனித நடவடிக்கைகளை அவர் ஐந்தாகத் தொகுத்தார். அவை:-

1. நேரடியாகத் தற்பாதுகாப்புக்கு உதவும் நடவடிக்கைகள்.
2. மறைமுகமாகத் தற்காப்புக்கு வேண்டிய – வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் செயல்கள்.
3. பிள்ளைகளை வளர்க்கவும் பழக்கவும் தேவையான செயல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சமூக - அரசியல் தொடர்புகளை நன்முறையிலமைக்கும் நடவடிக்கைகள்.
5. ஓய்வு நேரத்தில் மகிழ்ச்சியும் திருப்தியும் தரும் நடவடிக்கைகள்.

இந்நடவடிக்கைகளுடன் பொருத்தமுடையதாய், அவற்றை நிறைவுசெய்வதற்கு உதவுவதாய் செயற்படும் கல்வியே பொருண்மையுடையதாக இருக்கும். அதுவே வாழ்க்கைப் பொருத்தப்பாடுடையதாகவும் அமையும். இன்று நாம் வழங்கும் கல்வியை இக் கண்ணோட்டத்தில் பரிசீலனை செய்தல் பயனுடையதாகும்.

நாம் அளிக்கும் கல்வியானது அறிவை வளர்ப்பதாக இருப்பது மிகவும் முக்கியமாகும். ஆனால், அந்த அறிவானது வெறுமனே தேக்கக் கருத்துக்களைக் கொண்டதாக இருக்கக்கூடாது. 'ஹுவற்கெட்' என்ற அறிவியலாளர் கூறியதுபோல தேக்கக் கருத்துக்களை (உள்ளத்தில் பெறப்பட்ட, ஆனால் சோதிக்கப்படாத, பயன்படுத்தப்படாத கருத்துக்கள்) கொண்ட கல்வி பயனற்றது மட்டுமல்லாமல், தீங்கையும் விளைவிக்கும். கடந்த காலத்தைப் பற்றிய அறிவு நிகழ்காலத்தில் எமக்கு உதவும் பயனையளிக்கவேண்டும். அறிவினைப் பயன்படுத்தும் கலையை / திறனைப் பெறுவதே கல்வி. அதைச் செய்யாத எந்தக் கல்வியமைப்பும் பயனற்றதேயாகும்.

கல்வியின் வழியில் கலாசார மேம்பாடு உயர்வதாகக் கொள்வது பொதுநியதி. ஆனால், 'கலாசாரம்' என்பதன் பொருள் என்ன? அது எதனைக் குறித்து நிற்கின்றது? விஷயஞானம் மட்டும் கலாசாரமாகாது. சிந்தனையின் ஓட்டம், அழகுணர்ச்சி, உருகும் உள்ளம் என்பவற்றின் கலவையே கலாசாரம் எனலாம். இவையில்லாத துண்டும் துணுக்குமான தகவற் குவியல் கலாசாரத்தை வளர்க்கமுடியாது. எந்தச் சமூகத்தின் எதிர்காலமும் பண்பாடு செறிந்த அடித்தளத்தையே உறுதியாகப் பற்றி நிற்கும். இந்தக் கண்ணோட்டத்தில் நாம் இன்று செயற்படுத்தும் கல்வியின் வெளிப்பாடு எத்தகையதாக இருக்கின்றது என்பது எல்லோரினதும் சிந்தனைக்குரிய அறைகூவலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மாணவர்க்கு அளிக்கப்படும் கல்விக்கும் அவர்கள் அதற்குப்பின்னர் நடத்தப்போகும் வாழ்க்கைக்குமிடையே பொருத்கப்பாடு இருக்கின்றதா என்பது எண்ணிப்பார்க்கவேண்டியதாகும். ஜோண் டுயி, மகாத்மா காந்தி போன்ற சிந்தனையாளர்கள் கல்வி வாழ்க்கைத் தொடர்புடையதாக இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதை நாம் மனதிற்கொண்டேயாகவேண்டும். மாணவர்களது வாழ்க்கையோடிணைந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொள்ளாத கல்வியில் அவர்கள் ஓர் அர்த்தத்தையும் காணமாட்டார்கள். பொருண்மை விளங்காத / இல்லாத பள்ளிக்கூடக் கல்வியில் மாணவர்க்கு நாட்டம் இல்லாமற்போவது இயல்பானதேயாகும். அது மாணவரிடையே இடைவிலகற் பிரச்சினைக்கு ஏதுவாகும் என்பது 1972இன் கல்வியின் புதிய பாதையிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது நினைவுகொள்ளத்தக்கது. இதற்கேற்பக் கல்விப்பொருளைக் கிட்டமிடக்கூடாதா/ திட்டமிட முடியாதா எனப் பொறுப்பிலுள்ளவர்கள் ஏன் சிந்திக்கக்கூடாது?

இத்தொடர்பில் கலைத்திட்டம் மத்திய மட்டத்தில் தீர்மானிக்கப்படுவதன் பொருத்தப்பாட்டைச் சிந்தனையிற்கொள்வது நன்று. கல்வியை வழங்குவதான செயற்பாட்டில் அரசு பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் என்ன வகையிலான கல்வி வழங்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அரசுக்கே இருக்கவேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்படுவதுண்டு. பொதுக் கொள்கைகள், இலக்குகள், தரங்கள் என்பன கட்டாயமாக உறுதிப்படுத்தப்படவேண்டும். அதற்குரிய அமைப்பு 'அரசு' தான் என்பதை மறுக்கமுடியாது. ஆனால். அதற்குமப்பால் வழங்கப்படும் கல்வியின் பொருளடக்கத்தை முடிவுசெய்வதற்கு உள்ளூர்த் தேவைகளையும் நிலமைகளையும் கருத்திற்கொள்வது வரவேற்றத்தக்கது. இதற்குத் தேவையான தலைமைத்துவமும் அதன் அதிகார அமைப்பும் உள்ளூர் மட்டத்தில் இருக்கவேண்டும். அதிகாரப்பரவலாக்கம், பன்முகப்படுத்தல் என்றெல்லாம் பேசப்படும் இந்நாட்களில் இது நியாய பூர்வமான ஒரு கருத்து என்பதை எவரும் மறுக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# ஆசிரியரின் பல்வகைத் தோற்றங்களும் செயற்பாடுகளும்

மனித இனத்தின் வளர்ச்சியில், வரலாற்றில், புதுப்புது அனுபவங்களுக்கூடாக மனிதன் பெற்ற புதிய அறிவு அவனை ஒவ்வொரு கட்டத்திலும், முன்னரிலும் பார்க்க, ஒருபடி முன்னெடுத்துச் சென்றுள்ளது. அந்த அனுபவமும் அறிவும், அன்றுதொட்டு, சுயமாகவோ அல்லது பிறருடைய உதவியுடனோ பெறப்பட்டன என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். அத்தகைய செயற்பாடே 'கல்வி' என்றும், அதன் பயனே 'கற்றல்' என்றும் கணிக்கப்பட்டது. இக்கல்வியின் பெருக்கத்திலும் பெறுமானத்திலும் நடுநாயகமாக விளங்குபவன் ஆசிரியன். காலத்துக்கூடான கல்வியின் பரிணாம வளர்ச்சியில் ஆசிரியனுடைய பங்களிப்பும் பல்வகை மாற்றங்களுக்குட்பட்டிருப்பதைக் காணலாம்.

ஒவ்வொரு நிலையிலும் ஆசிரியன் செய்த/செய்கின்ற கருமத்தின் தன்மையும் தாற்பரியமும் வேறுபட்டுக் காணப்படும். இவ்வித ஆசிரியத் தொழிலைச் செய்கின்றவன் ஒருவனேயானாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச் செயற்பாட்டின் வேறுபட்ட அம்சங்களினடிப்படையில் அவனுடைய தோற்றமும் வேறுபடுகின்றது. ஒரு நாடகத்தில் பங்கேற்கும் ஒரு நடிகன் ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களையேற்று நடிக்கும் போது தோற்றங்கள் வேறுபடுவதைப்போல ஆசிரியனிடத்திலும் பல்வகைத் தோற்றங்களைக் காணலாம்.

சமூக வளர்ச்சியின் ஆரம்பகாலத்தில் மனிதன் தனக்கு வேண்டிய அறிவினைப் பெறுவதற்கு. அதனை வழங்கக்கூடிய, ஆசிரியனைத் தேடி நாடிச் செல்வது வழக்கமாயிருந்தது. அன்றைய நிலையில், பிறருக்கு வேண்டிய அறிவினை வழங்குந் தகைமையுடையவராக மதகுருமாரே காணப்பட்டனர். மேலைத்தேயச் சமூகமாயிருந்தாலென்ன, கீழைத்தேயச் சமூகமாயிருந்தாலென்ன இதே நிலை தான் காணப்பட்டது. முன்னைய காலகட்டத்தில், சமுதாயத்தின் வளர்ச்சியின் ஆரம்ப நிலையில், தேவையான அறிவை வழங்குவது மட்டுமல்லாமல், சமுதாயத்தைச் சரியான பாதையிற் கொண்டு செல்வதற்குவேண்டிய வழிகளையும் காட்டவேண்டியிருந்தது. அதற்கேற்ற போதனைகளையும் செய்தவர்கள்/செய்யக்கூடியவர்கள் மதகுருமாராக இருந்தமை பொருத்தமானதாகவே இருந்தது. அதன் வழியில் ஆசிரியன் 'குரு' என்று உருப்பெற்றான். 'குரு' என்ற நிலைப்பாட்டில் மாணவருக்கு உபதேசஞ் செய்வது முக்கிய அம்சமாக இருந்தது. இன்றும் ஆசிரியன் 'குரு' என்று அழைக்கப்படுவதும், கற்பித்தல் என்ற செயற்பாடு 'போதனை' என்று அழைக்கப்படுவதும் இங்குப் பொருத்திநோக்கத்தக்கது.

ஆசிரியனுடைய கடமைக் கூறுகளுள் முக்கியமான இடத்தை வகிப்பது 'கற்பித்தல்' என்று கொள்கிறோம். கற்பித்தற் செயற்பாட்டுக்கூடாக புதிய அறிவு ஆசிரியனிடத்திலிருந்து/ஆசிரியன் மூலம் மாணவருக்கு கிடைக்கின்றது. அவ்விதம் வழங்கப்படுகின்ற அறிவு காலத்தோடொத்ததாகவும் காலத்துக்கேற்றதாகவும் இருத்தல் அவசியம் அப்படி இல்லாமற்போகுமேயானால், அளிக்கப்படுகின்ற கல்வி எவருக்கும் பயனற்றதாகிவிடுவது மட்டுமல்லாமல் அதற்குரிய வரவேற்பும் குறைந்துவிடும்.

காலத்திற்கேற்ற கல்வியை வழங்குவதற்கு அக்கல்வியை வழங்குபவர் அதற்கேற்ற அறிவைக்கொண்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, ஆசிரியன் தனது கல்வியறிவினைத் தொடர்ந்து புதுப்பித்துக்கொள்ளுதல் வேண்டும். ஆசிரியப் பணியானது இருளை அகற்றும் விளக்கொளிக்கு ஒப்பிடப்படுவதுண்டு. விளக்கின் ஒளி இருளை அகற்றவேண்டுமாயின் அவ் விளக்குத் தொடர்ந்து சுடர்விட்டு எரிதல் அவசியம். அதற்கு, அச்சுடரினை வளர்க்கும் நெய் தொடர்ச்சியாக ஊட்டப்படுதல் வேண்டும். அதேபோன்று, மாணவரிடையே அறியாமை என்னும் இருளை அகற்றுவதற்கு ஆசிரியன் என்னும் விளக்கு 'அறிவு' என்னும் நெய் தொடர்ந்தும் வார்க்கப்படவேண்டும். ஒரு கால் தான் பெற்ற அறிவோடு ஆசிரியன் திருப்திப்பட முடியாது. அவன் எப்போதும் கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும். இவ்விதம் தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்கும் ஆசிரியனிலே 'மாணவன்' என்ற தோற்றப் பொலிவையும் காணலாம்.

ஆசிரியனுடைய வழமையான செயற்பாடு மாணவனுக்குத் தேவைப்படுகின்ற கல்வியினை வழங்குவதாகும். அம் முயற்சியில் வேறுபட்ட நிலைப்பாடுகளைக் காணக்கூடியதாக இருக்கும்; சாதாரண நிலையில் மாணவருக்குத் தேவையான தகவல்கள், தரவுகள் என்பவற்றைத் தேடித் திரட்டி வழங்குபவனாக ஆசிரியன் காணப்படுகின்றான். நூல்களின் அடிப்படையில் மாணவனுக்கு வேண்டிய அறிவினை ஒழுங்குபடுத்தி அவன் வழங்குகின்றான். அத்தோடு, அவனுடைய கற்பித்தலிலே முழுமையாகத் தங்கிநிற்கும் நிலை மாணவர்கட்கு ஏற்படுகின்றது. இதுவே கற்பித்தல் தொடர்பான ஆசிரியனது பாரம்பரிய நிலையாகும்.

கற்பித்தற் செயன்முறை தொடர்பாகக் காலத்துக்கூடாக ஏற்பட்ட வளர்ச்சிகளும் மாற்றங்களும் இந் நிலையில் இன்று புதிய பொலிவினை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய வழக்கில், மாணவர் ஆசிரியரில் மட்டுந் தங்கியிராது, சுயமாகக் கற்கும் நிலையே பெரிதும் வேண்டப்படுகின்றது. இதில் ஆசிரியருக்கு பெரும் பங்கு உண்டு. தனது கற்பித்தல் கடமைக்கூற்றுடன் மாணவருடைய சுய கற்றல் முயற்சிகளை ஒழுங்கமைப்பது, சமுதாயத்தில் காணப்படுகின்ற வேறு கற்றல் மூலங்களை உச்ச அளவிற் பயன்படுத்தச் செய்தல் என்பவற்றில் ஆசிரியனுடைய கவனம் அதிகம் செல்லவேண்டியுள்ளது. மாணவர் தாமாகக் கற்பதில் ஈடுபடுவதற்கு வேண்டிய வச

திகளை ஆக்கிக்கொடுத்தல், அதில் அவர்களை ஊக்குவித்தல் ஆகிய பொறுப்புக்கள் ஆசிரியனைச் சார்ந்தவை. மாணவர்கள் எதிர் கொள்ளுகின்ற பிரச்சினைகள் / தடைகள் என்பவற்றைக் கண்டு அகற்றுவேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவது ஆசிரியனுடைய பணியாகும். இவ்விதமான பணியில் ஆசிரியனுக்கும் மாணவனுக்குமிடையிலான தொடர்பாடல்கள் புதிய பரிமாணத்தைப் பெறுகின்றன. இம் முயற்சிகளில் நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாட்டைக் காணலாம். இந் நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பற்றிய அறிவும் அவற்றைப் பயன்படுத்தும் திறனும் கொண்ட ஆசிரியன் 'நிபுணன்' என்ற தோற்றத்தைப் பெறுகின்றான். இந்நிபுணத்துவ நிலையிலிருந்தே ஆசிரியன் தனது மாணவர்க்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குகின்றான். மாணவர் தமது செயற்பாட்டின் போது, தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகட்குத் தம்மால் வழிகாண முடியாத வேளைகளில், அணுகக்கூடிய 'ஆலோசகனாக'த் திகழ்வது ஆசிரியனுடைய தோற்றத்தின் பிறிதொரு காட்சியாகும்.

கற்பித்தல் தொடர்பான செயற்பாடுகளில் ஆசிரியனுடைய பங்களிப்புக்கள் காலத்துக்குக் காலம் வளர்ந்து, விரிந்து வந்துள்ளன. வகுப்பறையினுள் கற்பித்தல் தொடர்பாகச் செயற்படுவது மட்டுமல்லாமல், அங்கு இடம்பெறும் கற்றல் / கற்பித்தல் செயல்களுக்கு வேண்டிய விடயத்தை / உள்ளடக்கத்தைத் தயாரிப்பதிலும் ஆசிரியன் கூடிய பொறுப்பினை ஏற்கும் நிலை இன்று உருவாகியுள்ளது. கலைத்திட்ட அபிவிருத்தி, பாட நூலாக்கம் போன்ற இத்தகைய செயற்பாடுகளில் ஆசிரியன் இன்று காத்திரமான பங்கினை ஏற்றுள்ளான். இவை தொடர்பான முன்னைய நிலை எல்லாப் பொறுப்புக்களும் முடிவுகளும் மேல்மட்டத்திலேயே எடுக்கப்படுவதாக இருந்தது. அம்முடிவுகளை நடைமுறைப் படுத்துவதாகவே ஆசிரியருடைய செயற்பாடு காணப்பட்டது. வளர்ச்சிப்படியிலான இன்றைய நிலையில், ஆசிரியன் பெற்றுள்ள புதிய பொறுப்பும் பங்கும் அவனுடைய தோற்றத்தில் ஒரு புதுக் கோலத்தைக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கால நடைமுறையில் மாணவருடனான ஆசிரியனுடைய தொடர்புகளில் காணப்படும் புதிய உறவு நிலைகள் மூலம் ஆசிரியனுடைய தோற்றத்திலும் புதிய வரன்முறைகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆசிரியன் மாணவனிடமிருந்து தூரவிலகி நின்ற முன்னைய நிலைக்கும் இன்று காணப்படுகின்ற, வரவேற்கப்படுகின்ற, 'நண்பன்' போன்ற நெருங்கிய நிலைக்கும் வேறுபாடு சுட்டிக்காட்டத்தக்கது. மாணவர்களுடன் அன்பாகவும் அன்னியோன்யமாகவும் பழகும் வழக்கு ஆசிரியனுக்குப் பல அரிய வாய்ப்புக்களை வழங்குகின்றது அதனால் ஏற்படும் நெருக்கம் இருசாராரும் ஒருவரையொருவர் புரிந்துணரும் தன்மையையும், ஒருவர் மற்றவர் மீது நம்பிக்கைவைக்கும் தன்மையும் வளர்க்கும். நட்பு நிலை என்று பேசும்போது ஆசிரியன் தனக்குரிய உயர்நிலையினின்றும் இறக்கப்பட்டு விடுவானோ என்று பயப்படத்தேவையில்லை. மாணவருடன் நட்புபூண்டு பழகுவது ஆசிரியனுக்கிருக்கும் மதிப்பைக் குறைக்கத் தேவையில்லை ஆசிரியனுடைய நடத்தையின் இயல்பைப் பொறுத்து அவனுக்குரிய மதிப்பும் மரியாதையும் தொடர்ந்துமிருக்கும். பாரம்பரியமாக ஆசிரியனுக்கிருந்த அதிகாரம் காலடைவில் நலிந்துள்ள யதார்த்த நிலையினைக் கருத்திற் கொண்டு இப்புதிய நிலைகளை நோக்குதல் பொருத்தமுடையதாகும். நண்பன் என்ற உறவு மாணவர்களுடைய தேவைகளை நன்கறிந்து அவற்றுக்கேற்ப உதவும் சந்தர்ப்பத்தையும் அளிக்கும் என்பதும் நினைவிற்கொள்ளத்தக்கது.

'வழிகாட்டி' என்ற உருவில் ஆசிரியன் பண்டுதொட்டுச் செயற்பட்டு வந்துள்ளான். இன்று அவ்வழிச் செயற்பாடு இன்னும் பெருகியுள்ளமை நோக்கத்தக்கது. அவ்விதமான வழிகாட்டல்கள் கல்வி தொடர்பானதாகவோ / தொழில் தொடர்பானதாகவோ / வாழ்க்கை தொடர்பானதாகவோ இருக்கலாம். இவற்றுள் எதற்காக வழிகாட்டினாலும் ஆசிரியனுடைய செல்வாக்கு கணிசமானது. ஆசிரியன் மாணவருடைய நம்பிக்கைக்குரியவனாக இருக்கும் பட்சத்திலேயே அவன் காட்டும் வழியினை மாணவர் தயக்கமின்றித் தொடர்வர். இத்தொடர்பில், ஆசிரியனுடைய 'நண்பன்' 'வழிகாட்டி' என்ற இரு தோற்றங்களும் ஒன்றோடொன்று பிணைந்துள்ளன என்று கொள்ளுதல் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூட மட்டத்தில் ஆசிரியனுடைய செயற்பாட்டு அடிப் படையிலான தோற்றங்களுள் ஒழுக்கக் கட்டுப்பாடு தொடர்பான உருவும் இடம்பெறுகின்றது. ஆசிரியன் என்னும் பதம் குற்றங்களை அகற்றுபவன் என்று (ஆசு + இரியன்) பொருள் பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இக் கண்ணோட்டத்தில் மூன்று நிலைகளைச் சிந்திக்கலாம். முதற்கண் 'சட்டவரைஞர்' போன்ற தோற்றம். பள்ளிக்கூடத்தில் பொதுப்படையாகவும், வகுப்பறையிலும், மாண வர்கள் எவ்விதம் ஒழுகவேண்டும் என்ற நடைமுறை விதிகள் ஆக்கப்படுவது வழக்கம். அத்தகைய விதிகள் பெரும்பாலும் பாரம் பரியமாக இருந்து வருபவை எனக் கொண்டாலும் அவற்றை ஆக்குவதில் ஆசிரியனுடைய பங்களிப்புக் கணிசமானது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

விதிகளை ஆக்குவதோடு ஆசிரியனுடைய செயற்பாடு நின்று விடுவதில்லை. அவை அனுசரிக்கப்படுகின்றனவா / மீறப்படுகின் றனவா என்பதைக் கண்காணிக்கும் கடமையும் அவனுக்குண்டு. சமூக வாழ்வில் மக்களிடையே சட்டத்துக்கு மதிப்பை வளர்க்கும் / நிலைநாட்டும் வகையில் காவற்றுறையினர் இயங்குவதுபோலப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியன் இயங்குகிறான். இவ்விதம் கூறும் போது எங்கே, யார் பிழை விடுகிறார்கள் என்று தேடித்திரிவது என்பதல்ல. ஆசிரியன் தன்னுடைய செயற்பாட்டின் மூலம், குற்றம் இழைப்பவர்களைக் கண்டுபிடிக்கும் அதேநேரம், விழிப்புடனும் பொறுப்புணர்ச்சியுடனும் செயற்படுவதன் மூலம், குற்றங்கள் இடம் பெறுவதையே தவிர்க்கலாம். 'பொலிஸ்காரன்' போன்ற இத் தோற்றம் மாணவர் மத்தியில் ஆசிரியனைத் தூரவிலக்கிவைக்கும் மனோபாவத்தை உருவாக்கும் 'ஆபத்து' ஏற்படலாம். எனினும், இந்த வழியில் வருமுன் காக்கும் முயற்சி பள்ளிக்கூட வாழ்வில் சுமுக மான சூழ்நிலையை நிலைபெறச் செய்யும் என்பது மறக்கமுடியாது.

மாணவர்கள் மட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற நடைமுறை கள் தொடர்பாகக் காணப்படுகின்ற பிறழ்வுகளைக் களையவேண் டியது ஆசிரியனுடைய கடமையுமாகும். குற்றம் இழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் குற்றவாளி தண்டிக்கப்படுவது தவிர்க்கமுடியாதது மட்டுமல்ல, அவசியமுமாகும். தண்டனைகள் பல்வேறுபட்டவையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம். குற்றத்தின் தன்மையைப் பொறுத்தே தண்டனையின் தன்மையும் அமையும். பள்ளிக்கூடம் என்ற நிறுவன அமைப்பு நிலையில் தண்டனையை வழங்கும் அதிகாரம் பொதுவாக அதன் அதிபருக்கு உரியதாகக் காணப்படுகின்றது. ஆனால், நாளாந்த அடிப்படையில், வகுப்பறை மட்டத்தில், இவ்விதமான செயலை மேற்கொள்பவர் ஆசிரியரேயாகும். குற்றவாளி என முன்கொண்டு வரப்படுபவனை விசாரணைசெய்து பொருத்தமான தண்டனையை விதிக்கும் நிலையில் ஆசிரியனுடைய தோற்றம் 'நீதிபதி' எனக் கொள்ளத்தக்கது.

நீதிபதி என்ற முறையில் ஆசிரியனுடைய நடத்தையை யொட்டிச் சில எதிர்பார்ப்புக்கள் உண்டு. எதுவிதமான விருப்பு/ வெறுப்புக்கள், பக்கச்சாய்வுகள் இல்லாமல் "சமன் செய்து சீர் தூக்கும் கோல்" போன்றதாக ஆசிரியனுடைய அணுகுமுறை இருத்தல் வேண்டும். அது மட்டுமல்லாமல், தனது நடுநிலைபற்றி மாணவர் தன்னிடத்து முழுமையான நம்பிக்கைகொள்ளும் வகையில் ஆசிரியனுடைய நடத்தை இருத்தல் வேண்டும் எந்தக் கட்டத்திலாவது அந்த நடுநிலைமை கேள்விக்குரியதாகி விட்டால் ஆசிரியனுடைய தீர்ப்புக்கள் அனைத்தும் சந்தேகக் கண்கொண்டே நோக்கப்படும். அந்த நிலை உருவாக இடங்கொடுத்தால் மேற்கொண்டு ஆசிரியன் என்ன செய்யினும் அது பயனற்றதாகவே முடியும்.

ஆசிரியன் பள்ளிக்கூடத்தில் தனது வேலைகளைச் செய்யும் போது தனிநபராகவும், குழு அங்கத்தவராகவும் இயங்குகின்றான். தனிநபர் என்ற வகையில் அவன் தனது கடமையை, அக்கடமையின் தன்மைக்கேற்ப, தான் வகுத்துக்கொள்ளும் வழியில் நிறைவேற்றுகிறான். அதில் பிரச்சினை எதுவும் எழுவதற்கு நியாயமில்லை. ஆனால், குழுவில் ஓர் அங்கத்தவன் என்ற நிலைமை வேறு. குறிப்பிட்ட நிறுவனத்தில் குறிப்பிட்ட தொழிலில் தனி ஒருவன் மட்டும் ஈடுபடுவதில்லை. வேறு ஆட்களும் அதில் பங்கேற்கிறார்கள். அப்போது ஒருவருடைய செயற்பாடு இன்னொருவருடைய செயற்பாட்டில் தாக்கத்தை விளைவிப்பதாக, பிறருடைய செயற்பாட்டின் தாக்கத்துக்குள்ளாவதாக, அமைவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு தனி நபர் என்ற நிலைப்பாட்டுக்குப் பதிலாகக் குழுவின் அங்கத்தவன் என்ற நிலைப்பாடு மேலோங்குகின்றது. குழுவின் அங்கத்தவன் என்ற அடிப்படையில், ஆசிரியன் பரந்த அளவிலான கூட்டுச் செயற்பாட்டினை அங்கீகரிக்கவும், அத்தகைய கூட்டு முயற்சியில் ஈடுபடவும் நேரிடுகின்றது. சக ஆசிரியர்களுடனான கூட்டுச் செயற்பாட்டின் மூலம் உருவாகும் ஒரு குழு என்ற உணர்வும் உறவும் அவர்களுக்கிடையிலான தொடர்புகளிலும் மாற்றத்தைத் தோற்றுவிக்கின்றது. இதன் பயனாக, ஆசிரியர்களுக்கிடையிலான தனியார் உறவுவழிகளிலும் மாற்றங்கள் புகுந்துள்ளன. இன்றைய யதார்த்த நிலை இதுதான். ஆசிரியத் தொழிலில் குழுவாகச் சேர்ந்து, குழுவுடன் சேர்ந்து இயங்காத / இயங்கவிரும்பாத எவரும் அத்தொழிலில் வெற்றி காண்பது இன்று கடினமாகிவிட்டது.

ஆசிரியர் குழாத்தில் அங்கத்தவன் என்ற நிலையில் ஆசிரியன் வகுப்பறைக்குள் மட்டும் முடங்கியிராமல் அதற்கும் வெளியே தனது செயற்பாட்டினை விரிக்கும் நிலை அண்மைக் காலங்களில் பெருகியுள்ளது. ஒரு காலத்தில் கலைத்திட்டத்தினால் வகுப்பறைக்குள் மட்டுப்பட்டிருந்த ஆசிரியனுடைய பணிகள், கலைத்திட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகள் என்ற பாம்பலுக்கூடாக, இணைக் கலைத்திட்டப் பணிகள் என்ற திசையில் பரவுவதை இன்று காணலாம். இவற்றின் பாதையில் ஆசிரியனுடைய பயணம் பள்ளிக்கூடத்தின் சேவைகளில் தொடர்ந்து செல்வதையும் காணலாம் இச்சேவைப் பயணம் ஆசிரியனைச் சமூகத்தின் மத்திக்கு இழுத்துச் செல்லுகின்றது.

பண்டு தொட்டு ஆசிரியனுக்குச் சமூகத்தில் தனி இடமும் தனி மதிப்பும் இருந்து வந்துள்ளன என்பதை எல்லோரும் அறிவர். மக்கள் மத்தியில் மதியூகியாக மிளிர்ந்த ஆசிரியன் எல்லோராலும் மதிக்கப்பட்டது மட்டுமல்லாமல் உதாரண புருஷனாகக் கொள்ளவும் பட்டான். அன்றைய சமூகத்தின் பண்பாடு, பாரம்பரியம், விழுமியம் என்பவற்றைப் பேணிப் பாதுகாப்பவனாகவும் ஆசிரியன் விளங்கினான். காலத்தின் சுழற்சிக்கூடே வளர்ச்சியடைந்துள்ள அறிவு, சமூக உறவுகள் என்பன சமூகத்தில் அவற்றுக்கிணையான மாற்றங்களின் தேவையை உருவாக்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரம் வளருகின்ற மாற்றங்கள் எதிர்மறையான விளைவுகளை உருவாக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டிய தேவையுமுண்டு. இவை எல்லாவற்றிற்கும் ஈடுகொடுக்கும் 'சமூக இணைப்பாளனாக' இன்றைய ஆசிரியன் உருவெடுக்கும் காட்சியை நாம் காண்கிறோம்.

மாற்றங்களின் அடிப்படைக்குத் தேவையான மனப்பாங்கு மாற்றங்களைத் தோற்றுவிக்கும் சாதனமாக / ஊடகமாக ஆசிரியன் செயற்படுவது இன்றைய அவசிய தேவையாகும். அந்த தேவையை நிறைவு செய்யும் சமூக சேவகத்தன்மையை நிரப்பும் அதேவேளை, புதிய பாதையில் சமூகத்தை நடத்திச்செல்லும் தலைவனாகவும் ஆசிரியன் விளங்குகிறான். மாற்றங்கள் உரிய முறையில் இடம்பெற்று திசைதவறாமல் நேரிய நெறியில் செல்வதை உறுதிப்படுத்துவதற்குத் தரமான, தகுதியான தலைமை தேவை. சமூக அமைப்பிலும் செயற்பாட்டிலும் காணப்படும் ஆளணியினர் அனைவருள்ளும் அத்தலைமைத்துவத்தை வழங்கும் பொறுப்பு ஆசிரியனுக்கே உண்டு என்பதை எவரும் மறுப்பதரிது. இச்செயற்பாட்டின் வழியாக 'பாரம்பரியத்தின் பாதுகாவலன்' என்ற ஆசிரியனின் தோற்றம் இன்று 'மாற்றத்தின் முகவர்' என்று புதுப்பொலிவு பெற்றிருப்பதைக் காணலாம்.

மேற்காணப்பட்ட தோற்றங்கள் அனைத்துக்கும் வேறுபட்டதாக, இலட்சிய நோக்கில் அவற்றுடன் முரண்படுவதாக, ஒரு புதிய தோற்றம் எம் மத்தியில் அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ளது. அது 'பிரத்தியேக வகுப்பு / தனியார் வகுப்பு நடத்துனன்' என்பதாகும். இத்தனியார் வகுப்புகளில் ஏற்பட்டுள்ள பெரும் மோகம் கிராமங்கள் பட்டினங்கள் எங்கும், மூலை முடுக்குகளெல்லாம் காட்சியளிக்கும் நிலையங்களினால் எடுத்துக் காட்டப்படுகின்றது. இவற்றுக்குச் சார்பாக முன்வைக்கப்படும் வாதம் எதுவும் பொருத்தமானதாகவோ / ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவோ இல்லாமை கவனத்துக்குரியது. ஓரளவுக்கு வாதத்துக்காக ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆசிரியர்களுடைய வேதனப் பற்றாக்குறையை நிறைவு செய்யும் ஒரு வழி என்பதுவே. இதுகூட ஆசிரியத்தின் இலட்சியத்துடன் முரண்படுவதாகவே அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியம் என்பது ஓர் உன்னதமான, உயர்ந்த சேவை இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட, வாண்மை என்று போற்றப்படுவது. ஆதிகாலத்தில் கல்வியை ஒரு தானமாகவே கருதினார்கள். அன்று ஆசிரியனுக்கு வேதனம் வழங்குவது என்ற எண்ணம் இருக்கவில்லை. பதிலாக, கல்வியை நிறைவுசெய்து வெளியேறும் மாணவன் தனது ஆசிரியனுக்கு நன்றி செலுத்தும் வகையில் குரு தட்சணை வழங்கும் மரபே இருந்தது. அந்தச் சிந்தனை இன்று 'பிழைக்கும் வழி' என்று பிறழ்ந்துவிட்டமை வேதனைக்குரிய ஒன்றேயாகும். "இத் தொழிற்பாடு இன்று சமூக மட்டத்திலும் கல்வியுலகிலும் தோற்றுவித்திருக்கும் குழப்பநிலையைச் சீர் செய்வது இயலாது" என்று அங்கலாய்க்க வேண்டிய அவலநிலையைக்கண்டு யாரும் அக்கறைகொள்ளாமல் இருக்கமுடியாது.

ஆசிரியன் என்ன தோற்றத்தில் காட்சியளித்தாலும் அவனுடைய கடமை தன்னிடத்து ஒப்புவிக்கப்படுகின்ற மாணவ சமுதாயத்தின் நலனைக் கருத்திற்கொண்டு அதற்கேற்பச் செயற்படுவதேயாகும். ஆசிரியனுக்கும் மாணவனுக்குமிடையில் ஏற்படும் தொடர்பு வேறு எவருடைய தலையீட்டுக்கும் உட்படாத / உட்படக்கூடாத ஒன்றாகும். அது மனித உயிர்களுக்கிடையே உருவாகும் நெருக்கமான ஒரு தொடர்பு. அத் தொடர்புக்கூடாகச் செயல்வடிவம்பெறும் பரிசோதனை தமக்கெனத் தனித்துவத்தைக் கொண்ட ஆசிரிய – மாணவ, பங்காளிகளின் முயற்சியேயாகும். அதன் வெற்றி ஆசிரியன், தனது சொல்லாலும் செயலாலும், தனது மாணவரிடையே ஆர்வம், நம்பிக்கை, மதிப்பு என்பவற்றை வளர்க்கும் திறனில் தங்கியுள்ளது. அதுவே ஆசிரியத் தொழிலின் உயிர்நாடி என்பது மிகையன்று. அது பயன்நிறைந்து பொலிவுடன் பரிணமிக்கப் பங்காற்றவேண்டியது எமது பொறுப்பும் கடமையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# கல்வியில் கடமையும் அர்ப்பணமும்

இவ்வுலகில் சமூகப் பிணைப்பில் ஒன்றுகூடி வாழும் மனிதர் தத்தமக்குரிய தேவைகளைப் புறக்கணித்து வாழ்வதில்லை/வாழ முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை நிறைவு செய்வதில் மட்டும் திருப்திகாண முடியாது என்பதையும் மறக்க முடியாது. மற்றவர்களுடன் சேர்ந்து வாழ எத்தனிக்கும்போது அவர்களுடன் பொருந்தும் வகையில் செயற்படவேண்டியது இன்றியமையாததாகும். அந்த நிலையில் ஒவ்வொரு மனிதனிடமும் சில கடமைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அவற்றைச் சரிவர நிறைவேற்றுவதிலேயே ஒருவருக்குச் சமூகத்தில் அங்கீகாரமும் மதிப்பும் கிட்டுகின்றன.

கடமை தவறாது கருமமாற்றும் எவருக்கும் எடுத்த கருமத்திற்காகத் தம்மை அர்ப்பணிக்கும் மனப்பாங்கு அவசியமானதாகும். தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பின் நிறைவுக்காகத் தனது சுகபோகங்களையும் துறந்து செயற்படுவதாகிய மனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையினைக் கொண்டுள்ளவர்களே இந்த அர்ப்பண உணர்வை உடையவர்கள் எனக்கொள்ளலாம்.

''மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்'.

என்ற பாடல் கருமத்திற் கண்ணாகத் தன்னை அர்ப்பணிக்கும் தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவையிரண்டும் 'கல்வி' என்னும் பரப்பினிலே கலந்து நிற்கும் தன்மையைப் பார்ப்பது சிந்தனையைத் தூண்டவல்லதாகும்.

எமது வாழ்வில் நாம் ஒவ்வொருவரும் பெற விழையும் செல்வங்கள் பல அவற்றுள் நிலையானதாக எவ்வித தாக்கங்களினாலும் தகர்க்கமுடியாததாக, விளங்குவது 'கல்வி' என்னும் செல்வம் ஒன்றேயாகும். ஏனைய செல்வங்கள் அத்தகுதிக்கு உரியன எனக்கொள்ள முடியாது. இப்பிறவியிற் ஒருவர் பெறும் கல்வியானது மறுமையிலும் அவருக்கு ஏற்றதைக் கொடுக்கும் என்ற வள்ளுவன் வாக்கினை நினைவுகூரும்போது இவ்வெண்ணம் மேலும் விசாலிக்கின்றதைக் காணலாம் மனிதனாகப் பிறந்தவனுக்கு பெருமிதத்தைத் தேடிக் கொடுப்பவற்றுள் தலையானதாகத் தமிழர் மரபில் கல்வியைத் தொல்காப்பியர் சுட்டிக்காட்டுகின்றார்.

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே''

என்பது அவருடைய கூற்று.

மனித இனத்தின் தோற்றத்தின் தொடக்கத்திலிருந்து அதன் வளர்ச்சியோடு இணைந்து கல்வியும் வளர்ந்துள்ளதை வரலாறு காட்டுகின்றது காலத்துக்குக்காலம், அதன் தேவையைப்பொறுத்து கல்வியின் வழங்கலிலும் வேறுபாடுகள் காணப்பட்டுள்ளன. சமூக வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் சமூகத்தின் உயர்மட்டத்தினரே கல்வியறிவின் அடிப்படையில் செயற்படவேண்டியிருந்தது. எனவே அந்த உயர் மட்டத்தினர் மட்டும் கல்வியைப் பெற்றனர். ஏனையோருடைய உழைப்புப் பெரும்பாலும் உடலுழைப்பாக இருந்தமையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னவருக்கும் கல்வியை வழங்குவது அன்று சிந்தனையில் இடம் பெறவில்லை. காலவோட்டத்தில் அந்நிலையில் அதை வழங்குவதி லும் குறுகிய தொகையினரின் பங்களிப்புப் போதுமானதாக இருந் தது. கல்வி அமைப்பானது நிறுவனப்படுத்தப்படாது குடும்பத்தை யும் குருவையும் அடிப்படையாகக் கொண்டியங்கிய காலத்தில் அதில் பங்காற்றியவர்களும் குறிப்பிட்ட வகையினராகவே இருந் தனர். தேவைகள் பெருகி முயற்சிகளும் பரக்க பங்களிப்பவர்க ளின் தன்மையிலும் பெருக்கத்தையும் பரம்பலையும் காணக்கூடிய தாக இருக்கின்றது.

இத்தகைய பின்னணியில், இன்று கல்வியைவழங்கும் செயற்பாட் டில் பங்கெடுக்கின்ற தொகையினர் / வகையினர் யார் எனச் சிந்திப் பது பொருத்தமானதேயாகும். கல்வியை வழங்கும் பொறுப்பினை அரசும் சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ள பின்னணியில் அதனைச் சிறப்புறச் செய்யும் முயற்சியில் பங்காளிகளாகப் பள்ளிக்கூடம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என்போர் கலைநிற்கின் றனர். இவர்கள் அனைவரதும் முயற்சிகள் ஒன்றுக்கொன்று துணை நின்று ஒன்றோடொன்று இசையும்போதே உச்சப்பயன் கிட்டுகின் றது. இந்த வகையில் இன்று கல்வியை ஒரு கூட்டுமுயற்சியெனக் கொள்வது ஏற்புடையதாகும். இதில் முன்னர் குறிப்பிட்ட ஒவ் வொருவருக்குமெனக் கடமைகள் உண்டு. அவரவர் கடமை அதற் கேற்ற அர்ப்பணத்துடன் மேற்கொள்ளப்படும்போதே பொலிவுடன் கூடிய பயன்கிட்டும். இந்த நோக்கிலேயே கல்வியில் கடமையும் அர்ப்பணமும் என்ற எண்ணம் இங்கு முன்வைக்கப்படுகின்றது.

அரசு

இந்நோக்கில். கல்வியில் அரசின் கடமையை முதலில் சிந்திப் பது சாலப் பொருந்தும். "அரசு கல்வியை வழங்கவேண்டுமே யொழியக் கல்வியிற் தலையிடக்கூடாது" என்று கொள்ளப்படுவ துண்டு. யதார்த்த நிலையில் இது சாத்தியமாகுமா என்ற வினா எழுவது இயற்கையே. 'அரசு' என்ற அமைப்பினது வரலாற்றில் ஆரம்பகாலத்தில் அதன் பால்ய பருவத்தில் அரசுக்குரிய கடப் பாட்டு எல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த காலத்தில் கல்வியை

வழங்குவதில் அரசு பாரிய பொறுப்புக்களை ஏற்றிருக்கவில்லை. சமூக முன்னேற்றம், சனத்தொகைப் பெருக்கம், அரச யந்திரத்தின் வலுவிலேற்பட்ட திரட்சி என்பவற்றையடுத்து அரசின் பொறுப்புக் களின் விசாலிப்பு என்பன கல்விசார்பாகவும் அதன் கடமை களைப் பெருகச் செய்துள்ளன.

கல்வியில் அரசின் கடமையாது என்ற வினாவுக்கு வரை யறைக்குட்பட்ட குறிப்பிட்ட விடையைக் காண்பது இன்று இலகு வான காரியமல்ல. எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் அதன் கல்வியின் அடிப்படையே அரசினது செயற்பாட்டில் தங்கியுள்ள தாகக் காணப்படுகின்றது. யாருக்குக் கல்வியை வழங்குவது, எந்த அளவிலான கல்வியை வழங்குவது என்ன வகையிலான கல் வியை வழங்குவது என்ற இன்னோரன்ன வினாக்களுக்கு அரசின் தீர்மானங்களே திட்டவட்டமான விடைகளாக அமையமுடியும். தேசிய வளங்களைப் பொருத்தமான முறையிற் பங்கீடு செய்தல். குறுகிய நோக்குடனில்லாமல் பரந்த கோட்பாட்டின் அடிப்படையில் திட்டங்களை உருவாக்குதல். தூரநோக்குடன் செயற்படுதல் என் பன கல்வியைப் பொறுத்தமட்டில் அரசிடமிருந்து எதிர்பார்க்கப் படுவது நியாயபூர்வமானதேயாகும் சனநாயகக் கோட்பாட்டுக் கிணங்க அரசியல் இயங்கிவரும் இன்றைய காலகட்டத்தில், அதன் அடிப்படை கட்சிச் செயற்பாடுகளாகக் காணப்படுமிடத்து குறுகிய சுயநல அரசியல் இலாபங்களைக் கருத்திற்கொள்ளாது மக்களின் நலன்நோக்கிக் கல்விக்கொள்கைகள் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படவேண்டும். "நாட்டின் நலனே கல்வியின் உயர்முடிவு' என கல்விச் சிந்தனையாளர் ரூசோ வகுத்த தேசியக் கல்வித் தத்துவம் செயலுருவம்பெறச் செய்வதே அரசின் கடமையெனக் கொள்ளலாம்.

சமூகம்

அமெரிக்கக் கல்வியியலாளர் யோன் டூயி கல்விக்குக் கொடுத்த பல விளக்கங்களுள் ''கல்வி என்பது சமூகப் புனரமைப் புச் சாதனம். அது பயனுள்ளதாக அமையவேண்டும்'' என்பதும் ஒன்றாகும். காந்தியடிகள் கருதியதுபோன்று அறிவை வளர்த்து

ஆற்றல்களை வளர்த்து, உணர்ச்சிகளைப் பண்படுத்தி, மக்களை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் கல்வி மனிதனுடைய சமூக நடத்தையை மாற்றியமைக்கின்றது. கல்வியானது தனது இந்தச் சமூக நோக்கினை நிறைவுசெய்வதற்குச் சமூகம் தான் ஆற்றவேண்டிய பணியினைச் செவ்வனே செய்யவேண்டும்.

மனிதர்களின் கூட்டு வாழ்க்கை, கூட்டுச்செயற்பாடு என்பவற்றில் சமூக இயக்கம் தங்கியுள்ளது என்பது உண்மையானாலும், சமூகத்தின் அழுத்தங்கள் மனிதனின் நடத்தைகளை நெறிப்படுத்துகின்றன என்பது மறுக்கமுடியாதது. தனக்குரிய இந்தச் சக்தியை, ஏற்றமுறையில், உபயோகிப்பதன்மூலம் கல்வியிலும் சமூகம் கரிசனையுடன் கருமமாற்றலாம். தன்னிடத்தில் உள்ள வளங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்ளத் தயாராயிருத்தல், பலவீனமடைந்த நிலையிற் காணப்படுவோருக்குக் கைகொடுத்து உதவுதல் கல்வியை வளர்ப்பதில் அக்கறை என்பன சமூகத்தின் பங்களிப்பாக இடம்பெறத்தக்கன. ஒவ்வொரு சமூகமும் தனது அங்கத்தவர்களின் கல்வியின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் தான் பொறுப்பேற்கவேண்டும். சமூக வாழ்வில் செய்யப்படக்கூடிய சேவைகள் பல. அவை எல்லாவற்றுள்ளும் மகாகவி சுப்பிரமணிய பாரதி கூறியபடி

> " அன்ன யாவினும் புண்ணியம் கோடி
> ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல் "

கல்வி என்னும் முயற்சியில் சமூக விழிப்புணர்ச்சியின் தாக்கம் காத்திரமானதாகும். கல்வியை வழங்கும் பணி பள்ளிக்கூடங்களில் இடம்பெறுவதாகக் காணப்பட்டாலும், அப்பள்ளிக்கூடங்களை உந்தும் சக்தியாகச் சமூகம் செயற்படவேண்டும். பள்ளிக்கூடத்தின் வளர்ச்சியில் அதனைச் சுற்றியுள்ள சமூகம் கரிசனை காட்டாவிடின் பள்ளிக்கூடத்தின் செயல்வேகம் மந்தமானதாகிவிடலாம். இன்றைய கல்வி அமைப்பில் பள்ளிக்கூட அபிவிருத்தி சபையின் பங்கு கணிசமானது. இவற்றைப் போலப் பழைய மாணவர் சங்கங்களும் தமது பங்களிப்பினைச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவைபோன்ற நலன்புரி நிறுவனங்களுக்கூடாக, சமூகமானது கல்வி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமேயானால் கல்வி ஒருபோதும் வளங்குன்ற முடியாது. இவ் விதம் கூறுவதனால் பள்ளிக்கூடத்தின் அன்றாடச் செயற்பாட்டில் சமூகம் தலையிட வேண்டும் என்று கொள்ளத் தேவையில்லை. தான் செய்ய வேண்டியதைச் செய்து, நடைமுறை நிலைமைகளை நன்நோக்கில் விமர்சனம் செய்வதன் மூலம் சமூகம் பெருந்தொண்டு புரியலாம்.

## பள்ளிக்கூடம்

இன்று கல்வி என்னும் முயற்சியின் முக்கியசெயற்பாடாகிய 'கற்றல் - கற்பித்தல்' நிகழும் களம் பள்ளிக்கூடமாகும். கல்வி யானது நிறுவனப்படுத்தப்பட்ட செயற்பாடாக உருப்பெற்ற காலத் திலிருந்து அதில் பள்ளிக்கூடம் முதலிடத்தை வகிக்கின்றது. கல்விக் குரிய கொள்கைகள், திட்டங்கள் என்பவற்றை உருவாக்கும் அமைப் புக்களிலும் பார்க்க அவற்றைப் பயன்தருமுறையில் நடைமுறைப் படுத்தும் இடமே அவற்றின் வெற்றிக்கு வழிசமைக்க முடியும். இக் கருத்தில், பள்ளிக்கூடத்தின் மகத்துவத்தை எவரும் புறக்கணிக்க முடியாது.

பிள்ளையின் அறிவ வளர்ச்சிக்கு வேண்டிய பாடங்களைக் கற்பதற்கு ஒழுங்கு செய்வது அப்பிள்ளையின் ஆளுமை வளர்ச்சி க்கு உதவக்கூடிய பாடப்புறச் செயல்கள்/இணைப்பாடச் செயல் கள் என்பவற்றை ஒழுங்கு செய்வதுபோன்ற செயல்களுக்கூடா கப் பள்ளிக்கூடம் கல்வியின் அடிப்படைகளை வழங்குகின்றது. 'பள்ளிக்கூடம் சமூகத்தின் ஒரு சிறிய உருவம்' எனக் கணிக்கப் படுவதுண்டு. தன்னிடத்து பயிலவரும், சமூகத்தின் எதிர்காலத் தலைமக்களாகிய இளந் தலைமுறையினரை அவர்களது எதிர் கால சமூகப் பங்குத் தோற்றங்களுக்குப் பொருத்தமாக வளர்த் தெடுக்கும் கடமை பள்ளிக்கூடத்துக்கு உண்டு.

இலட்சிய நோக்குடனான வாழ்க்கைப் பாதையில் இளைய பரம்பரையினர் அடியெடுத்துச் செல்ல அவர்களை வழிப்படுத்து வது பள்ளிக்கூடத்தின் பொறுப்பாகும். விழுமியங்களை வகுத்துப் பேணிப்பாதுகாத்தல், பாரம்பரியங்களை நிலை நாட்டுதல் போன்ற கடமைகளின் வெற்றி/தோல்வி பள்ளிக்கூடத்தின் செயற்பாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படும் அர்ப்பணத்தின் கனகதியிலேயே தங்கியுள்ளது. இதனை நிறைவேற்றுவதில் அதில் அங்கத்துவம் பெறும் அனைவரதும் கூட்டுமுயற்சி கருத்தில் கொள்ளப்படவேண்டுமெனினும், இறுதிப் பொறுப்பு நிறுவனத்திடமே உண்டு என்பதை எவரும் மறக்கக்கூடாது.

## ஆசிரியர்கள்

பள்ளிக்கூடத்தில் கல்வி சிறக்கும் நிலைக்குப் பெரிதும் துணைநிற்கும் முயற்சி ஆசிரியருடையதேயாகும். பண்டுதொட்டு இன்றுவரை ஆசிரியர்களுடைய செயற்பாட்டின் தன்மை கல்வியின் அடித்தளமே அவர்கள் தான் என்பதை நிறுவியுள்ளது. காலாகாலமாக மாணவர்க்கு வேண்டிய அறிவினை வழங்கி, அவர்களை நல்வழிப்படுத்தித் தொண்டு புரிபவர்கள் ஆசிரியர்களேயாவர். ஒருவர்க்கு நிலையான அணிகலனாக என்றும் திகழ்வது 'அணையா விளக்காம் அறிவுச்சுடரே'யாகும். அந்த அறிவுச்சுடர் என்றும் தொடர்ந்து ஒளிபரப்புவது ஆசிரியருடைய, கடமையிற் கண்ணான, அர்ப்பணத்துடன் கூடிய சேவையின் மகிமையாகும். தனது பணி மாணவர்க்குப் பயனுள்ளதாகும் விதத்தில் அதற்கேற்பத் தன்னுடைய அறிவினைக் காலத்தோடு ஒட்டியதாக வளர்க்கவேண்டியது ஆசிரியனுடைய முதற்கடமை எனலாம்.

கற்பித்தல் தொழிலில் ஈடுபடும் எவரும் அதற்குரிய மனப்பாங்கு, அதற்கான அர்ப்பணம், அதனிடத்து மனப்பூர்வமான விசுவாசம், நிறைவான கடமையுணர்ச்சி ஆகியவற்றைக் கொண்டிருத்தல் அவசியம். தன்னிடத்தே கற்கும் மாணவரிடத்தில் அக்கறையுடன் அவர்களுடைய வளர்ச்சிக்காக உழைக்கத் தயாராயில்லாத ஆசிரியர் எந்த நிலையிலும் மதிப்புப்பெறமாட்டார் உலகில் காணப்படும் தொழில்களில் அவற்றுக்கூடாகக் கிடைக்கும் ஊதியத்தின் அடிப்படையில், அவற்றை மேற்கொள்வோருக்கு மதிப்பைப் பெற்றுக்கொடுப்பன பல. ஆனால் ஆசிரியத்துவத்தை அப்படியானதாகக் கருதமுடியாது. உயர்வான இலட்சிய அடிப்படையிலான அதில், சேவை இலட்சியமில்லாத எவருக்கும் இடமிருக்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் மத்தியில், சமூகத்துக்காக ஆற்றப்படும் ஆசிரிய சேவையானது ஒவ்வொரு கணமும் சமூகத்தின் கூர்மையான பார்வைக்கு இலக்காவது என்பதை நாம் மறக்கலாகாது. நலிவான ஆசிரியர், திறனற்ற ஆசிரியர், ஆசிரியத் தொழிலின் கல்வி விழுமியங்கள் தவிர்ந்த பிறமதிப்புக்கள் வேதனங்கள் என்பவற்றுக்காக அதனை மேற்கொள்ளும் ஆசிரியர், தனது தொழிலில் விசுவாசமாக உழைக்காத ஆசிரியர் இவர்களெல்லாம், கல்வியிலும், ஆசிரியர்களிலும், நம்பிக்கையை அழித்துவிடுகின்றனர். தொடர்ச்சியான பொதுசனக் கண்காணிப்பின்முன் தலைநிமிர்ந்து நிற்கும் அதி உயர் தரங்களைக் கடைப்பிடிக்கும் ஆசிரியர்களே தமது தொழிலுக்கும் கல்வியுலகிற்கும் அணிகலன்களாவர்.

மாணவர்கள்

பங்காளிகளான பிறருடைய முயற்சிகளுக்கூடாகக் கல்வியில் பயன்பெறுபவர்கள் மாணவர்கள். கற்றல்-கற்பித்தல் என்ற செயற்பாட்டில், 'கற்பித்தற்' செயற்பாடு ஆசிரியனுடையதாக அமைய 'கற்றல்' மாணவர்களுடைய செயற்பாடாக அமைகின்றது. அது பொருத்தமான முறையில் நடைபெறும்போதே கற்றலின் பயன்கிட்டுகின்றது இந்நியதியில் மாணவர்களைப் பொறுத்தும் கல்வியில் கடமையும் அர்ப்பணமும் நோக்கப்படலாம்.

கல்வியை வாழ்நாள் நீடித்த பயணமாகவும், 'கருப்பையிலிருந்து கல்லறை வரை' நீடிப்பதாகவும் கொண்டாலும் அதற்குரிய பருவமாக பள்ளிக்கூடத்திலிருந்து பல்கலைக் கழகம் உள்ளிட்ட பருவம் 'மாணவ பருவம்' என வரையறுக்கப்படுவதுண்டு இப்பருவத்தில் கல்வியின் பயனைப்பெற விழையும் எவரும் அதில் முழுமையான அர்ப்பணத்துடன் ஈடுபடவேண்டும். மனமொன்றிக் கற்காத மாணவன் ஏனைய வசதி. வாய்ப்புக்களைப் பெற்றிருந்தாலும் கல்வியில் 'வறியவனாக'வே வாழ்வான்.

ஆசிரியருடைய வழிகாட்டலின் பேரிலேயே கல்வி இடம் பெறுவதாயினும், அதனுடைய முழுமை மாணவனுடைய சுய முயற்சியிலேயே தங்கியுள்ளது. ஒருவன் தானாகத் தேடித்தொகுக்கும் அறிவே தெளிவானதாகவும் பொருண்மையானதாகவும் இருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். ஆசிரியர் கூறுவதுடன் மட்டும் திருப்திப்படாது, மாணவன் தானும் தேடல் மூலம் அறிவைச் சேகரிக்கவேண்டும். இத்தகைய செயற்பாடு மாணவர்க்குத் தன்னம்பிக்கையையும் சுயவேலைப் பாட்டுத் திறனையும் வழங்கும்.

கற்பதுடன் மட்டும் மாணவனுடைய கடமை முடிந்துவிடுவதில்லை. பள்ளிக்கூடத்துக்கூடாக வளர்க்கப்படும் விழுமியங்கள் குறிக்கப்படும் இலக்குகள் என்பவற்றுக்கு விசுவாசமுள்ளவனாக மாணவன் வாழவேண்டும் அவ்விதமான மாணவர்கள் மாணவ உலகுக்கும் அவர்களது சமூகங்களுக்கும் எடுத்துக்காட்டாவர்.

## பெற்றோர்

கல்விச் செயற்பாட்டில் தமக்குரிய கடமைகளைக் கொண்டவர்களுள் பெற்றோரைத் தவிர்க்கமுடியாது கல்விகற்று நன்மகனாக வளரவும் வாழவும் வேண்டியவகையில் பிள்ளையை உருவாக்கும் பாரிய பொறுப்பு பெற்றோரையே சார்ந்தது.

பிள்ளைகள் தமது பிற்காலத்தில் கல்வியின் மூலம் என்ன பயனைப் பெறுகின்றார்கள் என்பது பெற்றோருடைய அபிலாசைகளில் தங்கியுள்ளது என மேலே குறிப்பிட்டது இங்கு நினைவுகூரத்தக்கது. இதில் பெற்றோருடைய பங்கு முன்னெச்சரிக்கையுடனானதாக இருத்தல் வேண்டும். பிள்ளைகள் உயர்வகற்கு இலக்குகளைக் குறித்தல் தேவையென்றாலும், பெற்றோர் பிள்ளைகளால் அடையக்கூடிய அவர்களுடைய திறன், மனப்பாங்கு என்பவற்றுக்குப் பொருந்தக்கூடிய இலக்குகளைச் சிந்திப்பதே நல்லது. இல்லையேல், பெற்றோருடைய விருப்புக்காகக் கனக்குப் பொருந்தாத ஒரு பாதையில் செலுத்தப்படும் மாணவரின் 'கல்விப் பயணம்' முட்டுச் சந்தினுள் முடிவடையும் ஆபத்துண்டு

பிள்ளைகளுடைய கல்விக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்து பொருத்தமான வழிகளில் நெறிப்படுத்தி, தாம் செய்யவேண்டிய கடமையைத் திருத்தமாகப் பூர்த்திசெய்யும் பெற்றோர் மதிப்புக்குரியவர்களேயாவர். தனது பிள்ளையின் கல்வி முன்னேற்றத்தில் பள்ளிக்கூடத்துக்குத் தான் வழங்கக்கூடிய ஒத்

துழைப்பு அனைத்தையும் வழங்கவேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமையுமாகும். அதில் தவறிவிட்டுப் பள்ளிக்கூடத்தில் பழியைப் போடுவது ஏற்புடையதன்று.

ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் கல்வியின் நிறைவும் வெற்றியும் பலருடைய முயற்சியின் பெறுபேறுகளே என்பது கண்கூடு. ஒவ்வொருவருக்குமான பொறுப்பு இலட்சிய உணர்விலேதான் நிறைவுபெறுகின்றது. இன்றைய உலகில் 'யதார்த்தம்' என்ற சிந்தனை 'இலட்சியத்'துக்கு மாற்றீடாகப் புகுத்தப்படுவதும் உண்டு. கல்வியில் அதற்கு இடம்கொடுக்க முடியாது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளலாக' இருக்கவேண்டிய கல்வியில் இலட்சியத்தின் வெற்றியை நிலைநாட்ட நாம் அனைவரும் எம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றுவது எமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# கல்வி — அன்றும் இன்றும்

கல்வி என்பது இன்று நேற்றுத் தொடங்கிய முயற்சியன்று. என்று மனித இனம் உருப்பெற்றதோ அன்று தொட்டுக் கல்வியும் இடம்பெற்றுள்ளது என்பது கண்கூடு. காட்டில் அலைந்து திரிந்த வேட்டுவ நிலையிலுஞ்சரி, காட்டை அழித்து நாட்டைப் படைத்த நாகரிக நிலையிலுஞ்சரி மனித முன்னேற்றம் கற்றலின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. மனித வரலாற்றில் ஒவ்வொரு கட்டத்திலும் மனிதனை எதிர்நோக்கிய அறைகூவல்கள், அவன் முகம் கொடுக்கவேண்டியிருந்த நிலைமைகள் ஒவ்வொன்றும் மனிதனுக்கு ஏதோ ஒன்றினைக் கற்பிப்பனவாக அமைந்தன. அவற்றுக்கூடாகவே கல்வி இன்று பன்முகப் பரிமாணங்களையுடையதாக விசாலித்துள்ளது.

சமூக வாழ்வின் ஆரம்பத்தில் குடும்பமே கல்வி நிலையமாகத் திகழ்ந்தது. தந்தையும் தாயுமே பிள்ளையின் முதலாசிரியர்களாகச் செயற்பட்டனர். தந்தையைப் பார்த்துத் தனையனும் தாயைப் பார்த்து மகளும், செயற்படக் கற்றுக்கொண்டனர் எனலாம். அக் கல்வி வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களைப் பயிற்றுவதாகவே இருந்தது. காலஞ்செல்ல மனித தொடர்புகள் பெருக, அறிவுத் தேவைகள் விருத்தியடைய அவற்றைக் குடும்பம் நிறைவு செய்யமுடியாத நிலையில் குடும்பத்துக்கு அப்பால் கல்வியை நாடிச் செல்லும் நிலை உருவாகியது. அந்தக் கட்டத்திலேயே குருவை நாடித் தேடிச்சென்று கல்விகற்கும் மரபு தோன்றியது. கீழைத்தேய வழக்கில், குறிப்பாக இந்துமரபில் காணப்பட்ட குரு-சிஷ்ய மரபும், மேலைத்தேய வழக்கில் காணப்பட்ட தேவாலய மரபும் இத்தகைய ஒரு நிலைமையைப் பிரதிபலிப்பனவாகக் கொள்ளமுடியும். தன்னை நாடிவந்த சீடர்களின் தாத்தையும் நோக்கித் தகுதியானவர்களைத் தனது மாணவராக ஏற்றுக் குரு கல்வி வழங்கும் வழக்கு அன்று கடைப்பிடிக்கப்பட்டது. அந்நிலையில் கல்வி ஒரு சிலருடைய தனியுடைமையாகவே காணப்பட்டது.

அன்றைய காலகட்டத்தில் கல்வியானது மாணவனுடைய தேவையைக் கருத்திற்கொண்டே வழங்கப்பட்டது. நிலப்பிரபுத்துவ அடிப்படையில் அமைந்த அன்றைய சமுதாயத்தின் மேல்மட்டத்தில் இருந்தவர்களே தலைமைப் பொறுப்புக்களை வகித்தனர். அவரவர் வகித்த பொறுப்புக்கேற்ற கல்வி தேவைப்பட்ட நிலையில் சமூகத்தின் மேல்மட்டத்திலிருந்தவர்களின் கல்விக்குக் கூடிய கவனம் செலுத்துவது இயல்பாகவே இருந்தது. சமூக அமைப்பின் அடித்தளமாக இயக்கிய எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான, உடலுழைப்பில் ஈடுபட்டவர்களான, தொழிலாள வகுப்பினர் பிரத்தியேகத் திறன் எதையும் தேவையாகக் கொண்டிருக்கவில்லை ஆதலால் அவர்களுக்கு விசேட கல்வி எதுவும் வழங்கப்படவும் இல்லை, அரசு பதவிகள், இராணுவப் பதவிகள், வணிகச் செயற்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த மேல்மட்டத்தினருக்கு அத்தந்தத் தேவைகளுக்குப் பொருத்தமான கல்வி வழங்கப்பட்டது. அந்தப் பின்னணியில் உயர் குழுவினரே கல்விக்குரியவர்களாயினர்',

காலப்போக்கில், வாழ்க்கை நடைமுறைகளில் ஏற்பட்ட பல்வகை முன்னேற்றங்களினால் தொழில்களிலும் முன்னேற்றங்களும் அவற்றின் விளைவான மாற்றங்களும் கல்வியின் தேவையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்தன. விஞ்ஞானத்தின் புதிய கண்டுபிடிப்புக்கள் அவற்றின் பயனாக ஏற்பட்ட தொழிற்புரட்சி, அதனையடுத்துச் சமூக அமைப்பில் தோன்றிய புத்துணர்வுகள், அவற்றினடிப்படையில் வளர்ச்சி பெற்ற சமூக - அரசியற் கருத்துக்கள் ஆகியன எல்லாம் அறிவின் பரப்பெல்லையை விசாலிக்கச் செய்தன. அந்தப் பரந்த பரப்பினை உள்ளடக்குவதாகக் கல்வியிலும் விரிவாக்கம் ஏற்பட்டது.

புதிய சூழ்நிலைக்கேற்ப புதிய திறன்கள் தேவைப்பட, அவற்றைக் கொண்ட தொழிலாளர் குழுவினை உருவாக்கும் நிலைமை தோன்றியது. இத்தேவை கல்வியின் உயர்குழுவினருக்கு இருந்த ஏக போக உரிமையைக் குலைப்பதைக் காணலாம். உயர் குழுவினர் தவிர்ந்த மற்றவர்களும் கல்வி பெறும் சந்தர்ப்பம் உருவாகியது. படிப்படியாக ஏற்பட்ட சமூக வளர்ச்சியும், மக்களாட்சியின் எழுச்சியும், சாதாரண மனிதனுடைய கைகளுக்கும் கல்வியை எட்டச் செய்தன. மக்களினுடைய தெரிவுக்குட்பட்ட அரசுகளின் உதயம் சமூக நலனில் அக்கறை கொண்ட சமூக - நல அரசமைப்பினைத் தோற்றுவித்தது. மக்களாட்சி மகத்துவம் பெற மக்களுக்குக் கல்வியூட்ட வேண்டும் என்ற எண்ணம் பரவியது 'எமது எசமானருக்குக் கல்வியளிக்க வேண்டும்' என்ற சிந்தனையின் செயல்வடிவமே காலப்போக்கில் சகலருக்கும் கல்வி என்ற நடைமுறையை நிலைநாட்டியது.

இரண்டாவது உலகமகாயுத்தத்தை அடுத்து, உலகில் சமாதானத்தை நிரந்தரமாக நிலைபெறச் செய்வதற்கு, மக்கள் மனதில் சமாதானக் கருவை வேரூன்றச் செய்யக் கல்வியே தகுந்த கருவியாயிற்று. அதன் வெளிப்பாடே கல்வியை மனிதனின் பிறப்புரிமையாகப் பிரகடனப்படுத்தியது. ஐக்கியநாடுகள் அமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை மனித உரிமைப் பிரகடனத்தின் 26 ஆம் பிரிவு அதனைப் பிரதிபலிக்கின்றது. இவ் அடிப்படையில், ஒவ்வொரு குழந்தையும் பிறப்பிலிருந்து கல்வியைப் பெறும் உரிமையை இன்று கொண்டுள்ளது.

கல்வியை வழங்கும் பொறுப்பில் காலத்துக்கூடாக ஏற்பட்ட மாற்றமும் கனிசமானதாகவே காணப்படுகின்றது. ஆரம்பகாலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில், கல்வியை வழங்கியவர்கள் மதகுருமாராகவே இருந்தனர். அன்று மானிடத் தேவைகளின் அறிவுப்பரப்பினை உள்ளடக்கிய அறிவினை வழங்கும் ஆற்றலும் அனுபவமும் மதகுருமாருக்கே இருந்தது. கல்வியைப் பெற விரும்பியவர்கள் அக் கல்வியை வழங்கக்கூடிய குரு எங்குள்ளார் என்பதை அறிந்து அங்கு சென்றனர். அவ்வண்ணம் சென்றோருள் கற்கத் தகுதியானவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை குருவுக்கே இருந்தது. இக்காலத்தில் இடம்பெறும் தெரிவுத் தேர்வுகளைப் போன்று அவ் வழக்கு நிறுவனப்படுத்தப்படாமல் இருந்தாலும், தத்துவார்த்த ரீதியில் அதுவும் தெரிவுத் தேர்வேயாகும். கல்வியானது குழந்தையின் பிறப்புரிமை என்ற கோட்பாடு அங்கீகரிக்கப்பட்ட இன்றைய நிலையில் அத்தகைய தெரிவின் சாத்தியத்தை நாம் எண்ணிப் பார்க்கலாம். அதுமட்டுமல்லாமல் குருவை நாடி மாணவர் சென்றதற்குப் பதிலாக இன்று மாணவரைத்தேடி குரு வகுப்பறைக்குச் செல்வதும் சிந்திக்கத்தக்கது.

கல்வியை வழங்கும் பொறுப்பில் முழுவதையுமோ அல்லது பெரும்பகுதியையோ இன்று அரசு ஏற்றிருப்பதும் நோக்கத்தக்கது. அன்று குழவிப் பருவத்திலிருந்த 'அரசு' என்ற அமைப்பு தனது செயற்பாடுகளை இயன்றளவு சுருக்கிக்கொள்ள முனைந்தமை இயல்பானதேயாகும். அத்தகைய நிலையில் கல்வியை வழங்கும் விடயத்தில் பொறுப்பேற்பதற்கு வேறு நபர் / நிறுவனம் இருந்தபோது அரசு அப்பொறுப்பிலிருந்து 'தள்ளி நின்றமை' புரிந்துகொள்ளக்கூடிய செயலேயாகும். பூரண பொறுப்பினை ஏற்பதற்குப் பதிலாக மானியம் / நன்கொடை என்பவற்றுக்கூடாக அரசு தனது பங்களிப்பினைச் செய்தது. அன்றைய காலகட்டத்தில் அரசினுடைய உதவியுடன் பொறுப்பினைச் சுமந்த அமைப்பு இருந்தபடியால் கல்வி என்னும் செயற்பாடு கச்சிதமாக நிறைவேறியது. கல்வியின் பரப்பெல்லை, இன்றுபோல் பரந்ததாக இல்லாமல், குறுகியதாக அன்று இருந்தமையும் அதற்கு ஒத்தாசையாயிற்று.

காலப்போக்கில் கல்வியில் ஏற்பட்ட அகற்சியும், அதை அதை வழங்குவதற்குத் தேவைப்பட்ட செலவின் பெருக்கமும், அரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய பங்களிப்பில் பெருக்கத்தை வேண்டிநின்றன. அரசின் அதிகார வரம்பின் பரப்பும், பலத்தின் பெருக்கமும் கல்வியில் அதன் ஈடுபாட்டைத் தவிர்க்கமுடியாததாக்கியதும் கணிப்பிற்கொள்ளத்தக்கதாகும். தனது அதிகார எல்லையினுள் பிறருடைய நுழைவினைப் பலம்பொருந்திய அரசு ஏற்றுக்கொள்ள முடியாமையும் வளர்ச்சியில் இயல்பானதேயாகும். இன்னோரன்ன காரணங்களினால் கல்வியை வழங்கும் பொறுப்பு ஒன்றில் முழுமையாகவோ அல்லது பெரும் அளவிலோ அரசினால் வகிக்கப்படுவது இன்று உலகநாடுகளில் காணக்கூடிய ஒன்றாகும்.

கல்வியின் பருவ எல்லையும் காலவோட்டத்தில் மாறுபட்டிருப்பது கண்கூடு. தொடக்கத்தில் கல்விக்குரிய பருவம் பிரமச்சாரியப்பருவத்தை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது அண்மைக் காலம்வரைக்கும், வரலாற்றுக்கூடாகவும். அப்பருவமே கல்விப் பருவமாகக் கணிக்கப்பட்டுள்ளது. கல்விப்பரப்பின் விசாலம், உளவியல் கருத்துக்களின் தாக்கம் என்பன கல்விப் பருவத்திலும் அகற்சியினைப் புகுத்தியுள்ளன. முன்பள்ளிப் பருவக் கல்வி முதல் வளர்ந்தோர் கல்விவரை கல்விச் செயற்பாடு இன்று விஸ்தரித்துள்ளது. அத்துடன், கல்வி என்பது 'கருப்பையிலிருந்து கல்லறை வரை' என்ற சிந்தனையின் செறிவும் இன்று ஊறியுள்ளமை கவனிக்கத்தக்கது. கல்வியானது வாழ்நாள் முழுவதும் வியாபித்த ஒரு முயற்சி என்ற இன்றைய கருத்து 'கல்வி கரையில கற்பவர் நாட்சில' என்ற எம்முன்னோரது கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது.

கற்பித்தற் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்களும் கவனத்திற்குரியனவாகும். அன்றைய கற்பித்தல் என்பது கற்பிக்கப்படும் பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது. ஆசிரியர் கற்பிக்கும் விடயத்தை மாணவன் உள்ளத்தில் பதித்து மீட்டும் ஒப்படைக்கும் வகையில் நெட்டுருச் செய்யும் வழக்கு மேற்கொள்ளப்பட்டது. அக்காலத்தில், இன்றுபோல், அச்சியந்திர வசதிகள் இல்லாத நிலையில், நெட்டுருச் செய்வது கற்றலின் அடிப்படையாக இருந்தது. மாணவர் தமது உள்ளத்தில் பதித்ததைக்கொண்டு, தமக்கு எழுந்த ஐயங்களைத் தீர்க்கும் வகையில் ஆசானிடம் 'கடாக்களை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்துக் கற்றனர். அன்றைய கதிநிலை, தமிழ் இலக்கண நூலார் கூறியது போன்று,

'சித்திரப் பாவையி னத்தக அடங்கிச்
செவிவா யாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து'

கற்கும் ஒன்றாகக் காணப்பட்டது. பாடஞ்சொல்லும் அக்கால வழக்கினை இன்றைய நடைமுறையுடன் ஒப்பிட்டுப்பார்ப்பது பொருத்தமுடையதாகும். இன்றுபோல நூல்கள் நூலகங்கள் கற்றலுக்குரிய சாதனங்கள் என்பன இல்லாத அந்தக்காலத்தில் மாணவன் ஆசிரியனிலேயே முற்றாகத் தங்கியிருக்கவேண்டி நேரிட்டது. ஆசிரியர் சொல்வது ஒவ்வொன்றிலும் தனது கருத்தைச் செலுத்த வேண்டிய நிலையில் மாணவன் தனது கவனத்தை வேறெங்கும் அலையவிடாமல் ஒருவழிப்படுத்துவது அவசியமாயிருந்தது. எனவேதான் சித்திரத்திலுள்ள பாவைபோன்ற அசைவற்ற நிலை தேவைப்பட்டது மனம் ஒருவழிப்பட்ட நிலையேயாகும். அத்தகைய நிலையில் அறிவென்னும் பயிர் வேரூன்றி விளைவதற்கேற்ற புலமாக அமைந்தது. மாணவனுடைய உள்ளம் செவியினூடாகக் கேட்டவை உள்ளத்தில் பதியவைக்கும்போது அறிவு என்னும் முளை அரும்பி வளர்கின்றது அப்படியான ஒரு எண்ணமே அன்றைய நடைமுறையின் பின்னணியில் இருந்தது எனக்கொள்வது தவறாகாது. அதில் கற்ற பாடமே முதன்மையான கவனத்தைப் பெற்றமை நியதியேயாகும்.

அந்த நிலை காலப்போக்கில் மாற்றத்துக்குள்ளாக்கியது. பாடத்துக்கு முக்கியத்துவம் கொடுத்த நிலை மாறி குழந்தைக்கு முதலிடம் வழங்கும் நிலைமை உருவாகியது. உளவியற் கருத்துக்களின் விருத்தியின் விளைவாகக் குழந்தையின் தனித்துவம் கருத்துக்கெடுக்கப்பட்ட காலம் கற்பித்தல் முறைகளில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அந்தத் திருப்புமுனையின் நாயகனாக விளங்கியவர் பிரெஞ்சுச் சிந்தனையாளர் ரூசோ. அவருடைய கருத்துக்கள் குழந்தையின் தேவைகளையொட்டிக் கற்பிக்கும் முறைகளை வளர்க்கும் மரபுக்கு வித்திட்டன எனலாம். அந்த வழிமுறையில் வளர்ந்து வந்தவைதான் 'நவீன கற்பித்தல் முறைகள்' என நாம் பெருமைப்படும் இன்றைய கற்பித்தல் முறைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கற்பித்தல் முறைகளின் பயன்பாடு ஆசிரியருடைய தயார்நிலையிலும் மாற்றத்தை வேண்டிநின்றது. அறிவுள்ளவர் கற்பிக்கலாம் என்ற ஒரு காலத்தைய எண்ணம், அறிவுடன் சேர்த்துக் கற்பிக்கும் ஆற்றலை வழங்கும் பயிற்சியும் இடம்பெறும் வகையில் இன்று விசாலித்துள்ளது. அதன் முழுநிறைவினைப் பயிற்றப்படாத எவரும் கற்பிக்கும் கடமையில் ஈடுபடக்கூடாது என்ற இன்றைய கோட்பாட்டில் காணலாம். இன்றைய உலக வழக்கு இதனைக் கட்டாயப்படுத்தும் நிலைக்குப் படிப்படியாகப் பரவிச்செல்கின்றது.

கல்வியின் நோக்கமும் காலவோட்டத்தில் பரந்து விரிந்துள்ளதைக் காணலாம். கல்வியின் நோக்கம்பற்றிய சிந்தனை இன்று நேற்று ஆரம்பமானது அன்று. கிரேக்க – உரோம ஆதிபத்திய காலத்தில், பிளேத்தோ – அரிஸ்டாட்டில் போன்ற அறிஞர்களுடைய கருத்துக்களில் கால்கொண்ட மேற்கத்தைய கருத்துச் சிந்தனை, கீழைத்தேயப் பயன்பாட்டுப் பின்னணியில் உருப்பெற்ற ஆன்மீக நோக்கு என்பன இணைந்து இன்றைய சிந்தனைகளில் சங்கமமாகியுள்ளன.

கல்வியின் நோக்கம் இதுதான் என ஒருமைப்படுத்திக்கூறும் அளவுக்கு அதனை அறுதியிட்டுக் கூறமுடியாது. தேச இன, பண்பாட்டுப் பேதங்களின் அடிப்படையில் பல்வகைப்படுத்தப்பட்டுப் பரந்திருக்கும் கல்வியினைப் பார்க்கும்போது 'கல்வி தனக்கென எவ்வித நோக்கமும் இல்லாதது என்பதை நினைவுகொள்ளுதல் நல்லது. பெற்றோர், ஆசிரியர்கள் முதலியோரே நோக்கங்களைக் கொண்டுள்ளனர்' என்ற ஜோன் டுயியின் கூற்றின் பொருத்தப்பாடு புலனாகும். அறிவு விருத்தி, முழுமையான வாழ்வுப் பயன் அறத்தையும் ஒழுக்கத்தையும் விருத்திசெய்தல், சமூகப் பொருத்தப்பாட்டினை வளர்த்தல், நாட்டுக்குகந்த நற்பிரசையை உருவாக்குதல், ஆன்மீக ஈடேற்றம், வாழ்க்கைக்கு வழிசமைத்தல் என்ற பல் வேறுபட்ட நோக்கங்களுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ நிறைவுசெய்ய முயல்வதனை இன்றைய கல்விச்செயல்பாடுகளில் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் பரப்பெல்லை விசாலித்துள்ள இன்றைய காலகட்டத்தில் அதற்குரிய முழுபொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளும் சக்தி அரசு அல்லாத வேறெந்த அமைப்புக்கும் இல்லாத ஒன்றாகும். அப்பொறுப்பின் நிறைவுக்கு அதிகாரஞ் செலுத்தும்வகையில் பங்கேற்கும் அமைப்புக்கள், அந்தந்த நாட்டு அரசியலமைப்பின் தன்மையைப் பொறுத்தது. வேறுபடினும் அதன் பின்னணிப் பலம் அரசு யந்திரத்தினுடையதே.

காலத்துக்கூடாக 'அரசு' என்ற அமைப்பு வளர்ந்த விதமும் பெற்ற பலமும் அதன் தோற்றத்திலும் செயற்பாடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இவ்விதம் உருவாகியதே 'சமுகநல அரசு' என்ற தோற்றம். சமுகத்தின் நலனைப் பேணுவதைத் தனது பெருங்கடமையாக அரசு ஏற்றுள்ளமையை இது காட்டுகின்றது. அவ்விதம் சமுகநலன்களில் ஒன்றாகக் கல்வி கருதப்படுகின்ற இன்றைய காலத்தில் அதற்குரிய பழுவினை அரசு சுமந்து கொள்வது இயல்பானதேயாகும். உலக நாடுகளை நோக்கின் இதன் உண்மை புலனாகும்.

கல்வியில் அரசுப் பொறுப்பின் வளர்ச்சி அக்கல்வியைத் திட்டமிடும் தேவையையும் இன்று உருவாக்கியுள்ளது நாட்டின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் உச்சப் பயனளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படவேண்டியது அவசியம் எல்லாவகைப்பட்ட முயற்சிகளையும் இலாப / நட்ட நோக்கில் சிந்திக்கும்போது, ஆளணி அடிப்படையில் மிகப்பெரிய முயற்சியாகிய கல்வியில் அக்கறையை தவிக்கமுடியாததாகும். மனித சக்தியைப் பயன்படுத்தி மனித சக்தியைப் பெருக்க எடுக்கும் முயற்சியான கல்வி 'மனித மூலகங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடு' என்ற கணிப்பில். அதனைத் திட்டமிடுவது எல்லா நாடுகளிலும் இன்று வலியுறுத்தப்படுகின்றது இத் திட்டமிடல் சமூக – பொருளாதாரக் குறிக்கோளைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுவது அவதானிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைத் திட்டமிடும் செயற்பாடுகளில் மேலிருந்து – கீழும் கீழிருந்து – மேலும் என்ற முறையில் இருவழித் தொழிற் பாடுகள் இடம்பெறினும், இறுதி முடிவு அரச மேல்மட்டத்தில் எடுக்கப்படுவதே வழக்கு. இதனால் சில சந்தர்ப்பங்களில் சில விடயங்கள் கவனத்திற்கெடுக்கப்படாமலும் போகலாம். திட்டமிடப் படும்போது பொருளாதாரப்பேறுகள் முன்னுரிமை பெறும் நிலை யில், விழுமியஞ் சார்ந்த பிறதேவைகள் பிற்தள்ளப்பட்டுவிடும் ஆபத்தும் உண்டு என்பதை நாம் மறுக்கலாகது. இவ்விதமான நிலமைகள் உருவாகுவதைத் தடுக்கவேண்டியது சமூகத்தின் கடமை யாகும். சமூகத்தின் நலனுக்காகக் கல்வி வழங்கப்படும்போது அதன்மூலம் உரிய பயனைப் பெறுவதற்குச் சமூகம் விழிப்புடன் செயலாற்றுவது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# 1970 க்குப் பின் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள்

## — எதிர்பார்ப்பும் நிறைவேற்றமும்

1970க்குப் பின் இலங்கைக் கல்வியில் புதிய போக்குகள் என்ற நோக்கு அந்த ஆண்டு தொட்டு எமது நாட்டுக் கல்வியில் புதிதாக உருப்பெற்ற / உருவாக்கப்பட்ட நடைமுறைகளை இனங் காண்பதையும் - எடைபோடுவதையும் இலக்கில் கொண்டதாகும். இக்காலப் பரப்பினையும் இதன் போக்கினையும் ஆராய முற்படும் போது நாட்டின் வரலாறு, முக்கியமாக அரசியல் வரலாறு, கவனத்திற் கொள்ளப்படுவதும் அவசியமாகும். ஒரு நாட்டின் அரசியற் கோட்பாடுகள் இலட்சியங்கள் என்பன அதன் கல்விச் செயற்பாட்டிலும் காலூன்றும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவமாகும். எமது நாட்டிலும், குறிப்பாக எமது கவனத்தி லுள்ள இக் காலப்பகுதியில், இவ்வுண்மை தெளிவாகின்றது. 1970 இல் அரசாட்சிக்கு வந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977 இல் அதனைத் தோற்கடித்துப் பதவியைப் பிடித்துக்கொண்ட ஐக்கியதேசியக் கட்சியும் அரசியற் கொள்கையில் இரு துருவங்கள் போன்றவை. அப் பேதம் கல்விக் கொள்கையில் பிரதிபலித்ததா என்பதையும், அந்தந்த காலகட்டங்களில் அவர் சந்திக்க வேண்டியிருந்த நிலைமைகள் அவற்றுக்கான துலங்கல்கள் எப்படி இருந்தன என்பதையும் பார்ப்பது விமர்சன நோக்கில் சிந்தனையைத் தூண்டுவதாகும். கருத்திலேற்பட்ட எதிர்பார்ப்பு, அடைவில் காணப்பட்ட நிறைவேற்றம் என்பன கற்றோரிடத்துக் கவனத்தை உண்டு பண்ணுவன என்ற எண்ணத்திலேயே இவ்வுரை மேற்கொள்ளப் படுகின்றது என்பதை நினைவில் நிறுத்திக்கொள்வது தேவைப் படுவதாகும்.

## காலத்தின் தேவை

இலங்கையின் கல்வி வரலாற்றில் 1970 ஆம் ஆண்டினை ஓர் எல்லைக்கோடாகக் கொள்ளுதல் பொருத்தமானதாகும். நானூற்று ஐம்பது ஆண்டுகால அந்நியர் ஆட்சிக்குப் பின் 1948 இல் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது. நாட்டுக்குக் கிடைத்த அரசியற் சுதந்திரம், எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டதுபோல, மக்கள் வாழ்வின் ஏனைய துறைகளில் பிரதிபலிக்கவில்லை. சமூக-பொருளாதார வாழ்வு குடியேற்ற நாட்டுச்சாயலைக் கொண்டதாகவே காணப்பட்டது. கல்வியிலும் அத் தன்மையே மேலோங்கி நின்றது.

சுதந்திரத்தின் பின், குடியேற்றநாட்டுப் பாணியிலான கல்வி அமைப்பினை நாட்டுக்குகந்த தேசியக் கல்வி அமைப்பாக மாற்றும் நெறியில் மூன்று கட்டாய தேவைகள் முன்னெழுந்தன :

1. நாட்டில் இடம்பெற்றிருந்த குடியேற்ற நாட்டுக் கலாச்சாரத்தினை மறுத்து கல்விக்கூடாகத் தேசியக் கலாச்சாரத்துக்கு புத்துயிர் கொடுக்கும் தேவை.
2. ஒரு பன்மைச் சமூகத்தில் தேசிய ஒருமைப்பாட்டின் / ஒன்றிணைப்பின் முக்கியத்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடையும் ஒரு சமூகத்தில் கல்வியின் பொருத்தப்பாட்டு நோக்கின் மீள்பார்வை — குறிப்பாக அபிவிருத்தித் தேவைகளுக்கு ஈடுசெய்யும் வகையில் தொழிலாளர் சக்தியினை வளப்படுத்துதல்.

ஆனால், அவை நடைமுறை அடிப்படையிற் கவனத்திற்குள்ளாக நீண்டகாலம் எடுத்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கல்வி அரசுக்கு வேண்டிய ஆளணியை உருவாக்குவதையே இலக்காகக் கொண்டிருந்தது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத்துக்குப் பொருந்தக்கூடிய, அவர்களது ஆட்சியை இலங்கையிற் தாங்கிப்பிடிக்கக் கூடிய, ஓர் ஊழிய சேவையை, 'நிறத்தாலும் பிறப்பாலும் இலங்கையராகவும் சிந்தனையாலும் செயலாலும் ஆங்கிலேயராகவும்' தொழிற்படும் சேவையை, உருவாக்கும் வகையில் கல்வி திட்டமிடப்பட்டது. - அதன் வாயிலாகக் கிடைத்த சொகுசான அரச உத்தியோக வாழ்வு முழுச்சமுதாயத்தையுமே அதன் வலைக்குள் அகப்படுத்தியிருந்தது. அம்மாயில், நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்க மறந்த / மறுத்த, உடை நலுங்கா உத்தியோக மாயையில் மூழ்கி அக்கரைப் பச்சையாக அரச உத்தியோகத்தை நாடித் தவங்கிடந்த, ஒரு வாலிப சமுதாயம் உருப்பெற்றது. சுதந்திரம் பெற்ற பின்பும் இப்போக்கில் காத்திரமான மாற்றம் எதும் ஏற்படவில்லை / ஏற்படுத்தப்படவில்லை. அதற்கு வேண்டிய வகையில் கல்வியை முழுப்பார்வையில் நோக்க அன்றைய தலைமை தவறியதன் விளைவாகச் சுதந்திரம் பெற்றும் பிரச்சனைகளைப் பெருக்கிய நிலையே வளர்ந்தது.

காலத்துக்குக் காலம் தோன்றிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் முயற்சிகளாகச் சில சீர்திருத்தங்கள் கல்வியிலும் மேற்கொள்ளப்பட்டதுண்டு. தொகை ரீதியாக, பள்ளிக்கூடங்கள், மாணவர்கள் மட்டத்தில், பெருக்கம் ஏற்பட்டது உண்மை. இப்பெருக்கத்தின் பின்னணியில், கல்வி வசதிகளையும் வாய்ப்புக்களையும் பரவலாக்கிய, இலவசக்கல்வி, தாய்மொழிக் கல்வி, மத்திய மகா வித்தியாலயங்களின் விருத்தி, போன்ற செயற்பாடுகளைக் காணலாம். இவ் வளர்ச்சியின் தொடர்பேறாக 1961 இல் பள்ளிக்கூடங்களின் முகாமைத்துவம் அரசின் கைக்கு மாறும் நிலை

ஏற்பட்டது. இவை எல்லாம் இருந்தும், கல்வி மக்களுக்குப் பயன் தருவதாக இருக்கவில்லை. விவசாய, கைத்தொழில் துறைகளில் ஈடுபட்ட 70% மக்கள் கூட்டம் கல்வியினால் கவனிக்கப்படவில்லை. ஏட்டுக்கல்வி தனது பிடியினை இறுக்கமானதாகவே தொடர்ந்து வைத்திருந்தது. அந்தக் கல்வி உருவாக்கிய இளைஞர் தொகுதி அன்றைய சமுதாயத்திற் பொருந்தாத / பொருந்தா மடியாக ஒன்றாகவே காணப்பட்டது. இந் நிலைமை 1971 ஆம் ஆண்டில் வெளியாகிய டட்லி சீயர்ஸ் அறிக்கையில் அழுத்திக் காட்டப்பட்டது.

பள்ளிக்கூடங்களோ, பல்கலைக்கழகங்களோ நாட்டின் நலனுக்கேற்ப இயக்கப்படாமையும், இடைநிலைப் பள்ளிக்கூடங்கள் உடைநலுங்கா உத்தியோகங்களுக்கே மாணவர்களைத் தயாரிக்கும் கருமத்தில் கண்ணாயிருந்ததும், மாணவர்கள் தேர்வையே இலக்காகக் கொண்டு கல்வி பயின்றதும் சுட்டிகாட்டப்பட்டன. அந்த வழியில் உருவாகிய கல்வி 'பொருளாதாரத்தின் தேவைக்குப் பொருந்தாத ஆட்களை அதிக செலவில் உற்பத்தியாக்குவதனால் விரயமாகவே முடிந்தது' என்பது சீயர்ஸின் கண்டனமாக இருந்தது.

1970 இல் இடம்பெற்ற தேர்தலையடுத்தும் பதவிக்கு வந்த இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசு கத்தெரித்த பொருளாதாரத்தின் பாதையும் கல்வியின் பாதையும் வெவ்வேறு திக்குகளை நோக்கியவையாக விருந்தன. எந்தச் சமூகத்துக்காகக் கல்வி செயற்பட வேண்டுமோ அந்தச் சமூகத்தின் தேவைகளைக் கல்வியினால் நிறைவுசெய்ய முடியவில்லை. அதன் பயனாக இளைஞர் சமுதாயம் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டது. அதன் வெடிப்பே 1971 இல் இடம்பெற்ற இளைஞர் புரட்சி.

ஒரு புறம் அரசியல் நெருக்கடி, மறுபுறம் சமூக-பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு மத்தியில் அரசு திண்டாடியது. தீர்வுக்கு ஒரு வழியாகக் கல்வியில் புதிய பாதையைக் காண அரசு முற்பட்டது. அதுவே 'கல்வியின் புதிய பாதை' என அழைக்கப்பட்ட 1972 இன் கல்வியைச் சீர்திருத்தங்கள். நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பொருத்தமற்ற கல்வியைச் சீரமைத்து, ஒரு சுதந்திர நாட்டுக்குப் பொருத்தமான கல்வி முறையைப் படிப்படியாகக் கட்டியெழுப்புவது அதன் நோக்கமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, கல்வியில் திருத்தங்களைச் செய்வது காலத்தின் தேவையாக இருந்தது. 1970 க்குப் பின் வளர்ச்சிக் கிராமத்தில், 1972 ச் சீர்திருத்தங்களுக்குப் பின், காணப்பட்ட பிரச்சனைகள் 1981 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட சீர்திருத்த ஆலோசனைகளுக்கூடாக அணுகப்பட்டன. இவை இரண்டுக்குமூடாகவே இக் காலத்துப் புதிய போக்குகள் பரிசீலிக்கப்படுகின்றன.

## கருத்திற்கொள்ளப்பட்ட நலிவுகள்

நாட்டின் நலிவுக்குக் கல்வியில் இடம்பெற்றிருந்த குறைபாடுகளும் காரணமாக இருந்தன என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையில் அவற்றைக் களைவதன் மூலம், முன்னேற்றங்காண அரசு முனைந்தது. இந்த வகையில் 1972 இல் முன்வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் இலங்கையின் கல்வி வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவை. அதற்குமுன் கல்வியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், கல்விப் பரப்பை முழுமையாக நோக்காது, குறிப்பிட்ட அம்சங்களில் மட்டும் கவனம் செலுத்தியிருந்தன. அக்கவனம் பிரச்சினையின் விளிம்பைத் தொட்டதேதவிர அதனுட் செல்லவில்லை. புதிய பாதை கல்விப் பரப்பு முழுவதையுமே அணுகியது. கல்வியின் செயற்பாட்டிலும் உருவமைப்பிலும் இடம்பெற்றது. குறைபாடுகளை இனங்கண்டு அவற்றுக்குப் பரிகாரந்தேடும் வகையில் அச்சிந்தனைகள் அமைந்திருந்தன.

பள்ளிக்கூட மட்டத்திலான கல்வி மாணவரிடையே ஆர்வத்தை வளர்ப்பதாக இருக்கவில்லை. தாம் பெற்ற கல்விக்கும் தமது அன்றாட வாழ்க்கைக்கும் தொடர்புகாண முடியாத மாணவர் மத்தியில் கல்வியில் நாட்டம் குறைவானதாகவே இருந்தது. முதலாம் வகுப்பில் பள்ளிக்கூடத்தில் சேரும் மாணவ தொகையில் கணிசமானோர் இடைநிலைக் கல்வியை நிறைவுசெய்யாது இடையில் விலகிவிடுவது பிரச்சினையாக இருந்தது. பள்ளிக்கூடக் கலைத்திட்டம் வாழ்க்கைப் பொருத்தப்பாட்டு நிலையில் தவறியதாகக்காணப்பட்டது. அந்நிலையை மாற்றி, கலைத்திட்டத்தை வாழ்க்கைப் பொருண்மையுடையதாச் செய்வதன்மூலம், மாணவர்கள், தமது இடைநிலைக கல்வி முடியும் வரையிலாவது, பள்ளிக்கூடப் பருவப் பாருபாட்டில் பொருத்தமான மாற்றமைப்பும் கலைத்

திட்டப் புனரமைப்பும் இவ் எதிர்பார்ப்பை நிறைவுசெய்யுமெனக் கருதப்பட்டது. (அத்திட்டத்தினைப் பரிசீலிக்கும்போது அதனை உருவாக்கியவர்கள் கல்வியியற் கோட்பாடுகள், அனுபவங்கள், கலைத்திட்ட நுட்பங்கள் ஆசிரியத்துவம்சார் நெறி முறைகள் ஆகியவற்றினால் வழிநடத்தப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது)

இவற்றுக்குமப்பால், மூன்றாம் நிலைக் கல்விப்பரப்பில், பல்கலைக்கழகங்களின் அமைப்புமுறை, கல்வி நெறிகள் பொருத்தக் குறைபாடுள்ளனவாக இனம்காணப்பட்டன. ஆசிரியர் பயிற்சியில் நிறுவன ரீதியில் குறைபாடுகள் கவனிக்கப்பட்டன. அத்துடன் இடைநிலைக்கல்வியை முடித்துக்கொண்ட மாணவர்களுள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படாதவர்க்குக் கல்வியைத் தொடரும் வாய்ப்புக்கள் அருகியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

1977 இல் பொதுத்தேர்தலுக்குப்பின் பதவியேற்ற தேசியக் கட்சி அரசின் நடைமுறையில் கல்வி தொடர்பாக அதிகம் வேறுபாடு காணப்படாவிடினும், 1981 இல் அவர்கள் முன்வைத்த கல்விச் சீர்திருத்தத்துக்கான ஆலோசனைகள் சுட்டிக்காட்டிய நலிவுகளும் கவனத்திற்கொள்ளத்தக்கவை. அவ் ஆலோசனைகள் கோடிட்ட நலிவுகள் சில:-

1. அரசிடமிருந்து கிடைக்கும் மூல வளங்களுக்கும், பெற்றோரிடையே தனித்த செல்வாக்குக்கும் பள்ளிக்கூடங்களுக்கிடையிலான போட்டாபோட்டி அதன் விளைவாக "பெரியனவும் செல்வம் மிக்கனவுமான சிற்சில பாடசாலைகள் மேன்மேலும் பெரியனவும் செல்வம் மிக்கனவுமாக வளர்ந்து வர, சிறியனவும் வறியவையுமான பாடசாலைகள் மேன்மேலும் வறுமைகூர்ந்து வருகின்றன".

2. தேர்வுகளுக்கு மிகையான அழுத்தம் கொடுக்கப்பட்டதால் "கல்வியின் உள்ளடக்கம் வளங்குன்றி வறிதாகிவிட்டது. இணைப்பாடவிதான (கலைத்திட்ட) முயற்சிகளின் வாயிலாக வந்துறுகின்ற ஆற்றலும் அருமந்த அந்தப் பெறுபேறுகள் சுருங்கிவிட்டன. உச்சியை அடைவதற்கு நிகழும் பூசலுக்கே முதலிடம் கொடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவதால், அதனை அடையவியலாத பெரும்பாலாரின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன''

3. ''தேசிய மட்டத்தில் எழுத்துப் பரீட்சைகள் வாயிலாகச் சோதிக்கத்தக்கத் பாடவிடயத்திலேயே பெரிதுங் கவனஞ் செலுத்தப்படுகின்றது. மற்றும் அதற்கு ஒப்பான அல்லது அதிலும் முக்கியமான பாடவிதான அமிசங்களை — உண்ணாட்டு இயைபின் உள்ளடக்கமும் செய்முறைப்பாடங்களும் என்றித்தகைய அமிசங்களை புறக்கணிக்கும் நாட்டம் காணப்படுகின்றது''

4 ''ஆசிரிய சேவையின் வினையாற்றல் பற்பல காரணிகளாற் பாதிக்கப்படுகின்றது. சேவைமுன் பயிற்சி யாதுமில்லாத பத்திரத் தகைமையையே தனியோர் அடிப்படையாகக்கொண்டு ஆசிரியர்களைச் சேவைக்கமர்த்தல், தாழ்ந்த சம்பள அளவுத்திட்டங்களும் அதனால் ஆசிரியத் தொழிலில் அதிருப்தியும், ஆசிரியரிடையே பாடசாலை மாட்டு விசுவாச உணர்ச்சியையும் ஈடுபாட்டையும் தாண்டிவிடத் தவறுகின்ற அனைத்துத் தீவக இடமாற்றச் சேவை.''

அத்தகைய நலிவுகள் நடைமுறைப் பாடசாலை முறைமையினையே மெலியச்செய்துவிட்டன என்பது வற்புறுத்தப்பட்டது.

இவற்றுடன், 1981 கல்விச் சீர்திருத்த ஆலோசனைகள் மூன்றாம் நிலைக் கல்வியில் — பல்கலைக்கழகக் கல்வி உள்ளிட்ட கல்வியில் — வாய்ப்புக்களின் குறைவிலும் கவனத்தைத் திருப்பின.

இதுவரை குறிப்பிடப்பட்ட வகையில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை நீக்கும் நோக்கில் புதிய போக்குகள் இடம்பெறுவதைக் காணலாம். அவற்றை வெவ்வேறான அமிசங்களின் அடிப்படையில் பகுத்து நோக்குவோம்.

## பள்ளிக்கூட அமைப்பு

கல்வியின் செயற்பாட்டில் திருத்தங்கள் மேற்கொள்ள முயல்பவர் எவரும் பள்ளிக்கூட அமைப்பினைக் கருத்திற்கெடுக்காமல் விடமுடியாது இத்தன்மையை நமது கருத்திலுள்ள காலப்பகுதியிலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972 இல் புகுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் பள்ளிக்கூட அமைப்பினை 6 வயதினை ஆரம்ப வயதாகக் கொண்டு பின்வருமாறு அமைத்தன:-

1. 1—5 வகுப்பு, வயது 6—11 தொடக்கநிலை
2. 6—9 வகுப்பு, வயது 12—15 கனிட்ட இடைநிலை
3. 10—11 வகுப்பு, வயது 10—17, சிரேட்ட இடைநிலை (12 ஆம் வகுப்பு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்படுவோருக்கு 'அடியெடுக்கும் ஆண்டு')

தொடக்கநிலையின் தத்துவம் ''பிள்ளைகள் அறியாதவகையில் பாடசாலை வாழ்க்கையில் அவர்களை நுழையச்செய்து வருங்காலத்தில் அவர்கள் மீது சுமத்தப்படவுள்ள பொறுப்புக்களைத் தாக்கும் பக்குவமுடையவர்களாக்கும்'' நோக்கில் அமைந்தது. பாடசாலை மாணவரின் தகுதிப்பாடுகளையும் அளந்து அவர்களுக்கு ஏற்றதுறை எது எனத் தீர்மானிப்பதற்கான'' அடிப்படையாக அந்த மட்டம் கொள்ளப்படவில்லை.

கனிட்ட இடைநிலை மாணவர்களின் ஆற்றல்களையும் தகுதிப்பாடுகளையும் அளந்து ''அவர்களின் நாட்டங்களை இனங்கண்டு அவர்களுக்கு அளிக்கவேண்டிய கல்வி எதுவென்று தீர்மானித்து அத்துறையில் முன்னேறுவதற்கு அவர்களை வழிநடத்தும்'' நோக்கங் கொண்டதாய் கொள்ளப்பட்டது.

சிரேட்ட இடைநிலை, கனிட்ட இடைநிலையில் திறமை காட்டுபவர்கள் தொடர்ந்து உயர்கல்வியை நோக்கிச் செல்லக் கூடியதான, ஈராண்டுக் கல்வியை கொண்டிருந்தது. சிரேட்ட இடைநிலைக் கல்வியைத் தொடரும் வாய்ப்பைப் பெறாதவர்கள் தொழில் நுட்பம், வர்த்தகம், கவின்கலைகள் ஆகியவற்றுக்குரிய கனிட்ட கல்லூரிகளில் இடம்பெறலாம். (இவ் இரு முறைகள் மூலமும் பல்கலைக்கழகம் அல்லது அதையொத்த உயர்கல்வியைப் பெறலாம் என வகுக்கப்பட்டது.) 11 ஆம் வகுப்பில் கற்றுத்தேறும் மாணவன் பல்கலைக்கழகம்/தொழில் நுட்பம், வர்த்தகம், கவின் கலை, தொழிற்துறை (ஆசிரியர் பயிற்சி உட்பட) என்பவற்றுக்

குரிய சிரேட்ட கல்வித் தாபனம் / தொழில் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் சேரலாம்.

இடைநிலைக்கு அப்பால் கல்வியைத் தொடர்வதற்கு, பல் கலைக்கழகம் தவிர்ந்த, வேறு நிறுவனங்களில்லாத குறையை அந்தந்தத் துறைகளுக்குரிய சிரேட்ட கல்வித் தாபனங்கள் போக்கு மெனக் கருதப்பட்டது.

அந்தந்த நிலயின் முழுமையையும் நிறைவையும் குறிப் பனவாகத் தேர்வுகளும் குறிப்பிடப்பட்டன. ஐந்தாம் ஆண்டு முடி வுத் தேர்வு, கனிட்ட இடைநிலை முடிவில் பொதுக் கல்வித் தேசியச் சான்றிதழ் தேர்வும் சிரேட்ட இடைநிலை முடிவில் உயர் கல்வி தேசிய சான்றிதழ் தேர்வும் முன்வைக்கப்பட்டன.

1981 இன் ஆலோசனைகள் முன்பிருந்த பள்ளிக்கூட அமைப் பில் ஒரு சில மாற்றங்களைக் கருத்திற் கொண்டிருந்தன. அவற் றுக்கேற்ப புதிதாக அமைந்த பள்ளிக்கூட முறைமை பின்வருமாறு.

1. ஆரம்ப நிலை – 1 – 5 ஆண்டுகள்
2. கனிட்ட இடைநிலை – 6 – 8 ஆண்டுகள்
3. சிரேட்ட இடைநிலை – 9 – 11 ஆண்டுகள்
4. கல்லூரி மட்டம் 12 – 13 ஆண்டுகள்

(இப் பகுப்பு முன்னைய வழக்கில் 'வகுப்பு' என அழைக் கப்பட்டதற்குப் பதிலாக 'ஆண்டு' என்ற பிரயோகத்தைப் புகுத் தியது) முதலாம் ஆண்டில் பள்ளிக்கூடத்தில் சேரும் பிள்ளை 5 வயதை நிறைவுசெய்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந் தனர். கனிட்ட இடைநிலை மட்டம் மூன்றாண்டுக் கல்வியை யும், சிரேட்ட இடைநிலை மட்டம் மூன்றாண்டு கல்வியையும் கொண்டிருக்கும் இயல்பில் முன்னைய நடைமுறையிருந்து வேறு வேறுபட்டுக் காணப்பட்டன. 'கல்லூரி மட்டம்' என்ற புதிய பாவனை பல்கலைக்கழக அனுமதிக்கான ஆயத்தத்துக்கு அழுத்தம் கொடுப்பது போலத் தோற்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் அமைக்கப்பட்ட பொதுக்கல்வி அகற்சி 'பிள்ளையின் வளர்ச்சியினைப் பயனுறு வாய்ப்ப மேம்படுத்துவதோடு பிள்ளை எதிர்காலத்தில் வாழ்வும் தொழில் புரியவும் ஏற்றவாறு தயார்படுத்துவதையும் 'நோக்கமாகக் கொண்டிருந்தது. அதன் ஒவ்வொரு பாகமும் 'பிள்ளையினது வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் வழங்கத்தக்க உதவியினை உத்தம அளவுக்கு இயலச் செய்யும் வகையில்' வகுக்கப்பட்டது. அந்த அகற்சியின் ஒவ்வொரு மட்ட முடிவையும் குறிக்கும் வகையில் தேர்வுகள் வகுக்கப்பட்டன. புதிய நடைமுறையாக எட்டாம் ஆண்டு முடிவில் ஒரு தேர்வும் 72 இல் அறிமுகஞ் செய்யப்பட்ட பொதுக் கல்வித் தேசியச் சான்றிதழ், உயர்கல்வித் தேசியச் சான்றிதழ் என்பன கைவிடப்பட்டு பழைய வழக்கான க. பொ. த. (சா.நி.) க. பொ. த. (உ.நி) தேர்வுகள் மீண்டும் கொண்டுவரப்பட்டன.

புதிய சிந்தனையாக்க கனிட்ட இடைநிலைக்கு அப்பால் நூல்சார் கல்வியைத் தொடர விரும்பாதவர்கள் க. பொ. த. தொழினுட்ப நெறிக்குப் போகவும் அல்லது தொழில் பயில் நெறிக்குப் போகவும் வழிவகுக்கப்பட்டது. இவை மூன்றாம் நிலைக்கல்வி அதிகார சபை என அமைக்கப்படவிருந்த சபையின் பொறுப்பில் இயங்குமெனக் குறிப்பிடப்பட்டது. சிரேட்ட இடைநிலைக்கப்பால் கல்லூரிசார் மட்டத்துக்குப் போகாதவர்க்கென மூன்றாம் நிலைக்கல்வி அதிகார சபையின் கீழ் இயங்கவிருந்த தொழில்நுட்ப, வர்த்தக, கவின்கலை, தொழில் பயிலுனர் நெறிகள் என்பன முன்மொழியப்பட்டன. கல்லூரிசார் மட்டம் மூன்றாம் நிலைக்கல்வி அதிகாரசபை நெறிகள் என்ற இரண்டு வழிகளில் பல்கலைக்கழகமோ அல்லது திறந்த பல்கலைக்கழகமோ அவற்றுக்குச் சமமான தொழிற்துறை நெறிகளுக்கோ போகும் வாய்ப்புக்கள் உத்தேசிக்கப்பட்டன.

## கலைத்திட்ட மாற்றங்கள்

எந்தக் கல்வி அமைப்பிலும் அதன் இலக்குகள் செயற்பாடுகள் என்பவற்றுக்கு உயிர்கொடுப்பது அதில் உள்ள பாடப்பரப்புக்கள் / பாடநெறிகள் என்பவற்றை உள்ளடக்கிய கலைத்திட்டமேயாகும். எமது கருத்திற்கொள்ளப்பட்டுள்ள காலப்பகுதியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உண்மை தெளிவாகத் தெரிகின்றது. எமது கல்வி வரலாற்றில் கலைத்திட்டப் பரப்பினில் பாரிய / முழுமையான மாற்றங்கள் இந்தக் காலப்பகுதியிலேயே முயற்சிக்கப்பட்டன. இக் காலத்துக் கல்விப்போக்கில், விசேடமாக 1972 – 77 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில், புதிய போக்கு கலைத்திட்ட மாற்றங்களை அடிப்படையாக் கொண்டதே என்பது முழுமையாகப் பொருந்துவதாகும். கல்வியில் மாணவர்களது விருப்பினை உறுதிப்படுத்துவதோடு, கல்வியை வாழ்க்கைப்பொருண்மையுடையதாகச் செய்வதும் அம் மாற்றங்களின் உந்து சக்தியாக அமைந்தன.

'72ஆம் ஆண்டின் முன்மொழிவுகளில் தொடக்க நிலையாக விருந்த முதல் ஐந்து வகுப்புகளில் சமயம், கல்விமொழி, இரண்டாம் மொழி, கணிதம், உடலியல், அழகியற் செயற்பாடுகள், படைப்பு செயற்பாடுகள் சூழல்சார் செயற்பாடுகள் என்னும் பாடங்கள் இடம் பெற்றன. செயற்பாடுகள் மூலம் மாணவர்களது கல்வியில் அவர்களுடைய நேரடிப் பங்கும் அதன் பயனும் உறுதிப்படுத்தப்படும் எனக் கருதப்பட்டது. போதனையிலும் பார்க்கச் சாதனை கூடிய பயனிகளுக்கும் என்ற கல்விக்கோட்பாடு இதன் அடிப்படையில் செறிந்திருந்தது. அவற்றுக்கூடாகக் கல்வியில் மாணவர்கள் சுயவிருப்புடன் ஈடுபடும் சூழ்நிலை உருவாகும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது.

கனிஷ்ட இடைநிலையில் (6-9 வகுப்புக்கள்) இடம்பெற்ற மாற்றங்கள் மிகவும் காத்திரமானவை. சமயம், கல்விமொழி, இரண்டாம் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, அழகியற்பாடம், சுகாதாரமும் உடலியற் கல்வியும், முன்தொழிற் படிப்பு I, (கமம் வணிகம், மனையியல், மரவேலை, உலோகவேலை, மட்பாண்ட வேலை, நெசவு) முன்தொழிற் படிப்பு II (வீட்டுத்தொழில்கள் உட்பட அவ்வப்பகுதியிலுள்ள பிரதான தொழில்கள்) என்பன பள்ளிக்கூடப் பாடங்களாகப் புகுத்தப்பட்டன.

அம் மாற்றங்களில் கல்வியுலகின் கவனத்தை ஈர்த்த அம்சங்கள் இரண்டு — (1) ஒன்றிணைந்த பாடத்திட்டம். (2) முன்தொழிற் படிப்பு. முன்னர் தனித்தனியாகக் கற்பிக்கப்பட்ட பாடங்களிடையே காணப்பட்ட பொதுமை அடிப்படையில் அவற்றுட் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைக்கப்பட்டன. அவ்விதம் இணைக்கப்பட்டமையால் உருப் பெற்ற பாடங்கள் விஞ்ஞானம், சமூகக்கல்வி என்ற இரண்டுமாகும். முன்பு இரசாயனம், பௌதீகம், உயிரியல் என தனித்தனியாகக் கற்பிக்கப்பட்டவை விஞ்ஞானம் என்ற பெயரில் ஒன்றிணைக்கப் பட்டும், வரலாறு, புவியியல், குடிமையியல் என்பன பொருளியல் சமூகவியல் அம்சங்கள் சிலவும் சேர்க்கப்பட்டு சமூகக்கல்வி என ஒன்றிணைக்கப்பட்டும் கலைத்திட்டத்தில் இடம்பெற்றன. தனித் தனியான பாடங்களாக அந்நெறிகள் முன்னர் கற்பிக்கப்பட்ட போது அம்மட்டத்துக்குப் பொருந்தாத/விரும்பத்தகாத குறுகிய பாதையில் அறிவு செலுத்தப்பட்டது. புதிய ஒன்றிணைப்பின் வழி யில் மாணவனது வாழ்க்கைக்கு வளமூட்டக்கூடிய பரந்த அடிப் படையிலான அறிவு வளர்க்கப்பட்டது.

அழகியற் பாடம் என்ற நெறி இசை, நடனம், சித்திரம் என்ற மூன்றில் விரும்பிய ஒன்றைத் தெரிவுசெய்ய வழிவகுத்தது. நல்லதை நயக்கும் திறனையும் மனப்பாங்கையும் அதற்கூடாக வளர்க்கத் திட்டமிடப்பட்டது. இந்த நயப்புணர்ச்சி மாணவனுடைய ஆளுமையின் நிறைவுக்கு அடிப்படையான ஒன்றாகும் என்பதும் கருத்திற் கொள்ளப்பட்டது.

முன் தொழிற் படிப்புக்கூடாக மாணவன் தொழில் உலகுக்கு அறிமுகம் செய்யப்பட்டு வாழ்க்கையுடன் இணைக்கப்படும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்கும் தொழிற்கல்விக்கும் வேறுபாடு உண்டு. தொழிற்கல்வியானது ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு வேண்டிய அறிவு, திறன் என்பவற்றை வழங்குவதாகும். ஆனால் முன்தொழிற் படிப்பு அன்றாட வாழ்விலும், வேறு எந்த வேலை யிலும். பயன்படக்கூடிய உடலியக்கத் திறன்களைப் பயிற்று வதைக் கருத்திற்கொண்டது. முன் தொழிற்படிப்பு I 'அறிமுறைப் பாடம்' என்ற அடிப்படையில் தொழில்களைப்பற்றிய அடிப்படை அறிவை வழங்குமெனக் கருதப்பட்டது. முன் தொழிற்படிப்பு II அல்லது முன் தொழிற் 'செயன் முறைப்பாடம்' அவ்வப்பகுதியி லுள்ள முக்கிய தொழில்களைப் பயிற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அவற்றுக்கென (I & II) ஒதுக்கப்பட்ட பாட வேளைகளில் ஒன்று நாட்டின் பொருளியலமைப்பினைப் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை அறிவைப் பெறவும் கேத்திர கணித பொறிமுறை வரைவை பயிற்றவும் ஒதுக்கப்பட்டது. கேத்திரகணித பொறி முறை வரைவு எந்தத் தொழிலையும் மேற்கொள்ள உதவக்கூடிய அடிப்படை அறிவை வழங்குமென நம்பப்பட்டது.

முன்தொழிற் படிப்பு என்பது இலங்கைக் கல்வியில் முற்றிலும் புதியதொரு முயற்சியாகும். அதனோடு இணைந்த ஏனைய பாடங்களுடான வழியில் சிறந்த பொதுக் கல்விக்கும் சிறந்த தொழிற்கல்விக்கும் வித்திடலாம் எனக் கொள்ளப்பட்டது. அது வரை காலமும் தொழிலுலகிலிருந்து முற்றிலும் அந்நியப்படுத்தப் படுத்தப்பட்டிருந்த மாணவன் தனது வாழ்வில் தொழில்களைப் பற்றிய அறிவையும் அவற்றினூடான தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்வதனால் அவன் பெறும் கல்வி அர்த்தமுள்ள, நடைமுறைப் பயனைக் குறித்ததாகக் காணப்பட்டது.

முன்தொழிற் படிப்பு நாட்டுக்கே புதியதாகையால் அதற்கெனக் கலைத்திட்டம் தெளிவாக முன்வைக்கப்படவில்லை. ஆசிரியர்களும், சிரேஷ்ட மாணவர்களும், உள்ளூர் தொழில் வினைஞர்களின் துணையுடன் கலைத்திட்டத்தைத் தயாரிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதுவரை கலைத்திட்டச் செயற்பாடுகள் எல்லாம் மேலிடத்தில் உறுதிப்படுத்தப்பட்ட மரபு நீங்கி, ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அதனை உருவாக்குவதில் பங்கெடுக்கும்நிலை தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், துரதிஷ்டவசமாக, இடவேறுபாடு வசதிவேறுபாடு முதலியன முன்தொழிற் படிப்பைக் கற்பிக்கப் பயன்படுத்தப்பட்ட தொழில்கள் இடையே அந்தஸ்து பேதங்களைப் புகுத்தியமை அதன் நோக்கத்தையே சிதறடித்தன.

அவ்விதமான பொதுக் கலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட, ஒன்பதாண்டுக் கல்விக்கூடாக (1 – 9 வகுப்புக்கள்) நாட்டில் கட்டாயக் கல்வியைப் பொருண்மையுடையதாக்கலாம் எனச் சிந்திக்கப்பட்டது. அக் கலைத்திட்டம், பயில்வோருக்கு அதன் பயன்பாடு தெளிவான நிலையில், உரிய காலத்துக்கு முன்பே பள்ளிக்கூடத்தை விட்டு இடைவிலகுவோரின் எண்ணிக்கையைக் குறைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஒன்பதாண்டுக் கலைத்திட்டம் முடியும் வரை எல்லா மாணவர்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடத்துக்கு வரச்செய்ய முடியும் என்ற நம்பிக்கை தொனித்தது. அந்த அடிப்படையில் 6—15 வயது உள்ளிட்ட பருவத்தினர் அனைவரும் கல்விபெறும் சூழ்நிலையை உருவாக்கத் திட்டமிடப்பட்டது.

1981 இன் சீர்திருத்த முன்மொழிவுகள் ஆரம்ப நிலையில் முன்வைத்த கலைத்திட்டம் பிள்ளையின் ஆக்கச் செயற்பாட்டுக்கு அழுத்தம் கொடுத்தன. பிள்ளையிடம் இயல்பாகக் காணப்படும் புதியது காணும் வேட்கையினைத் தூண்டித் தானாகவே விடயங்களை தெரிந்துகொள்ளவிழையும் பாங்கினை வளர்க்கும் முறையில் பாடங்கள் வகுக்கப்பட்டன. போதனைக்குப் பதிலாகச் சாதனைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்ற சிந்தனை வலுப்படுத்தப்பட்டபோதும் ''வாசிப்பு, எழுத்து எண் ஆகியவற்றின் அடிப்படைத் தேர்ச்சிகள் புறக்கணிக்கப்படாது'' அவற்றை ''இயந்திர இயக்க முறையிலன்றித் தேர்ந்தறி பாங்கிற்'' பயிலும் முறைமை புகுத்தப்பட்டது.

கனிஷ்ட இடைநிலையில் புகுத்தப்பட்ட பாடங்கள்சில முன்னைய (1972) போக்கிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டன — முதல் மொழி, சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, அழகியற்கல்வி வாழ்க்கைத் தொழிற் திறன்கள், உடனலவியலும் உடலியற் கல்வியும் என்ற ஒன்பது பாடங்கள் புகுத்தப்பட்டன. அவற்றுடன் பள்ளிக்கூடர் விரும்பினால் நடைமுறைச் சிங்களம்/நடைமுறைத் தமிழ் ஒன்றைப் பத்தாவது பாடமாகக் கற்பிக்கலாம் என வகுக்கப்பட்டது. அக்கலைத்திட்டம் 'மாணாக்கர்கள் ஆரம்ப மட்டத்தில் பயின்றுபெற்ற அடிப்படை அறிவினையும் தேர்ச்சித் திறன்களையும் வலுப்படுத்திக்கொள்ள உதவுவதோடு மேற்கல்விக்கு அத்திவாரம் இடுவதாயும் அமையும். அத்துடன் ஒருசில தொழிற்தொகுதிக்கு ஏற்புடைய இலகுவான தேர்ச்சித் திறன்களைத் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்வதன்மூலம் படிப்படியாக வேலை உலகிற்கு அறிமுகம் செய்யவும் வழிகோலும்'' எனக் குறிப்பிடப்பட்டது. கலைத்திட்டத்துக்கூடாகத் தேசிய ஒருமைப்பாட்டு நோக்கினை வலியுறுத்தும் எண்ணம் முதற்தடவையாக முன்வைக்கப்பட்டது. அதனை மேற்கூறப்பட்ட பாடங்களுள் பொருத்தமான அம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் அடையலாம் என எதிர் பார்த்தனர்.

சிரேட்ட இடைநிலை மட்டத்திலான கலைத்திட்டம் கனிஷ்ட இடைநிலை மட்டத்தைப் பின்பற்றுவதாகவே அமைந்தது. இப் பருவத்துக் கல்வி இருவகைப் பயன்பாடுடையதாகக் கருக்கொள்ளப் பட்டது. இடைநிலை மட்டக்தோடு தொழில்களில் சேருவோருக்கு தகைமைகளை வழங்கும் இறுதிநிலைப் பண்புடையதாகவும், உயர் கல்விக்கும் பேசவோருக்கு உயர்கல்வி உலகுக்கு வழிகாட்டுவதாக வும் திட்டமிடப்பட்டது. இம்மட்டத்திலும் தேசிய ஒருமைப்பாடு நோக் கிற் கொள்ளப்படுவதைக் காணலாம். முன்னைய பருவத்திற் குறிப் பிடப்பட்ட வழிமுறைகளுடன் புதிய ஒரு கருத்துக் புகுந்துகொள் கின்றது. முன்னைய பருவத்தில் விருப்புப் பாடமாக (பத்தாவது பாடமாக) முன்வைக்கப்பட்ட நடைமுறைச் சிங்களம்/நடைமுறைத் தமிழ் இம் மட்டத்தில் அழகியற் பாடத்துக்கு மாற்றாகக் கொள் ளப்படும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## மூன்றாம் நிலை மட்டம்

கருத்திற் கொள்ளப்படுப் காலப் பகுதியாகிய 1970க்குப் பிற் பட்ட காலப் பகுதி பள்ளிக்கூட மட்டத்துக்கும் அப்பால் மூன்றாம் நிலை மட்டத்திலும் புதிய போக்குகளை வெளிப்படுத்துவதைக் காணலாம். முக்கியமான சிந்தனைகளும் செயற்பாடுகளும் பல் கலைக்கழகக் கல்வியோடு தொடர்புபட்டவையாக இருப்பினும் ஏனைய பரப்புக்கள் பற்றிய கருத்துக்களும் கவனத்தில் கொள் ளப்படவேண்டியவையேயாகும்.

1972ச் சீர்திருத்தங்கள் பல்கலைக்கழகத்துக்குப் புறம்பாக பல்கலைக்கழக கல்விக்கு அனுமதி பெறமுடியாத மாணவர்க்கென கவின்கலை, வணிகம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்கும் நிறுவனங்கள் பற்றிக் குறிப் பிட்டன. ஆசிரியர் பயிற்சியும் அதே வழியில் சிந்திக்கப்பட்டது. வழக்கிலிருந்த ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் பொதுப்பயிற்சிக் கல்லூரிகள், சிறப்புப் பயிற்சிக் கல்லூரிகள் என இருவகைகளாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கப்பட உத்தேசிக்கப்பட்டது. பொதுப்பயிற்சிக் கல்லூரிகள் 1—5 வகுப்பு ஆசிரியர்களுக்குக்காகவும், சிறப்புப் பயிற்சிக் கல்லூரிகள் 6—9 வகுப்பு ஆசிரியர்களுக்காகவும் கருக்கொள்ளப்பட்டன. அவற்றின் வளர்ச்சி சம்பள வேறுபாடற்ற சமநிலைக்கு வித்திடுவதாகத் தோற்றினாலும் திட்டம் எதுவும் தெளிவானதாக இருக்கவில்லை. பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளிலிருந்து மூன்றாண்டுகளாக உயர்த்தப்படவிருந்தது. கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம் ஆசிரியர் கைந்நூல்கள் மூலம் பயிற்சிபெறாத ஆசிரியர்களுக்கு வழிகாட்டுவதாகும்.

இவை தொடர்பான 1981 ஆம் ஆண்டுன் முன்மொழிவுகளில் பல்கலைக்கழகம், ஆசிரிய பயிற்சி ஆகிய பரப்புகளுக்குப் புறம்பாக மூன்றாம் நிலைக் கல்விச் செயற்பாடுகளை மூன்றாம் நிலைக்கல்வி அதிகாரசபை என்ற அமைப்பின் கீழ் வளர்க்க உத்தேசிக்கப்பட்டது. ஆசிரிய கல்வியில் பயிற்சிக் கல்லூரிகளின் வளர்ச்சியோடு கல்வியியற் கல்லூரிகள் போன்ற தொழிற்துறைக் கல்லூரிகள் பயனளிக்கும் என எண்ணப்பட்டது.

பள்ளிக்கூட மட்டத்துக்கும் அப்பால், இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உள்ளாகியதும், பாரிய பிரச்சினைகளை உருவாக்கியதும் பல்கலைக்கழக மட்டத்திலான போக்குகளேயாகும். பல்கலைக்கழகக் கல்வி தொடர்பாக இக்காலப் பகுதியில் தொடக்கத்தில் இரண்டு பிரதான செயன்முறைகளை அவதானிக்கலாம். அவற்றைத் தூண்டிவிடுவதாக 1971 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இளைஞர் புரட்சி விளங்கியது என்று கொண்டால் தவறாகாது. அப்புரட்சிக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறப்பட்டமை/கொள்ளப்பட்டமை பல்கலைக்கழகங்களை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் எண்ணத்தைத் தோற்றுவித்தது. 71 இல் வெடித்த இளைஞர் புரட்சியைத் தோற்றுவித்து வளர்த்தவை பல்கலைக்கழகங்களில் காணப்பட்ட, நாடு சுதந்திரம்பெற்ற காலத்திலிருந்துதோன்றி வளர்ந்துவந்த, அடிப்படைப் பிரச்சினைகள் என ஆரம்பத்தில் சுட்டப்பட்ட காரணிகள் மீண்டும் நினைவுகூரத்தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாக 1972 ஆம் ஆண்டு உயர்கல்விச் சட்டம் அமைந்தது. அன்றைய நிலையில் தனித்தனி அமைப்புகளாகச் செயற்பட்டுவந்த ஐந்து பல்கலைக்கழகங்களும் — இலங்கைப் பல்கலைக்கழகம் என்ற மத்திய வட்டகை அமைப்பின்கீழ் — ஐந்து வளாகங்களாக மாற்றியமைக்கப்பட்டன. இவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் அமைச்சரின் கையில் இடம்பெற்றது. 'புனரமைப்பு' என்ற அந்த நடவடிக்கையை நியாயப்படுத்தக் கூறப்பட்ட காரணம் பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் ஒரு நிருவாக அமைப்பாக்குவதன் மூலம் செலவுச் சுருக்கத்தை உறுதிப்படுத்துவதுடன் பாடநெறிகளில் பயனற்ற / விரும்பத்தகாத இரட்டிப்பு நடைமுறைகளைத் தவிர்ப்பதும் எனக் கூறப்பட்டது. (அக்காலத்துக் கணிப்பின்படி செலவில் சுருக்கத்துக்குப் பதிலாக 15% அதிகரிப்பே காணப்பட்டது.)

பல்கலைக்கழகக் கல்வியில் இக்காலப்பகுதியின் ஆரம்பத்தில் தோன்றிய புதிய போக்குகளில், பல்கலைக்கழக நிருவாக மத்தியப்படுத்தல் செயற்பாட்டுக்கும் மேலான, இரண்டாவது செயற்பாடு பல்கலைக்கழக மட்டத்தில் இடம்பெற்றிருந்த கற்கைநெறிகள் தொடர்பானதாகும். அன்றைய கட்டத்தில் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்பட்டுவந்த நெறிகள் அதிக நூல்சார்புடையவையாகவும் வாழ்க்கைப் பொருத்தப்பாடு குறைந்தவையாகவும் இருந்தமையும், அதனால் உருவாகிய பிரச்சினைகளும், ஏற்கனவே குறிப்பிடப்பட்டன. விவசாய-கைத்தொழிற் பொருளாதார அமைப்பைக் கொண்ட சமூகத்தில் கலைத்துறைத் தகைமைகளுடன் வெளியேறிய பெருந்தொகையினரான பட்டதாரிகள் தொழிற் தொடர்பில் பொருத்தப்பாடற்றவர்களாகவே விளங்கினர். அவர்கள் தமக்குப் பொருத்தமான தொழில் எதையும் பெற முடியாதவர்களாகவும், தாம் வாழ்ந்த சமூகத்திற்குப் பயன்படக்கூடிய தொழில் எதையும் செய்யும் திறனற்றவர்களாகவும் திக்குமுக்காடும் நிலைமை காணப்பட்டது. அக் குறைபாட்டினை நீக்கி, உயர்கல்வியைச் சமூகப் பயனுள்ளதாக ஆக்கும் முயற்சியில், தொழில்சார் கற்கைநெறிகள், ஆரம்பிக்கப்பட்டன.

தொழில்சார் கற்கை நெறிகள், வளர்ச்சியுறும் சமூக-பொருளாதார அமைப்பில் பயனுள்ள வகையில் தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியில் ஈடுபடுத்தப்படக் கூடிய, பல்கலைக்கழகப் பட்டதாரி ஆளணியொன்றினை உற்பத்தியாக்கும் நோக்கினைக் கொண்டிருந்தன. 1972 – 76க்குரிய ஐந்தாண்டுக் கல்வித் திட்டம் குறிப்பிட்டதுபோல 'கல்வியமைப்பின் வெளியீடுகளான பயிற்சிகிறன்கள், மனப்பாங்குகள், அபிலாசைகள் அனைத்தும் சமூக – பொருளாதார சூழலுடன் தொடர்புபடுத்தப்படவேண்டும்' எனக் கருதப்பட்டது. அந்தத் தீர்மானத்தின்படி, பொதுநிதியும் வரிவிதிப்பும், கல்வி, பெருந்தோட்ட முகாமைத்துவமும் மதிப்பீடும், வெகுசனத் தொடர்பு, நூலகக்கலை, அபிவிருத்திக் கற்கைநெறி என்ற புதிய கற்கைநெறிகள் பல்கலைக்கழகக் கல்வியில் இடம் பெற்றன.

உயர்கல்வியை நாடிய ஆயிரக்கணக்கான மாணவர்கள் அதற்குரிய இடவசதி இல்லாமையினால், உயர்கல்வியைப் பெற முடியாத அவலநிலைமையைப் போக்கும் நோக்குடன் சிறந்த பல்கலைக்கழகத்தை நிறுவுவது என்ற செயற்பாடும் இக்காலத்தில் பல்கலைக்கழகக் கல்வியில் ஒரு புதிய போக்கு எனலாம்.

இக்காலப் பகுதியில் பல்கலைக்கழகக் கல்வியில் தோன்றிய இன்னொரு புதிய போக்கு, நாட்டின் வாழ்க்கையைச் சகல துறைகளிலும் பாதிப்புக்குள்ளாக்கிய போக்கு, பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக முன்வைக்கப்பட்ட கொள்கையாகும். நாட்டில் தாய்மொழிக்கான கல்வி என்ற அடிப்படையில் கல்வி விருத்தியில் ஏற்பட்ட பெருக்கம் அறுபதுகளில் பல்கலைக்கழக மாணவ எண்ணிக்கையில் திடீர் பெருக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. அந்த வளர்ச்சியில், விஞ்ஞானம்சார் நெறிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களிடையே, விகிதாசார அடிப்படையில், சிங்கள மாணவர்களிலும் பார்க்க தமிழ் மாணவர் அதிகமாகக் காணப்பட்டமை பல்வகைப்பட்ட பிரசாரங்களுக்கு காலாயிருந்தது. பெருமளவிலான இன உணர்வுக் காழ்ப்புடன் கூடிய அரசியற் பக்கச்சாய்வுகளின் விளைவாக 1970இல் பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வழக்குப் புகுத்தப்பட்டது. அக் கொள்கையின் மறுக்களும், காலப்போக்கில் பல்வகைப்பட்ட அழுத்தங்கள் காரணமாக அதில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களும், வரலாற்றில் இடம்பெற்று விட்டன. அவற்றின் பெறுபேறுகள் எமது சமூகத்தின் இன்றைய அவலங்கள் அனைத்

துக்கும் வித்திட்டன என்பதை அறியாதவர் எவரும் எம்மத்தியில் இருக்கமுடியாது.

1977 இல் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசின் கொள்கைகள், பல்கலைக்கழகக் கல்வி தொடர்பாக, இரண்டொரு விடயங்கள் தவிர, பொதுப்படையாக முன்னைய போக்கினைத் தொடர்வனவாகவே காணப்பட்டன. நிருவாகத்தைப் பொறுத்தமட்டில் பல்கலைக்கழகங்களின் சுயாதீனம் மீளளிக்கப்படுகின்றது என்ற கருத்துடன், 1972க்கு முந்திய நிலைப்பாட்டில், தனித்தனிப் பல்கலைக்கழகங்கள் தோன்றின. அவற்றின் எண்ணிக்கையில் பெருக்கமும் மாணவர் அனுமதியில் அதிகரிப்பும் வளர்ச்சி வழியில் ஏற்பட்டவையேயாகும். பல்கலைக்கழகக் கல்வியின் செயற்பாட்டை 'ஒன்றிணைப்பதாக' இயங்குகின்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு புதியதொரு படைப்பாகும்.

பல்கலைக்கழகங்களின் கற்கை நெறிகளில் முன்னைய அரசுக் காலத்தில் புதியதாகப் புகுந்துகொண்ட தொழில்சார் கற்கை நெறிகள் இடைநடுவில் கைவிடப்படுவதைக் காணலாம். அக் கற்கை நெறிகள் முதன்முதல் தொடங்கப்பட்டபோது அவற்றையொட்டிய உயர்வான எதிர்பார்ப்புக்கள் பல. பல்வேறு காரணங்களினால் அவை வெற்றிகரமாகச் செயற்படமுடியவில்லை. 77 இல் புதிய அரசு பதவி ஏற்றுக்கொண்டபோது எடுக்க தீர்மானங்களில் ஒன்று அக் கற்கை நெறிகளைக் கைவிடுவதென்பதாகும். மரபுவழியான கற்கைநெறிகள் மீண்டும் முதன்மை பெறும் நிலைமையே காணப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் நடைமுறையுடன் புகுந்துவிட்ட விகிதாசாரச் சிந்தனைகள் - திறமை, மாவட்டம், பின்தங்கிய பிரதேசம் என்ற அடிப்படையிலானவை - தொடர்வதைக் காண்கிறோம். திறமைக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் பல மட்டங்களிலும் பல இடங்களிலும் வற்புறுத்தப்பட்டும் 'நன்முறைப் பாரபட்சம்' என்ற சமாதானம் இன்னும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியும் மொழியும்

இக்காலப் பகுதியில் கல்வியில் மொழிக்குரிய பங்களிப்புத் தொடர்பாகப் புதிய போக்குகள் என்ற பார்வை தேசிய ஒருமைப்பாட்டினை மொழிக்கல்வியோடு தொடர்புபடுத்தும் பாங்கில் செலுத்தப்படலாம். போதனாமொழி எது என்ற கொள்கை, 1970க்கு முன்பே ஏற்றுக்கொள்ளப்பட்ட, தாய்மொழித் தத்துவத்தின் தொடர்ச்சியாகவே காணப்பட்டது. அத் தத்துவத்தின் கடைப்பிடிப்பில் புகுந்துவிட்ட கலப்படம் – பல்கலைக்கழகம் தனது போதனாமொழியைத் தீர்மானித்துக்கொள்வது என்ற வழக்கு – எதுவித மாற்றமும் இல்லாமல் தொடரப்பட்டது. எனினும், அதைச் செயற்படுத்துவதில் சில 'மறைவான' குறுக்குவழிகள் முயற்சிக்கப்பட்டனவா என்ற எண்ணம் தலைதூக்குவது தவிர்க்கமுடியாததாகின்றது.

பள்ளிக்கூடக் கலைத்திட்டத்தில் போதனாமொழியாகக் கற்பிக்கப்பட்ட சிங்களம் தமிழ் இரண்டையும் அவற்றின் பெயரால் குறிப்பிடப்படாமல் கல்விமொழி, முதலாம்மொழி என்ற பாவனைகள் அரசியல் பின்னணியில் அமைந்தனவா என்ற சந்தேகம், பழைய வரலாற்றுடன் இணைத்துப் பார்க்கும்போது, நியாயமானதாகவே தோன்றியது. 1968 இல் கல்வி மந்திரியான I M.R.A. இரியகொல முன்வைத்த 'போதனாமொழி பெற்றோர் தெரிவாக அமையவேண்டும்' என்ற முன்மொழிவுகள், தமிழ் மக்கள்மீது சிங்களத்தைத் திணிக்கும் ஒரு மறைமுக நடவடிக்கை என்ற ஏகோபித்த கண்டனத்தின் முன் கைவிடப்பட்டமை வரலாறு. அந்த அனுபவத்தில் புதிய பாவனைப் பெயர்களும் ஏதாவது மாற்றுருவிலான சிந்தனையா? என்ற கேள்வி நியாயமானதாகத் தோன்றியது.

மொழிக்கல்வி தொடர்பாக எமது கவனத்தைக் குறிப்பாகக் கவர்வது இரண்டாம், மூன்றாம் மொழிகள் பற்றிய நடைமுறைகளே. 1970 — 90 என்ற காலப்பகுதி முழுவதிலும் இரண்டாம் மொழி பற்றிய போக்கு ஒன்றித்ததாகவே காணப்பட்டது. இரண்டாம் மொழியாக, தமிழ் – சிங்கள மாணவர்கள் எல்லோர்க்கும், ஆங்கிலத்தைக் கற்பிப்பது என்ற கொள்கையில் பேதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை, அதைக்கற்பிக்க வேண்டிய தேவை பற்றி ஆங்கிலத்தின் சர்வதேச முக்கியத்துவம் உயர்கல்வியில் அதன் உபயோகம் என்பன – கருத்தாகும் வகையில் ஏறத்தாழப் பிரசாரம் செய்வதாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. நடைமுறைப் பிரச்சனைகள் காரணமாக, தகுதி வாய்ந்த / பயிற்றப்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை. அதனை எந்த வகுப்பில் ஆரம்பிப்பது என்பதில் குழப்ப நிலைகள் காணப்பட்டன. 72 இல் மூன்றாம் வகுப்பிலே சிறந்த ஆரம்பம் என ஏற்றுக்கொண்டாலும், முன் குறிப்பிட்ட பிரச்சினைகள் காரணமாக, ஐந்தாம் வகுப்பிலேயே ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது 1981 க்குப் பின் பழையபடி மூன்றாம் ஆண்டில் ஆரம்பிக்கும் வழக்குக்குத் திரும்பினாலும், அண்மைக்காலத்தில் முதலாம் ஆண்டிலேயே ஆரம்பிக்கலாம் என்ற கூற்றுக்கள் இன்றுவரை தெளிவற்ற நிலையிலேயே பிரதிபலிக்கின்றன.

தேசிய ஒருமைப்பாடு, இனங்களுக்கிடையிலான தொடர்பு, புரிந்துணர்வு என்பவற்றுக்கு மொழிக்கல்வியின் பங்களிப்பு அரசுகளின் சிந்தனைகளில் இடம்பெறுவதை இக் காலப்பகுதியில் காணலாம் 72 இன் கல்வியின் புதியபாதை தமிழ் பிள்ளைகட்கு சிங்களம் போதிப்பது அவசியம் எனக் குறிப்பிட்டது மூன்றாம் மொழியாகத் தமிழ் மக்களுக்குச் சிங்களத்தைப் போதிக்க முற்பட்ட அரசு சிங்கள மக்களுக்குத் தமிழ் போதிப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தகைய கொள்கை அரசியல் ஆபத்துக்கு இட்டுச் செல்லும் என்று கருதினார்களோ என்பது புதிராகவே உள்ளது. 'கல்வியின் புதிய பாதை' அது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் 'பல நாடுகளில் சிறுபான்மை இனத்தவருக்குப் பெரும்பான்மையோரின் மொழி கட்டாயமாகப் படிப்பிக்கப்படுகின்றது. ஆனால் எந்த நாட்டிலும் சிறுபான்மையோரின் மொழி பெரும்பான்மையோருக்குக் கட்டாயமாகப் படிப்பிக்கப்படுவதை நாம் அறியோம்" என்று கூறுகின்றது. அந்தத் தொடர்பில் கவிச்சர் லாந்தின் இலட்சிய உதாரணம் எவருடைய கண்ணுக்கும் கருத்துக்கும் படவில்லை என்பது வேதனைக்குரியது. அத்துடன், தமிழைப் போன்று மொழி வளர்ச்சியில் முன்னேறிய சிறுபான்மை மொழி இந்தியா தவிர வேறு நாட்டில் இல்லை என்பதையும் அவர்கள் மறந்தமையும் வேடிக்கையானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77ஆம் ஆண்டில் மாறிய அரசு புதிய வழிமுறைகளைச் சிந்தையிற்கொண்டமை நோக்கத்தக்கது. இணைப்புமொழி என்ற சித்தாந்தம் முன்வைக்கப்பட்டது. மொழிக்கூடாகப் பல்வின / பன் மொழி மக்களை இணைப்பதன் தேவை உணரப்பட்டமை வரவேற் கத்தக்கது. ஆனால் அந்த இணைப்பின் ஊடகமாக முன்வைக் கப்பட்ட மொழியாகிய ஆங்கிலம் அதற்கு பொருத்தமானதுதானா என்பதைக் கொள்கைவகுப்பாளர் கருத்திற்கொள்ளத் தவறிவிட் டனர். ஆங்கிலமே தெரியாத பெரும்பான்மை எண்ணிக்கையின ராகிய சிங்கள தமிழ் மக்களை ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒருவரோடொருவர் இணைந்து செயற்பட வைப்பதற்கு எந்த ஒரு காலத்திலும் ஆங்கிலம் பயனளிக்காது என்ற யதார்த்த நிலை எவராலும் மறக்கமுடியாது. தமிழ் மக்களிடையே சிங்கள மும், சிங்கள மக்களிடையே தமிழும் அக் கைங்கரியத்தை நிறை வேற்றும் என்பதே உண்மையாகும்.

## தொகுப்பு

நமது கவனத்திற் கொள்ளப்பட்ட இருபது ஆண்டுக்காலப் பகுதியில் (1970 — 1990) இலங்கைக் கல்வியின் போக்கினைத் தொகுத்துப் பார்க்கையில் பல புதிய அம்சங்கள் காலத்துக்குக் காலம் புகுத்தப்பட்டன. என்பது உண்மையே. கல்வி மட்டத்தின் பல பகுதிகளுக்கும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் முன்னேற்றத்திற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, 1972 இல் முன்வைக்கப்பட்ட கல்வித் சீர்திருத்தங்களும் 1981 இல் முன்வைக்கப்பட்ட கல்வித் திருத்தத்திற்கான ஆலோசனைகளும் அப் புதிய போக்குகளின் அடிப்படைகளாக அமைந்தன இரு வேறுபட்ட அரசியற் சித்தாந் தங்களைக் கொண்ட இரண்டு அரசாங்கங்களினால் அவை முன் வைக்கப்பட்ட நிலையில் அவற்றுக்கிடையில் காணப்பட்ட தொடர்ச்சிகளோ / தொடர்ச்சியின்மைகளோதான் அச் சிந்தனை களின் வெற்றிதோல்விகளைத் தீர்மானித்தன, அந்த வகையில், அவற்றுட்சில இலங்கையின் கல்வி வரலாற்றில் சம்பவங்களாகவே முடிந்துவிட்டன தொடர்ச்சியான, அர்த்தமான, அமுலாக்க நட-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கைகள் இல்லாமையினால் அவற்றின் மூலம் எதிர்பார்க்கப் பட்ட பயன்கள் கிட்டாமற் போய்விட்டன.

திட்டமிடல் என்பது வெறும் அறிவுசார் முயற்சியாக இருப்பதில் எதுவித அர்த்தமுமில்லை. நோக்கில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் வடையப்படும் ஒழுங்கில் அவை அமைக்கப்படுதல் அவசியம். திட்டத்தின் தொடர்ச்சியும் அடைவும் அது அமுலாக்கப் படும் முறையில் தங்கியுள்ளன என்பது அனுபவ உண்மையாகும். தலைமைத்துவ மட்டத்தில் – அரசோ அல்லது அமைச்சரோ மாற்றம் ஏற்படும்போது முன்னைய கொள்கைகள் கைவிடப் படுவதனால் அல்லது பாரிய மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுவதனால் ஆரம்பத்தில் வகுக்கப்பட்ட நோக்கம் சிதறுண்டுபோவதைக் காணலாம். பெரும்பாலான திட்டங்கள் தோல்வியடைவதற்கு இது ஒரு முக்கிய காரணியாக இனங்காணப்பட்டுள்ளது. எமது நாட்டில் நடந்ததும் இதுவே. அரசாங்கங்கள் மாறியபோதும் அமைச்சர்கள் மாறியபோதும் முன்னைய கொள்கைகளும் மாற்றமடைந்தன. அத்தகைய மாற்றங்கள் எமது கல்வியில் சிறந்த பயனைக் கொடுக்கக்கூடிய சிந்தனைகள் செயலற்றுப்போவதற்கு காரணமாக அமைந்தன என்பது பொருந்தும்.

கற்கை நெறிகளின் முன்வைக்கப்பட்ட ஆக்கபூர்வமான ஆலோசனைகளை ஏற்றமுறையில் தொடரப்படாததனால், சமூகம் பாதிக்கப்பட்டது. பள்ளிக்கூட மட்டத்தில் முன்தொழிற்படிப்பும், பல்கலைக்கழக மட்டத்தில் தொழில்சார் கற்கை நெறிகளும் இதற்குப் பொருத்தமான உதாரணமாகும். முன்தொழிற்படிப்பு கைவிடப்பட்டு, வாழ்க்கைத் தொழிற்திறன்கள், தொழிநுட்பப் பாடங்கள் புகுத்தப் பட்டபோதும் தொழிலின் மகத்துவத்தைப் பேணுதல், வேலை உலகுக்கு மாணவர்களை அறிமுகஞ்செய்தல் என்ற விடயங்கள் சொடுக்கப்பட்டாலும் முன்னையதன் அடிப்படைச் சிறப்பு இன்று இல்லாமற் போய்விட்டது என்பது மறுக்கமுடியாது பல்கலைக்கழக மட்டத்தில் தொழில்சார் கற்கை நெறிகள் கைவிடப்பட்டதும் இத்தகைய நிலமையையே ஏற்படுத்த உள்ளது. 1977க்குப் பின் அத் தீர்மானம் எடுக்கப்பட்டபோது அதற்குச் சாதகமாகக் கூறப் பட்ட காரணங்களுள் அந் நெறிகள் உருவாக்கிய கற்றோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி பொருந்திக்கொள்ளக்கூடிய தொழிலுலகு நாட்டில் வளர்ச்சியடையவில்லை என்பதும் ஒன்றாகும்.

புதிய வழிகளைச் சிந்திக்கும்போது அவற்றை உரியமுறையில் முன்யோசனையுடன் திட்டமிட்டு வேண்டிய / ஆயத்தங்களைச் செய்து அமுலாக்க முற்படாது, உடனடித்தீர்மானங்களாக திடீர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் தோல்விக்கு இட்டுச்செல்லும் முன்தொழிற் படிப்பு, தொழில்சார் கற்கைநெறிகளின் தோல்விக்கு இதுவும் ஒரு காரணியாகும். 1981 இல் கொண்டுவரப்பட்ட கொத்தணிப் பாடசாலை முறைமையும் இப்படியான ஒன்றேயாகும் பாடசாலை வளங்களின் உச்சப் பயன்பாட்டுக்கும் பங்கீட்டுக்கும் வழிவகுக்கவெனக் கருதப்பட்ட அவ்வமைப்பு, சிந்திக்கப்பட்டது போல முன்னோடிப் பரீட்சார்த்த அனுபவத்தினடிப்படையில் செயற்படுத்தப்படாமல் அமுலாக்கப்பட்டபோது தீர்த்துவைத்த பிரச்சனைகளிலும் பார்க்கக் கூடிய பிரச்சினைகளையே உருவாக்கியுள்ளது.

கல்வி வாய்ப்புக்களைப் பெருக்கும் எண்ணத்துடன் முன்மொழியப்பட்டகருத்துக்கள், குறிப்பாக மூன்றாம் நிலைக் கல்வி தொடர்பானவை, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிறுவன அமைப்புகள் வளர்ச்சி பெறாமையால் குறித்த நிறை பயனைப்பெறும் சூழ்நிலையினை எய்தவில்லை. முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, மேற்கொள்ளப்படுகின்றன என்றாலும் போதிய முன்னேற்றம் கிடைத்துள்ளதாகக் கூறமுடியாது.

கல்வியின் பிரதான பிரச்சினையாக இனங்காணப்பட்ட, கல்விக்கும் தொழில்வாய்ப்புக்கும் இடையிலான தொடர்புரீதியான இசைவின்மை இன்றும் அதே நிலையில்தான் காணப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டில் வெளியான இளைஞர் பிரச்சினைமீதான சனாதிபதி ஆணைக்குழு இந் நிலைமையினைக் கோடிட்டுக் காட்டுவதைக் காணலாம். அதைச் சீர்செய்யும்வகையில் அவ் ஆணைக்குழு எடுத்தியம்பிய விதப்புரைகள சில அண்மைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்படலாம். எம்முடைய நாட்டின் பாரம்பரிய 'தேசியான' தலைமைத்துவ மாற்றத்தைத் தொடர்ந்து கொள்கைப் புறக்கணிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் எப்படியான முடிவை ஏற்படுத்துமோ என்பது போகப்போகத்தான் தெரியும்.

இவ்விதமான, திடீர் முடிவுகள் உடனடித் தீர்மானங்கள் அடிப்படையிலான செயன்முறைகள் என்பது கல்விக்கு உகந்தனவல்ல என்பதை அரசு மேலிடத்தவர்களே உணர்ந்துள்ளனர் என்பதை அண்மைக்காலக் குறிப்புரைகள் எமக்குச் சுட்டிக்காட்டுகின்றன. அவை இதயசுத்தியுடன் எழுபவையாயின் கடந்தகால அனுபவங்கள், ஆலோசனைகள் ஆகியவற்றின் அத்திவாரத்தில் புதிய கட்டமைப்பினைக் கட்டியெழுப்பலாம். அது நடக்குமேயானால் நாம் இதுவரை பார்த்த வரலாற்று நிகழ்வுகள் முடிவுகள் பயனற்றுப்போகத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# இலங்கைக் கல்வியில் மோர்கன் அறிக்கை

*பின்னணி*

பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கையின் கல்வி வரலாற்றில் இரண்டு அறிக்கைகளின் தாக்கத்தினை அவதானிக்கலாம். அவை கோல்புறூக் அறிக்கை, மோர்கன் அறிக்கை என்பனவாகும். அவை இரண்டும் முன் வைத்த கருத்துக்களும் செய்த சிபார்சுகளும் நாட்டின் கல்வியில், வெவ்வேறு வழிகளில், திருப்பு முனைகளாக அமைந்தன. முன்னைய குழு இலங்கையின் நிருவாகம் தொடர்பாக ஆராய்ந்து ஆவன கூறுமாறு இங்கிலாந்து அரசினால் அனுப்பப்பட்ட ஆணைக்குழுவாகும். பின்னையது நாட்டின் கல்வி நிலைமைபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இலங்கையின் சட்ட நிரூபண சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுவாகும்.

கோல்புறூக் குழுவினரின் (இலங்கைக்கான) வருகை அரசியல் நிருவாகச் சீர்திருத்தம் தொடர்பானதேயன்றிக் கல்வியுடனானதன்று. இருப்பினும், அதன் தாக்கம் கல்வியிலும் சென்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது தெளிவு. அவர்கள் வந்தபோது செயன்முறையில் இருந்த கல்வி அமைப்பின் பிரதான குறைபாடாகச் சுட்டிக்காட்டப்பட்டது அதன் நிருவாகச் செயற்றிறமின்மையாகும். அதற்கென ஓர் அமைப்பு இல்லாத குறையினைப் போக்கும் பொருட்டு விதந்துரைக்கப்பட்ட அமைப்பே பாடசாலை ஆணைக்குழு.

பாடசாலை ஆணைக்குழு அத்தியட்ச குருவையும், நாட்டின் மதகுருமாரில் சிலரையும், மாகாண அரச அதிபர்களையும் அரசின் முக்கிய சிவில், நீதி அலுவலர் சிலரையும், உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் எனக் கோல்புறுக்குழுவினர் குறிப்பிட்டிருந்தனர். அச்சபையின் பொறுப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருந்தன. அரசுப் பாடசாலைகளை நிருவகித்கல், ஆசிரிய நியமனத்துக்கு வேண்டிய சிபார்சுகளைச் செய்தல், கல்வியில் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகள் தொடர்பாக அரசுக்கு எடுத்துரைத்தல் என்பன அதன் கடமைகளாகக் கருதப்பட்டன. எனினும் ஆரம்பத்தில் மாகாணங்களிலுள்ள பாடசாலைகள் அங்கிருந்த அரச அலுவலர்களாலேயே மேற்பார்வை செய்யப்பட்டன இது வகுக்கப்பட்ட கொள்கைக்கும் நடைமுறைக்கு இடையே இருந்த முரண்பாடாகச் சுட்டிக் காட்டப்பட்டது. அது 1834 இல் பாடசாலை ஆணைக்குழு நியமிக்கப்பட்ட பொழுது நீக்கப்பட்டு சகல மேற்பார்வைப் பொறுப்புக்களும் பாடசாலை ஆணைக்குழுவிடமே ஒப்படைக்கப்பட்டன.

பாடசாலை ஆணைக்குழுவின் செயற்பாடு ஆரம்பத்திலிருந்தே இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகியது. அதன் அமைப்பு முறையே குறைபாடுகளுக்கு இடங்கொடுப்பதாக அமைந்தது. இங்கிலாந்துத் திருச்சபையைச் சார்ந்த அத்தியட்ச குருவைத் தலைவராகக் கொண்டமை ஏனைய கிறித்தவக் குழுக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. குழுவின் அங்கத்தவர்கள் குறிப்பிட்ட மதப் பிரிவினருக்குச் சாதகமாகப் பாரபட்சமாக நடப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அக்குற்றச் சாட்டைப் பலரும் நியாயமற்றது என நிராகரித்தாலும், 1854 இல் சட்ட நிரூபண சபையின் தெரிவுக் குழு ஒன்று பாடசாலை ஆணைக்குழு சீரமைக்கப்பட்டு மூன்று உத்தியோகப் பற்றுள்ளவர்களும் இரண்டு உத்தியோகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றற்றவர்களுமாக ஐந்து மதச் சார்பற்ற உறுப்பினர்களிடம் முகாமைத்துவப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என விதந்துரைத்தது. பாடசாலை ஆணைக்குழு, அரசு அலுவல்களுக்குப் பின்னர், தமக்கென நேரமில்லாத, கல்வியோடு நேரடித் தொடர்பில்லாத உறுப்பினர்களைக் கொண்டது என்றும், அத்திபூத்தாற் போல அபூர்வமாகவே கூடியது என்றும் கண்டிக்கப்பட்டது. பத்திரிகைகள்கூட அத்தகைய கருத்துக்களுக்கும் கண்டனங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தன. 1862 இல் பள்ளிக்கூடப் பரிசோதகராயிருந்த W. J. சென்டோலின் அறிக்கைகளும் நிலைமையைக் காரசாரமாக விமர்சித்தன.

கோல்புறூக் குழுவினர் விதந்துரைத்த பாடசாலை ஆணைக்குழு தனது கடமைகளைச் சரிவரச் செய்தது என்று கூறமுடியாது. குழுவின் தலைவர், செயலாளர் இருவரும் ஒருவரோடொருவர் ஒத்தியங்க முடியவில்லை. அங்கத்தவர்கள் தமது பொறுப்புகளை ஏற்று செயற்படவில்லை. விளைவாகப் பாடசாலை ஆணைக்குழு செயலற்ற நிலையிலேயே காணப்பட்டது. அதனை இயக்க முயன்ற ஆளுநர் மக்கென்சி, தனது முயற்சிகள் பயனளிக்காத நிலையில் 1841 இல் பாடசாலை ஆணைக்குழுவை ஒழித்துவிட்டுப் பதிலாக மத்திய பாடசாலை ஆணைக்குழுவை நியமித்தார். அது ஆரம்பத்தில் ஆர்வத்துடன் செயலாற்றியது. 1841 — 47 என்ற குறுகிய காலப்பகுதியில் கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சில கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அந்த ஆரம்ப ஆர்வம் தொடர்ந்து நிலைக்கவில்லை. பழைய கதையைப்போலவே, மத்தியபாடசாலை ஆணைக்குழுவும் உறங்குநிலையில் அமிழ்ந்தது.

## குழுவின் நியமனமும் செயற்பாடும்

பாடசாலை ஆணைக்குழுவின் அக்கறையின்மை பரவலான அதிருப்தியை உருவாக்கியது. அது நாட்டின் அரச மன்றிலும் எதிரொலித்தது. கல்வி நிலைபற்றித் தீர்க்கமான பரிசீலனை மேற்கொண்ட பின்பே எதுவித மாற்றமும் இடம்பெற வேண்டும் / இடம்பெறமுடியும் என்பது அரசின் கருத்தாக இருந்தது. அந்தச் சூழ்நிலையில், சட்ட நிரூபண சபையில் உத்தியோகப்பற்றற்ற தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவரான திரு. மு. குமாரசுவாமி (சேர். முத்துக்குமார சுவாமி) ஒக்டோபர் 11, 1865 இல், 'நாட்டின் கல்வி நிலைமையினையும் அதன் எதிர்காலத்தையும், தற்போது நடைமுறையிலுள்ள கல்வி அமைப்பின் சாதனைகளையும் அதில் வேண்டிய திருத்தங்களையும், விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்' என்னும் பிரேரணையைச் சமர்ப்பித்தார். அவர் முன்மொழிந்த அந்தப் பிரேரணை உத்தியோகப்பற்றற்ற பறங்கிய அங்கத்தவரான திரு. மார்டென்சினால் வழிமொழியப்பட்டது. அப்பிரேரணை அங்கீகரிக்கப்பட்டு வேண்டப்பட்ட விசாரணையைக்கொண்டு நடத்துவதற்கென சட்டநிரூபண சபையின் உப-குழு ஒன்று அரசினால் ஒக்டோபர் 1865 இல் நியமிக்கப்பட்டது. அதன் தலைவராக இராணி வழக்குரைஞரான சேர் றிச்சாட் மோர்கனும், ஏனைய உறுப்பினர்களாக நில அளவையாளர் நாயகம் கப்டன் H. A. B. :பெயேர்ஸ் சுங்கச் சேகரிப்பாளர் திரு. I: பார்சன்ஸ், திரு. மு. குமாரசுவாமி திரு. மார்டென்ஸ் ஆகியோர் இடம்பெற்றனர்.

மோர்கனைத் தலைவராகக் கொண்டமையால் அக்குழு மோர்கன் குழு எனவும், அதன் அறிக்கை மோர்கன் அறிக்கை எனவும் பெயர் பெற்றன. குழுவின் அறிக்கை 1867 இல் சட்ட நிரூபணசபையில் சமர்பிக்கப்பட்டது. அறிக்கையைச் சபை விரிவாக ஆராய்ந்து இறுதியில் 1868 இல் குடியேற்ற நாட்டுச் செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் அரசுக் கொள்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கைக் கல்வியில் மோர்கன் அறிக்கையின் இடத்தைக் கணிப்பிட முற்படும்போது, அக்குழு செயற்பட்ட முறையினையும், அக்காலச் சூழ்நிலையையும், அதன் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளையும் கருத்திற் கொள்வது பொருத்தமாகும். நடைமுறையிலிருந்த கல்வி அமைப்பில் பரவலான அதிருப்தி காணப்பட்டது என்பது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. அதனை முழுமையாக மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியிருந்தது எனவே, தனது விசாரணையை மேற்கொண்டபோது மோர்கன் குழு மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானமாகவும் அவதானமாகவும் நடக்கவேண்டியிருந்தது. சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டதுடன், தெரிவுசெய்யப்பட்ட சில முக்கியஸ்தர்களுக்கும் சங்கங்களுக்கும் வினாக்கொத்து அனுப்பப்பட்டு அவர்களுடைய கருத்துக்களும் பெறப்பட்டன. அவற்றுடன், சமகால இங்கிலாந்து, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் கல்வி தொடர்பாகப் பின் பற்றப்பட்ட வழக்குகளும் கருத்துகளும் குழுவின் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தின என்றும் கொள்ள இடமுண்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியை அடுத்து, இங்கிலாந்தில் பொதுசனக் கல்வியை வளர்ப்பதில் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டது. எல்லா வகுப்பு மக்களுக்கும், ஆரம்பக்கல்வி மலிவாக வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தும் தேர்வுப் பெறுபேறுகளின் அடிப்படையில் பள்ளிக்கூடங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணமும் / வழக்கும், கல்வியின் மகபீடம் அரசுடன் பங்காளியாக வங்கீகரிக்கப்பட்டமையும் இங்கிலாந்தில் உருவாகிய புதிய போக்குகளாகும்.

அயல் நாடாகிய இந்தியாவில், 1854 இல், வெளியிடப்பட்ட வூட் அறிக்கை (Woods Despatch) அங்கே கல்வியில் மையப் பிரச்சினையாக விளங்கிய சில அம்சங்கள் தொடர்பாகப் புதிய கொள்கைப் போக்கினைச் சுட்டிக்காட்டியது. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு :

1. அரசு பொதுமக்களுடைய கல்வியில் கூடிய பொறுப்பை ஏற்பதுடன் சுதேசிய மொழிமூலமான கல்விக்கு அதிக வாய்ப்பை அளித்தல் வேண்டும். (இதன் மூலம் அதுவரை காலமும் அரசுக் கல்விக் கொள்கையின் அடித்தளமாயிருந்த கீழ்நோக்கிச் சுவறுதல் — Downward Filtration, என்ற கோட்பாடு மாற்றியமைக்கப்பட்டது.)

2. மாகாணங்கள் தோறும் பொதுசனக் கல்வித் திணைக்களங்கள் அமைத்தல்.

3. ஆசிரிய பயிற்சியை ஊக்குவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பெண் கல்வியையும் தொழிற்கல்வியையும் வளர்த்தல்.
5. மூன்று பல்கலைக்கழகங்களை நிறுவுதல்.
(பம்பாய், கல்கத்தா, மதறாஸ்)

மோர்கன் அறிக்கையை நுணுக்கமாகப் பார்க்கும் ஒருவர் வூட் அறிக்கையின் மேற்சொன்ன கருத்துக்களின் செல்வாக்கினைக் காணலாம்.

மோர்கன் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளில் 'நடைமுறையிலிருந்த கல்வி அமைப்பின் சாதனைகளை மட்டிடுதலும் அடங்கியிருந்தது. அதுபற்றிய நிலைமை குழுவினர் முன் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து தெளிவாகியது. அவற்றிருந்து நடைமுறையிலிருந்த கல்வியமைப்பைப் பற்றியும் அதன் சாதனைகளைப் பற்றியும் குழுவினர் தீர்க்கமான முடிவுக்கு வரக்கூடியதாயிற்று. அவை பின்வருமாறு:

1. மத்திய பாடசாலை ஆணைக்குழு, பள்ளிக்கூடங்கள் ஆகியன செயற்றிறமற்றுக் காணப்பட்டன.
2. பொதுமக்களுடைய அறிவ விருத்தியைக் கருத்திற்கொண்டு உள்ளூர்ப் பாங்குடைய முறையில் கல்வி அமையவில்லை.
3. ஆரம்ப சுயமொழிக் கல்விக்கு போதிய கவனம் செலுத்தப்படவில்லை.
4. கலவன் பள்ளிக்கூடங்கள், ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் என்பன உயர்தரக் கல்வியை முயற்சிப்பதற்கு முன் மாணவர்களுக்கு வேண்டிய அடிப்படைப்பயிற்சியை வழங்கவில்லை.
5. பெண் கல்வி எந்த வகுப்பினருக்கு (சாதாரண மக்கள்) நன்மையளித்திருக்க வேண்டுமோ அவர்களைச் சென்றடையவில்லை
6. உயர்பள்ளிக்கூடங்களில், பயனுள்ள செயன்முறைப்பாங்கான பாடங்கள் புறக்கணிக்கப்பட்டு, பல பயனற்ற பாடங்கள் புகுத்தப்பட்டன. அவை இங்கிலாந்து எட்டுப் பள்ளிக்கூடங்களை மாதிரிகளாகக்கொண்டு 'பணையளவு முயன்று திணையளவே சாதித்தன.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அத்தகைய கல்வியின் விளைவாக அரைப் படிப்புள்ள இளை ஞர் கூட்டமே உருவாகிற்று.

## விதப்புரைகள்

தனது விசாரணையின் பேறாகத் தாம் கண்டுகொண்ட குறைபாடுகளைத் திருத்தும் நோக்கில் குழுவினர் தமது விதப்புரை களைச் செய்தனர். அவற்றைக் கீழ்வரும் தலைப்புக்களில் வகுக் லாம்.

1. கல்வி நிர்வாகம்
2. கல்விநிதி
3. சுதேசிய மொழிக்கல்வி
4. ஆங்கிலக்கல்வி
5. பெண் கல்வி
6. தொழிற் கல்வி
7. ஆசிரியப் பயிற்சி

கல்வி நிர்வாகம்: பாடசாலை ஆணைக்குழுவின் நிர் வாகக் கடமைகளில் காணப்பட்ட குறைபாடே மோர்கன் குழு நியமிக்கப்படுவதற்குக் காலாயிருந்தது என ஏற்கனவே கவனித்தோம். அது தொடர்பான விசாரணை பாடசாலை ஆணைக் குழுவின் எதிர்காலம்பற்றிய முடிவோடு பிணைந்திருந்தது. பாட சாலை ஆணைக்குழுவின் செயற்பாடுபற்றி அதன் முன்னாள் செயலாளர் (J.F. டிக்சன்) அன்றைய செயலாளர் (வண.B. பெய்லி) பள்ளிக்கூடப் பரிசோதகர் (W. S. செண்டோல்) ஆகியோர் தொடுத்த வன்மையான கண்டனங்கள் பெருந்தாக்கத்தை ஏற்படுத் தின. சாட்சியங்களில் ஒருசிலர் அவ்வாணைக் குழுவைத் திருத்தி யமைப்பதை விரும்பினாலும் பெரும்பான்மையினர் அதனை ஒழித்து விட்டு அதனிடத்தில் மதசார்பற்ற அமைப்பொன்றைக் கல்விக்குப் பொறுப்புடையதாக்குவதை ஆதரித்தனர். (அமெரிக்கன் மிஷனரி மாரும் கத்தோலிக்க மிஷனரிமாரும் அரச திணைக்களம் ஒன்று கல்விக்குப் பொறுப்புடையதாவதை விரும்பவில்லை. எனவே மத்திய பாடசாலை ஆணைக்கு ஒழிக்கப்பட வேண்டும் என்றும் சிபார்சு ஆச்சரியப்பட வேண்டியதன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிக்கப்படும் பாடசாலை ஆணைக்குழுவுக்குப் பதிலாகப் பொதுசனக் கல்வித் திணைக்களம் என்னும் அமைப்பு முன்வைக்கப் பட்டது. தலைவராக முழுநேர அலுவலரான பணிப்பாளர் ஒருவர் கடமையாற்ற வேண்டுமென்றும், அவர் சட்ட நிரூபண சபை வகுக்கும் கொள்கை அடிப்படையில் செயற்படுபவராக, அதற்குப் பதில் சொல்லக் கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும் என்றும் விதந்துரைக்கப்பட்டது. பணிப்பாளரின் கீழ், பள்ளிக்கூட மேற்பார்வை / நிருவாகம் ஆகியவற்றையும் பரிசோதிப்பதற்குரிய பரிசோதகர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு பரிசோதகரும் ஒரு உப பரிசோதகரும் நியமிக்கப்பட்டார்கள்

தனி நபர் ஒருவருடைய அதிகாரப்பொறுப்பில் பொதுசனக் கல்வித் திணைக்களம் இயங்கும் நிலையில் தவறான நடைமுறைகளைத் தடுக்கும் வகையில், சட்ட நிரூபணசபை கல்வியில் அதிகப்படியான அக்கறையும் ஈடுபாடுங் காட்ட வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

பொதுசனக் கல்வி பணிப்பாளரின் கீழ் பொதுசனக்கல்வித் திணைக்களம் அமைக்கப்பட வேண்டும் என்ற விதப்புரையில் சமகால இந்திய வழக்கின் சாயலைக் காணலாம். 1854 ஆம் ஆண்டு வுட் அறிக்கை இவ்விதமான அமைப்பை முன் வைத்தமை சுட்டிக் காட்டத்தக்கது.

கல்வி நிதி: மோர்கன் குழுவினரின் விதப்புரைகளில் கல்விக்கான நிதிதொடர்பான ஏற்பாடுகள் முக்கிய கவனத்திற்குரியவை அரசப் பள்ளிக்கூடங்கள் அல்லாத ஏனையவற்றுக்கு நிதியுதவி வழங்கும் முறையினைத் தொடர்ந்தும் மேற்கொள்வதை அவர்கள் ஆதரித்தனர். சிறந்த மதச்சார்பற்ற, கல்வியை வழங்கி, செயற்றிறனுடன் நிருவகிக்கப்பட்டு, பரிசோதகர்களுடைய சோதனைக்கு உட்படும் அரசு அல்லாத நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு உடன்பட்டனர். நூல்கள், தளபாடங்கள், சம்பளங்கள் முதலியவற்றுக்காகவும், அந் நிதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியுதவி சம்பந்தமான விடயத்தில் ஒரு சிக்கலான நிலைமையைக் குழுவினர் எதிர்கொள்ள வேண்டியிருந்து. 1861 இல் பாடசாலை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் சமய போதனை பொதுவானதாக இருக்கவேண்டும் எனவும் சமயபாடம் நாளின் முதலாவது அல்லது இறுதிப்பாடமாக இருக்க வேண்டும் எனவும், சமயம் கற்க விரும்பாதோர் வகுப்புக்கு வெளியே செல்ல (அப் பாடவேளையில்) அனுமதிக்கப்படவேண்டும் எனவும் வகுத்திருந்தன. அவை சில மிஷனரிமாரிடையே எதிர்ப்பை ஏற்படுத்தியிருந்தன. அதனால் சில கிறிஸ்தவக்குழுக்கள் நிதியுதவித்திட்டத்தில் சேரவில்லை. அவ்விதம் விலகிநின்றோரையும் கல்வி முயற்சியில் சேர்த்து பயன்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையும் குழுவில் பெரும்பான்மையினரால் கருத்திற் கொள்ளப்பட்டது. எனவே அவ் விதிகள் சூழ்நிலைக்குப்பொருந்தவில்லை என்று காரணங்காட்டி அவை கைவிடப்பட்டன. கிறிஸ்தவ குருமாரின் செல்வாக்கு உப - குழுவில் செல்லுபடியாயிருந்ததமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த உதவி நன்கொடை விதிகள் மாற்றம் மிஷனரிமாருக்கு ஒரு வெற்றியென்றே கூறலாம்.

கல்விநீதி தொடர்பாக மோர்கான் குழுவின் பிரிகொரு ஏற்பாடும் நோக்கத்தக்கது. ஆரம்பக் கல்வியை இலவசமாக அல்லது மிகக்குறைந்த செலவுடன் பெறும் வாய்ப்பு மக்களுக்கு இருக்க வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் உயர்நிலையிலான கல்வியை வழங்கும் நிறுவனங்களின் செலவை ஓரளவேனும் ஈடுசெய்யும் முறையில், அக்கல்வியைப் பெறுவோரிடம் கட்டணம் அறவிடப்பட்டதை ஆதரித்தனர். கட்டணத்தை விதிப்பதில் மக்களின் நிலை சிந்திக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு. நாடு முழுவதற்கும், எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் பொதுவான ஒரு கட்டண அமைப்பை ஏற்படுத்த முடியாதென்பதை உணர்ந்தமையினால்

1. ஆண்களுக்கான சுதேசிய மொழிப் பள்ளிக்கூடங்களில் சிறியதொகைக் கட்டணமாகவும், பெண்களுக்கான சுதேசிய மொழிப்பள்ளிக்கூடங்களில் கட்டணம் இல்லாமலும்,
2. கலவன் பள்ளிக்கூடங்களில் சிறிய தொகையே கட்டணமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் (ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள்) உயர்ந்த கட்டணமும் எனக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும் என ஏற்றுக்கொண்டனர்.

சுதேசிய மொழிக் கல்வி: மோர்கன் குழுவினர் எதிர் கொள்ள வேண்டியிருந்த இன்னொரு பிரச்சினை பொதுமக்களுக்குப் பரவலான முறையில் கல்வி அளிப்பது பற்றியதாகும். அதில் கருத்துக் கெடுக்க வேண்டிய பிரதான அம்சம் — என்ன மொழியில் அக் கல்வியை வழங்கவேண்டும் என்பதாகும். கோல்புறூக் ஆணைக்குழுவினருடைய விதப்புரைகளைத் தொடர்ந்து, ஆங்கிலக் கல்வியை வளர்ப்பதே அரசுக் கொள்கையாக இருந்தது. சுதேசிய மொழிக் கல்விக்கு அரசினுடைய ஆதாவு மறுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மத்திய பாடசாலை ஆணைக்குழுவின் காலத்தில் சுதேசியமொழிப் பள்ளிக்கூடங்கள் சில அரசினால் அமைக்கப்பட்டிருந்தன. காரணம் அவற்றின் தேவை சிறிது சிறிதாகப் புலப்படத்தொடங்கியமையே எனலாம். அத்துடன், 1854 இல் இந்தியாவில் வெளியான வூட் அறிக்கையும் பொதுசனக் கல்வியில் சுதேசிய மொழிக்கல்வியின் இன்றியமையாமையைச் சுட்டிக் காட்டியிருந்தது.

குழுவினர் சுதேசியமொழிக் கல்விபற்றி நடத்திய விசாரணையில் சாதகமாகவும் பாதகமாவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. பெரும்பலான கருத்துக்கள் பொதுசனக் கல்வியைப் பரப்புவதில் சுதேசிய மொழிகளின் பயன்பாட்டை வலியுறுத்தின. மிஷனரிமார் தமது சமயப் பிரச்சார அனுபவத்தினடிப்படையில், அவற்றின் நடைமுறைப் பயன் கருதி, அவற்றை ஆதரித்தனர். அதேநேரத்தில் W.S. சென்டோல் (பள்ளிக்கூடப் பரிசோதகர்) G.S. ஸ்ருவாட் (கொழும்பு அக்கடமி) W.G. மக்றீடி (புத்தகம் உதவி அரச அதிபர்) போன்றோர் தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

சுதேசியமொழிக் கல்வி தொடர்பான மோர்கன் குழுவின் விதப்புரை அதில் கூடிய அரசுப் பொறுப்பினை வலியுறுத்தியது. நாட்டில் பரவலாகச் சுதேசியமொழிப் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படுவதையும் அவர்கள் ஆதரித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கிலக் கல்வி :** ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்தும் வளர்ப்பது பற்றிக் கருத்து பேதம் இருக்கவில்லை, ஆனால் அதனை மேலும் செயற்றிறனுடையதாகச் சில திருத்த நடவடிக்கைகளை எடுத்தியம் பினர். அவையாவன :

1. ஆங்கில ஆரம்ப பள்ளிக்கூடங்கள் செவ்வனே செயற்படாமையினால் அவற்றினிடத்தில் கலவன் பள்ளிக்கூடங்களை (இரு மொழி) அமைத்தல்.

2. மாணவருடைய வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையில் மத்திய பள்ளிக்கூடங்கள் கூடிய செயநோக்குடையவையாக இயங்குதல்.

3. கொழும்பு அக்கடமியின் ஆரம்ப வகுப்புக்கள் கூடியசெய நோக்குப் பாங்கும், இடைமட்ட வகுப்புக்களில் கூடிய நூல் சார் பாங்கும் இடம்பெறவேண்டும் எனக் கருதினர். ஆனால், கொழும்பு அக்கடமியைப்போன்ற நிறுவனம் ஒன்றுபோதும் என்பது அவர்களுடைய கருத்தாக இருந்தது.

4. இராணி கல்லூரி என்ற பெயருடன் இயங்கிய கொழும்பு அக்கடமியின் உயர்மட்டம் திருப்திகரமானதாக அவர்கள் கொள்ளவில்லை. அதனால் நாட்டுக்குப் பயனில்லை எனவும், பதிலுக்குப் பொருளாதார விரயமே ஏற்படுவதாகவும், எனவே அதனை ஒழிக்க வேண்டும் எனச் சிபார்சு செய்தனர்.

**பெண் கல்வி :** பெண் கல்விக்கென இருந்த வசதிகள் போதாது எனக்குழு கருதியது. ஆண்களுக்கு இருப்பதுபோன்ற கல்வி வசதிகள் பெண்களுக்கும் இருக்க வேண்டும் என்றும் விதந்துரைத்தனர்.

பெண்களுக்கு அளிக்கப்படும் கல்வி பயனுடையதாக இருக்க வேண்டும் என்பதில் குழு அக்கறை செலுத்தியது. அது, சிங்கள, தமிழ்ப் பெண்களுக்குப் பொருத்தமானதாகவும் பயனுடையதாகவும் இருக்கவேண்டும் என்பதும் வெறுமனே அலங்காரப் பொருளாக / ஆடம்பரப்பொருளாக நின்றுவிடக் கூடாது என்பதும் அவர்களுடைய எண்ணமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழிற் கல்வி :** தொழிற் கல்வியில் கவனஞ் செலுத்தவேண்டிய தேவை உணரப்பட்டது. அதன் பயனாக, தேஸ்ரன் கைத்தொழில் பள்ளிக்கூடத்துக்குப் புத்துயிர் கொடுத்து அதனை விடுதிப்பள்ளிக்கூடமாக மாற்றியமைக்க ஆலோசனை கூறினர். அங்கு பிற தொழிற்பயிற்சிகளை வழங்குவதுடன், சுதேசியமொழி ஆசிரியர்களைப் பயிற்றுவதற்கு நியம வகுப்புக்களை நடத்துவதும் அவர்களுடைய எண்ணமாக இருந்தது.

தொழிற் கல்வியை வளர்க்க வேண்டும் என்ற அக்கறை இருந்தாலும் அதன் விஸ்தரிப்புக்குப் பயனுடைய மேலதிக விதப்புரை எதையும் அவர்கள் செய்யவில்லை.

**ஆசிரிய பயிற்சி :** ஆசிரிய கல்வியின் முக்கியத்துவம் வற்புறுத்தப்பட்டது. அதற்கான வழிகளாகப் பின்வருவன எடுக்கப்பட்டன:

1. கொழும்பு அக்கடமியில், ஆங்கில ஆசிரியர்களைப் பயிற்றும் நோக்குடன், உயர்வகுப்புக்களில் கற்றுக்கொண்டு கீழ் வகுப்புக்களில் கற்பித்துப் பயிற்சிபெறும் வழக்கினை மேற்கொள்ளுதல்.
2. தேஸ்ரன் கைத்தொழிற் பள்ளிக்கூடத்தில் சுதேசிய மொழி ஆசிரியர்களைப் பயிற்றுதல்,
3. பெண்களைப் பயிற்றுவதற்குப் பெண்கள் உயர்தரப் பள்ளிக்கூடங்களைப் பயன்படுத்தலாம்.

மேற்கூறியவற்றில் இறுதியானது ஒரு ஆலோசனையாகவே முன்வைக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

## மதிப்பீடு

1867 இல் சமர்ப்பிக்கப்பட்ட உபகுழுவின் அறிக்கை 1868 இல் சட்ட நிரூபண சபையில் விவாதத்துக்குப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்டு குடியேற்ற நாட்டு விவகாரங்களுக்கான செயலாளரின் அங்கீகாரத்தின் பின் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் விதப்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் செயற்படுத்தப்பட்டதில் அதிக தாமதம் இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அவை அடுத்து வந்த காலப்பகுதிகளில், இலங்கையின் கல்விப் போக்கில் திசைகாட்டிகளாகவும் திருப்புமுனைகளாகவும் இருந்தமை ஏற்றுக்கொள்ளப்படும் அதே வேளையில்; அறிக்கை எதிர்பார்ப்புக்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றியது என்று கொள்ளவும் முடியாது.

ஏற்கனவே குறிப்பிட்ட வகையில், மோர்கன் குழுவினரின் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் இங்கிலாந்து. இந்தியா ஆகிய நாடுகளின் சமகாலப் போக்குகளின் செல்வாக்குப் பதிந்திருந்தது. அவற்றில் இந்தியாவில் வெளியான வூட் அறிக்கையின் செல்வாக்கு கணிசமானதாகக் காணப்பட்டது. வூட் அறிக்கை இந்தியக் கல்வியில் காலனித்துவப் போக்கில் கருத்துமாற்றத்தைப் பிரதிபலித்தது என்று கொண்டால், மோர்கன் அறிக்கையும் இலங்கையில் ஆட்சியாளர்களின் எண்ண மாற்றத்தை எடுத்துக் காட்டியது எனலாம்.

இந்தக் கண்ணோட்டத்தில் மோர்கன் அறிக்கையை மதிப்பிடுவதில் முதலில் கவனத்திற்கு வருவது பொதுமக்களுடைய கல்விக்கு அரசு பொறுப்பேற்றமையாகும். கோல்புறூக் குழுவினருடைய வருகைக்குப்பின், காலனித்துவத்தேவை நோக்கில், சமுதாயத்தில் மேல் மட்டத்தினருடைய கல்விக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சாதாரணமக்களுடைய தேவைகளைக் கருத்திற்கொள்வது ஆட்சியாளருடைய எண்ணமாக இருக்கவில்லை. இடையிட்ட காலப்பகுதியில் மக்கென்சி போன்ற ஆள்பதிகளின் தனிப்பட்ட செயற்பாடுகளாகச் சில தாராள நடைமுறைகள் இடம்பெற்றாலும் உத்தியோகபூர்வ அரசுக்கொள்கை மேல்மட்டத்தினரையே சார்ந்து நின்றது. மோர்கன் அறிக்கை அந்நிலையில் ஒரு மாற்றத்தைச் சுட்டிக் காட்டியது.

ஆட்சியாளர்களின் மனப்பாங்கு மாற்றத்தின் இன்னொரு எடுத்துக்காட்டாக சுதேசிய மொழிக் கல்விக்குக் கொடுக்கப்பட்ட கவனத்தைக் குறிப்பிடலாம். சுதேசிய மொழிக் கல்விக்கு அரசு கவனஞ் செலுத்த வேண்டும் என்ற விதப்புரை, கோல்புறூக் விதப்புரைகளின் ஆங்கிலக் கல்விக்கான அழுத்தத்திலிருந்து, திசை திரும்பும் போக்கினைக் காட்டுகிறது எனலாம். இதைக் கூறும்போது நாம் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னெச்சரிக்கையுடன் சிந்திப்பது அவசியம். மோர்கன் குழுவினரின் 'சுதேசிய மொழிக் கல்வி அபிவிருத்தி' என்பது அம்மொழியில் ஆழமான அபிவிருத்தியைக் குறிக்கவில்லை என்பது நினைவிற் கொள்ளவேண்டும். அவர்கள் குறிப்பிட்ட சுதேசியமொழிக் கல்வி அடிப்படை அறிவை (3R's) வளர்க்கும் நோக்கில் மட்டுமே அமைந்தது. ஆங்கிலக் கல்விக்குச் சமமான வளர்ச்சி கருத்திற்கொள்ளப்படவில்லை. பதிலாக ஆங்கிலக் கல்வியின் காத்திரமான வளர்ச்சிக்கு அது அடித்தளமாக அமையும் எண்ணமே இருந்தது.

பாடசாலை ஆணைக்குழு ஒழிக்கப்பட்டு அதனிடத்தில் பொதுசனக் கல்வித் திணைக்களம் அமைக்கப்பட்டமை இலங்கைக் கல்வியில் ஒரு முன்னோடி முயற்சி என்பதை எவரும் மறுக்க முடியாது. கல்வி நிருவாகம், நடைமுறை ஆகியவற்றுக்கு மதச் சார்பற்ற முழுநேர அரச ஊழியர் ஒருவர் பொறுப்பாக இருப்பது என்ற எண்ணம் அத்துறையில் ஒரு புதிய கருத்தாகக் கொள்ளமுடியும். மோர்கன் அறிக்கையைத் தொடர்ந்து 1869இல் அமைக்கப்பட்ட பொதுசனக் கல்வித்திணைக்களம், காலப்போக்கில், இன்றைய கல்வித்திணைக்களமாக உருமாறியமை நன்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் அன்று தொட்டு இன்றுவரை கல்வி நிருவாகத் துறையின் வளர்ச்சிக்கு ஊற்று அது வென்றால் மிகையாகாது.

கொழும்பு அக்கடமியின் பகுதியாக இயங்கிவந்த இராணி கல்லூரியை ஒழித்தது இலங்கையின் உயர் கல்விப் போக்கில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இராணி கல்லூரி, கல்கத்தா பிரெஷிடென்ஸி கல்லூரிக்கூடாக, கல்கத்தா பல்கலைக்கழகத்தோடு வைத்திருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, தகைமையுள்ள மாணவர் தெரிவு செய்யப்பட்டு, உயர் கல்வி பெறும் பொருட்டு இங்கிலாந்துக்கு அனுப்பப்படும் வழக்கும் புகுத்தப்பட்டது.

கல்விக்காகப் பணத்தைப்பெறும் வழிகளில் ஒன்றாகப் புகுத்தப்பட்ட கட்டணம் மக்களிடையே ஏற்றத்தாழ்வை உறுதிப்படுத்தியது. உயர்தரத்திலான ஆங்கிலக் கல்வியைப் பெற விரும்பியவர்கள் உயர் கட்டணம் விதிக்கும் பள்ளிக்கூடங்களிலே அதைப்பெற்றனர். அக்கட்டணத்தைச் செலுத்தமுடியாதவர்கள். குறைந்த தரத்திலான கல்வியோடு திருப்திப்பட வேண்டியதாயிற்று. அதன் விளைவு, வசதிபடைத்தோர்க்கு உயர்தரக் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியற்றோர்க்கு குறைந்த தரக் கல்வி என்ற பாகுபாட்டினை ஏற்படுத்தியது. அந்த வகையில் தோன்றிய சமத்துவமின்மை வளர்ந்து பெருகிப் பல்வகைப்பட்ட பிரச்சனைகளை உருவாக்கியதை இன்று உணரலாம்.

மீள்நோக்கில் மோர்கன் அறிக்கையைப் பார்க்கும்போது ஆசிரிய கல்வி, தொழிற்கல்வி ஆகியதுறைகளுக்குப் போதிய அழுத்தம் கொடுக்கப்படாமையை அவதானிக்கலாம். இத்துறைகளில் வளர்ச்சித் தேவைகள் உணரப்பட்டாலும் அவற்றுக்கான உறுதியான கருத்துக்கள் நிறுவன அமைப்புகள் முன்வைக்கப்படவில்லை. பணப்பிரச்சனை அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்ற சமாதானத்தைக் கூறமுடியும். என்றாலும், குறிப்பிட்ட அத்துறைகளில் காத்திரமான யோசனைகளை முன்வைக்கத் தவறியமை அறிக்கையின் குறைபாடு என்றே கூறவேண்டும்.

ஒட்டுமொத்தமாகக் கணிப்பிடும்போது மோர்கன் அறிக்கை அன்று இலங்கையில் நிலவிய கல்வி அமைப்பினையும் அதில் காணப்பட்ட குறைபாடுகளையும் சரியாகவே விமர்சித்தது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதன் விதப்புரைகள், இலங்கைக் கல்வியின் வளர்ச்சியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின என்பதும் உண்மையே, அவற்றின் விளைவாகத் தோன்றிய, பிரித்தானிய அதிகாரிகளைக்கொண்ட, நிருவாகமுறை, சமயக்குழு பாடசாலை அமைப்பு முறை இருமொழிக்கொள்கை என்பன நீண்டகாலமாக நிலைத்துள்ளன. நாட்டுமக்களுடைய கல்வி வளர்ச்சியில் அதன் தாக்கத்தினை நோக்கும்போது, அதனால் பயனடைந்தவர்கள் சமுதாயத்தின் மேல்மட்டத்தில் இருந்தவர்களே என்பதும் புலனாகும். அந்த மட்டத்திலிருந்து 'கற்றோர் உயர்குழு' ஒன்று உருவாகுவதைக் காணமுடியும். ஆனால் துரதிஷ்டவசமாக அக் குழுவினர் கற்ற கல்வி முழுமையாக மேலை நாட்டின் போக்கினைத் தழுவியதாக இருந்தமையால், அவர்கள் தமது சொந்த மண்ணில் சொந்த மக்கள் மத்தியில் அந்நியராகவே காட்சி கொடுத்தனர்! கருதப்பட்டனர். குடியேற்ற நாட்டு ஆட்சியின் நன்மைகளைக் கருத்திற் கொண்ட ஒரு கல்வி அமைப்பு வேறு எதனையும் சாதித்திருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௯

# பன்மைச் சமூகத்தில் கல்வியின் நோக்கும் போக்கும்

ஒரு நாட்டிலோ அல்லது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலோ ஒன்றுகூடி வாழும் மக்கள் 'சமூகம்' என்ற கணிப்பினைப் பெறுவர். அவ்விதம் ஒன்றாக வாழும் மக்களிடையே மொழி, இனம், மதம் என்ற அம்சங்களின் அடிப்படையிலான பிணைப்புக்கள் நெருக்கமான, இறுக்கமான உறவுகளுக்கு வித்திடுகின்றன. அக் குறிப்பிட்ட அம்சங்களில் தமக்குள் ஒருமித்த தன்மையுள்ள மக்கள் வாழும் சமூகம் 'ஒருமைச் சமூகம்' என அழைக்கப்படும்.' அதிலிருந்து வேறுபடுவதாக மொழி, இன, மத அடிப்படை/ அடிப்படைகளில் வேறுபடும் மக்கள் தொகுதியைக் கொண்ட சமூகம் 'பன்மைச் சமூகம்' என அழைக்கப்படும். ஒருமை அல்லாதது பன்மை என்ற கோட்பாட்டில் அந்தச் சமூகம் அந்தப் பெயரைப் பெறுகின்றது. இந்த விளக்கத்தின் அடிப்படையிலேயே பன்மைச் சமூகம்' என்ற பாவனை இங்குக் கையாளப்படுகின்றது என்பது குறிப்பில் வைத்திருக்க வேண்டியதாகும்.

வேறுபாடுகள் காணப்படும் சமூகத்தில் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு தொகுதி 'பெரும்பான்மை' என்றும் மற்றையது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மை' என்றும் மற்றையது 'சிறுபான்மை' என்றும் பேசப்படுவது பொது இயல்பாகும். மக்களாட்சி மலிந்துள்ள இந் நாட்களில் அம் மக்களாட்சி அமைவது பெரும்பான்மையின் ஆதரவைப் பொறுத்ததேயாகும் என்பது யாவரும் அறிந்தது. அந்தமுறையில் செயற்படும் சமூகங்களில் பெரும்பான்மையினரின் பலமே ஓங்குகிறது. அப்போது பெரும்பான்மையினர் சிறுபான்மையினரையும் அணைத்து/இணைத்து நடக்கத் தவறும், நடக்க விரும்பாத கட்டங்களில் இரு சாராருக்குமிடையே கருத்துவேறுபாடுகள்/மோதல்கள் வெளிப்படுகின்றன அப்படியான முரண்பாடுகள்காணப்படும் சமூகங்களில் மக்களிடையே சுமூகமான நிலைமைகள் தோன்றுவதில்லை. ஆட்சிப் பலமும் அதனூடாகத் தாம் விரும்பியதைச் செயற்படுத்தும் வல்லமையும் கிடைக்கின்ற பெரும்பான்மையினர் தமது உரிமைகளுக்காக அஞ்சத்தேவையில்லை.

அத்தகைய சூழல்களில் சிறுபான்மையினருடைய நிலை தளர்ந்தே காணப்படும். தளர்ச்சி நிலையில், தமது எதிர்காலத்தைப் பற்றி ஏங்கும் நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது. அதன் பயனாக தமது உரிமைகளைப் பெறுவதற்குப் 'போராட' வேண்டிய கட்டாயம் சிறுபான்மையினருக்கு ஏற்படுகின்றது. மொழி / இன / மத ரீதியில் எதுவென்றாலும் தமக்குரிய உரிமைகளைப் பெற விழைவது சிறுபான்மையினரின் தனித்துவமான இயல்பாகும். அவற்றில் எந்த அளவிலாவது விட்டுக்கொடுத்தால் தமது அழிவையே எதிர்நோக்க வேண்டும் என்ற பயம் அவர்களிடத்தே காணப்படும். இதனால், பன்மைச் சமூகங்களில், சிறுபான்மையினர் தமது உரிமைகளுக்காகத் தீவிரமாகச் செயற்படுவது இயல்பான ஒன்றாகவும் எதிர்பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகவும் கொள்ளப்படுவது நியாயமானதேயாகும். இந்த வகையில் பன்மைச் சமூகங்களின் பிரச்சினைகள சிறுபான்மையினரின் பிரச்சினைகளே என்ற கருத்து ஏற்புடையதெனலாம். பன்மைச் சமூகங்கள் காணப்படும் உலகநாடுகள் எல்லாமே இந்த வரையறைக்கு உட்பட்டனவாகும்.

மேற்கூறப்பட்ட பொது நியதிக்கு விதிவிலக்காக அமைந்தது வெள்ளையருடைய தனிப்பட்ட ஆட்சியிலிருந்த முன்னைய தென்னாபிரிக்கக் குடியரசு (அண்மையில் நடைபெற்ற அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் புகுத்தியுள்ள பல்லின ஆட்சிமுறை அடிப்படை மாற்றங்களை புகுத்தும் என்பது எதிர்பார்க்கப்படுவதால் ஏப்ரிலுக்கு முன்பு இருந்த நிலையே தென்னாபிரிக்காவைப் பொறுத்து கருத்தில் கொள்ளப்படுகின்றது). பண்டுக்கள், இந்தியர்கள், நிறத்தவர்கள், வெள்ளையர்கள் என்று பகுக்கப்படும் அந்தப் பன்மைச் சமூகத்தில் ஆட்சி அதிகாரமும் அத்துடனிணைந்த செல்வாக்கும் சனத்தொகையில் ஏறத்தாள இருபது வீதத்தினரான வெள்ளையரிடமே இருந்தது தமது அரசியல், சமூக, பொருளாதார மேம்பாட்டினை நிலை நாட்டவும் உறுதிப்படுத்தவும் வெள்ளையர்கள் தமக்குக் கிடைத்த அதிகாரப் பலத்தினைப் பாவித்து வந்துள்ளனர். அதற்காக ஏனையோருக்கு, குறிப்பாக பண்டுக்களுக்கு (சனத்தொகையில் ஏறத்தாள 70 வீதம்) வெள்ளையர்களுக்குக் கொடுத்த உரிமைகள், வாய்ப்புகள், வசதிகள் மறுக்கப்பட்டிருந்தன. அதற்கு முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது கல்வி என்று காணும்போது எவரும் கரிசனையெடுக்காமல் இருக்கமுடியாது. வெள்ளையரைப்போன்ற கல்வி வசதிகளும் வாய்ப்புகளும் பண்டுக்களுக்கும் வழங்கப்பட்டால் அவர்கள் கல்விபெற்றுயர்ந்து அதிகாரம், பதவி என்பவற்றில் போட்டிநிலை உருவாகும். தொழில் வாய்ப்புகள் கிடைத்துப் பண்டுக்களுக்கும் வழங்கப்பட்டால் அவர்கள் கல்விபெற்றுயர்ந்து அதிகாரம், பதவி என்பவற்றில் போட்டிநிலை உருவாகும். தொழில் வாய்ப்புகள் கிடைத்துப் பண்டுக்கள் பயனடைந்தால், வெள்ளையருடைய பண்ணைகள், சுரங்கங்கள் போன்றவற்றுக்குக் கூலியாட்கள் இல்லாத குறை ஏற்படும். அப்படியானால் வெள்ளையருடைய கொள்கைகளுக்குக் காரணமாபமைந்தது எனக்கொள்ளலாம். அதன் பிரதிபலிப்பாக, பண்டுக்களை நிரந்தரமாகத் தாழ்நிலையில் வைத்திருப்பதற்கு அடிப்படையாக அவர்களுக்குக் கல்வியில் சம வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இத்தனை நியாயப்படுத்தி விளக்கங்களை முன்வைத்து உருவாக்கப்பட்டதே தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கை, அங்கிருந்த நிலைமையின் வேடிக்கை என்னவென்றால்-தொகையிற் கூடியவர்கள் தொகையிற் குறைந்தவர்களிலும் உரிமைகள் வாய்ப்புகள் அற்றவர்களாக அவர்களின் (தொகையிற் குறைந்தவர்களின்) கட்டுப்பாட்டுக்குட்பட்டிருப்பது இந்த வழக்கின் அடிப்படையில் உரிமைகளை இழந்து தாழ்நிலையில் நிற்பவர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராயினும் அவர்களும் சிறுபான்மையினர் என்ற பகுப்பினுள் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே குறிப்பிடப்பட்ட பின்னணியில் பன்மைச் சமூகங்களில் கல்வியின் பங்களிப்பினை விமர்சன நோக்கில் பார்க்கலாம்.

## பன்மொழிப் பின்னணிகள்

மொழி அடிப்படையில் தமக்குள் வேறுபட்ட மக்களைக் கொண்ட சமூகம் பன்மொழிச் சமூகம் என்ற பெயரைப் பெறுகின்றது. ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகள் வழங்குமிடங்களில் அவை எல்லாம் சமநிலையில் இருப்பவையாகக் காணப்படுவதில்லை. வளத்திலும் வளர்ச்சியிலும் அவற்றுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதுண்டு. சில மிகவும் முன்னேற்றமடைந்தவையாகவும் நவீன வாழ்வில் கல்வி-சமூக-தொழில் துறைகள் யாவற்றிலும் உச்சப் பயன்பாட்டுநிலையை அடைந்தவையாகவும் விளங்குவதுண்டு. மறுகோடியில் வேறு சில மிகவும் தாழ்நிலையில், தமக்கென வரிவடிவமே இல்லாமல், வெறுமனே பேச்சுவழக்கில் மட்டும் காணப்படுவதுண்டு. ஏனையவை இவ்விருதுருவங்களுக்கும் இடைப்பட்ட நிலையில். அப்படியான சந்தர்ப்பங்களில் தத்தம் மொழிகளுக்கு இடத்தைக் கோரும் மக்களின் குரல்களுக்குச் செவிசாய்க்க வேண்டிய நிலையில் அரசு அங்கே தான் பிரச்சினைகள் எழுகின்றன.

சமூக வாழ்வில் மொழியினுடைய செயற்பாடு கல்வி, தொழில், சமூக உறவு என்ற மூன்று முக்கிய துறைகளில் இடம் பெறும். இவை மூன்றுக்கும் வழிகோலுவதாக அரசகருமம் பன்மொழிகள் வழக்கிலுள்ள நாட்டில் எந்த மொழி/மொழிகள் இக் கடமைகளைச் செய்யவல்லன என்ற வினாவுக்கு விடை காணப்பட வேண்டும், ஒரு மொழியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கேற்ற வளத்தையும், வளர்ச்சியையும் அது பெற்றிருந்தால் அவசியம் இன்றைய வாழ்வில் அறிவியல் சமூக உறவு, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றை உறுதிசெய்யும் வகையில் மொழி / மொழிகள் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். அதற்கு வேண்டிய சொல்லாட்சி, சொற்றொடர் நுணுக்கம், நூல்கள், மொழிவல்லுனர் ஆகிய வளங்கள் உடையவையே பொருத்தமானவையாகக் கணிக்கப்படும் அத்தகைய மொழிகளே பாவனைக்குகந்தவையாகும். அவை பாவனைக்குட்படும்போது அவற்றுக்கும் பாவனையிலில்லாத ஏனைய மொழி/மொழிகளுக்கு அந்தஸ்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதம் தோன்றுவது இயல்பு. ஒரு மொழிக்குக் கொடுக்கப்படும் உயர்வு தமது மொழிக்கில்லை என்பதைக் காணும் பிற மொழியைப் பேசும் மக்கள் மனத்தாங்கலுக்குள்ளாகின்றனர். அதன் விளைவாக மொழிப் பிரச்சினைகள் உருவாகின்றன.

பல மொழிகள் வழக்கிலுள்ள சமூகங்களில் அவற்றினுடைய அரச கரும/நிர்வாக நடைமுறைகளில் எல்லா மொழிகளையும் சம அளவில் பயன்படுத்தமுடியாத நிலை உருவாகலாம். இரண்டு அல்லது மூன்று மொழிகளுக்கு மேலான எண்ணிக்கையான மொழிகளை முன்னர் குறிப்பிடப்பட்ட கருமங்களில் பயன்படுத்துவது யதார்த்த நிலைக்கு அப்பாற்பட்டதாகலாம். அந் நிலைமைகளில் அரச கரும விடயங்களுக்கெனப் பிரகடனப்படுத்தப்படுத்தப்பட்ட மொழி/மொழிகளைத் தெரியாத மக்கள் அவற்றைக் கற்க வேண்டி நேரிடும். அத் தேவையை நிறைவு செய்வதற்கு அரச கரும மொழி தெரியாதவர்களுக்கு அதனைக் கட்டாயமாகக் கற்பிக்கும் நிலைமை உருவாகும். அத்தகைய கட்டாயம் பன்மொழிச் சமூகங்களில் தவிர்க்க முடியாததாக இருந்தாலும், அது மக்களிடையே சமனற்ற பழுக்களைச் சுமத்துவதனால் மனத்தாங்கல்களும் அவற்றின் வழி பிரச்சினைகளும் எழ வழிவகுக்கின்றது. இதில் கல்விக் கொள்கை காத்திரம் பெறுகின்றது. முன்னை சோவியத் ஒன்றியம், இந்தியா ஆகிய நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட மொழிக் கல்வித் திட்டங்கள் இப் பின்னணியிலேயே உருவாக்கப்பட்டன. அவற்றின் அமுலாக்கத்தில் சோவியத் ஒன்றியம் வெற்றிகாண, இந்தியா வெற்றிபெற முடியாமற் போனதற்கு அந்தந்த நாட்டில் காணப்பட்ட பிற காரணிகள் காலாயிருந்தன/இருக்கின்றன.

அரசியற் கருத்துக்களும் இப்பிரச்சினைகளை பூதாகரமாக வளர்த்து விடுவதும் உண்டு. அரசியல் நோக்கமே முதன்மையிடத் பெறுகின்றபோது உணர்ச்சிகள் உந்தப்படும் நிலைகள் உருவாகின்றன. பெரும்பான்மையினருடைய மொழி மட்டும் பாவனைக்குக் கொண்டுவரப்பட்டுச் சிறுபான்மையினருடைய மொழி/மொழிகள் புறக்கணிக்கப் படும்போது இருசாராரிடையேயும் முரண்பாடுகளே தோன்றும். தமது மொழி புறக்கணிக்கப்படுவதன் மூலம் தமது உரிமைகள் மறுக்கப்பட்டுக் காலப் போக்கில் அழிக்கப்படலாம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சம் சிறுபான்மையோரிடம் தோன்றும். அந்தஅச்சத்தின் வெளிப்பாடாக உருவாகும் உணர்ச்சி வேகம் தீர்க்கமுடியாதமோதல் நிலைகளை உருவாக்கியிருப்பதை உலகின் பல பகுதிகளிலும் காணலாம்.

மொழி அடிப்படையில் உருவாகும் பிரச்சினைகள் அந்நியராதிக்கத்திலிருந்து விடுதலைபெறும் நாடுகளில் சர்வசாதாரணமான நிலைமைகளாகும். அந்நியராட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றதன் முழுமையான இறைமையின் சின்னங்களாக விளங்குபவற்றுள் ஆட்சிமொழியும் ஒன்று. சுதந்திர இறைமையுடைய எந்த ஒரு நாடும் அந்நியமொழி ஒன்றை அரச கருமங்களில் பயன்படுத்துவது ஏற்புடையதன்று. அதன் இடத்தில் சுதேசிய மொழி/மொழிகள் பயன்படுத்தப்படுவதே விரும்பத்தக்க நிலைபாகும். அவ்வகையிலான மொழி மாற்றத்தின்போது எல்லா சுதேசிய மொழிகளுக்கும் இடங்கொடுக்க முடியாத நிலை ஏற்படலாம் மொழிகளின் எண்ணிக்கைப் பெருக்கம் எல்லாவற்றையும் பாவிப்பதை இயலாததாக்கும். மொழிகளின் வளர்ச்சிநிலை சிலவற்றின் பாவனையைத் தவிர்த்துவிடும். இத்தகைய பின்னணிகளில், இடம் கொடுக்கப்படாத மொழிக் குழுவினர் தமது உரிமை மறுக்கப்பட்டுவிட்டதாகக் குரலெழுப்புவர் மறுபுறத்தில், ஆட்சிமொழியாகத் தெரிவு செய்யப்பட்ட மொழியை அதனை விளங்கிக்கொள்ளாதவர்களும் விளங்கிக்கொள்ள வேண்டிய தேவை உண்டு. அதற்கு வழிசெய்யும் கடமை அரசுக்கு உண்டு. அதற்குக் கடைப் பிடிக்கக்கூடிய வழி என்ன?கட்டாயப்படுத்துவதா? தேவையை உணர்ந்து கற்கும் நிலையை உருவாக்க முடியுமா? இவற்றுக்குப் பதில்காண வேண்டிய பொறுப்புக் கல்வியின்பால் சாரும்.

கல்வியானது ஒவ்வொரு குழந்தையினதும் பிறப்புரிமை என்று பறைசாற்றப்பட்டுள்ள இன்றைய காலகட்டத்தில்பன்மொழிச் சமுகங்களில் கல்வியின் ஊடகமாக –கல்விமொழியாக– எதனைக் கொள்வது என்பது சிக்கலான பிரச்சினையாகின்றது. தாய்மொழியே இலட்சிய போதனா மொழி என்ற தத்துவம் கல்வியில் அடிப்படைக் கோட்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் ஒவ்வொரு குழந்தையும் அதன் தாய்மொழி மூலமே கற்பிக்கப்பட வேண்டும் என்பது மறுக்க முடியாததாகும். அதை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு மொழியும் ஏற்ற வளமும் வளர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். வளர்ச்சியடையாத மொழிகளை வளர்த்தெடுக்கும் கடப்பாடு அரசுக்கு உண்டு. அரசியல் நிலைபாடுகள் இதனைச் சாத்தியமற்றதாக்கிவிடும் சந்தர்ப்பங்களும் காணக்கூடியதாக இருக்கின்றன. இந்த யதார்த்தமே இன்று பெரும்பாலான பன்மொழிச் சமூகங்களில் காண முடிகின்றது.

பன்மொழிச் சமூகங்களில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும் தமது தாய்மொழியை விட மேலதிகமாக ஒரு மொழியையேனும் கற்றிருப்பது அனுகூலமானதாகும். அவ்விதம் கற்கச் செய்வது எப்படி என்பது அச்சமூகங்கள் முகங்கொடுக்க வேண்டிய முக்கிய பிரச்சினையாகும். கட்டாயப்படுத்தல் என்பது தீர்க்க முயலும் பிரச்சினையிலும் மோசமான பிற விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். அவற்றினால் போட்டா போட்டிகளும் சந்தேகங்களும் சகஜநிலைமையை அழித்துவிடும். புரிந்துணர்வு வளர்க்கப்படும் பின்னணிகளில் எதுவித கட்டாயமுமில்லாமல் விருப்பின் பேரில் மக்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளைக் கற்பதைக் காணலாம். இங்கு பெரும்பான்மையினரின் பெருந்தன்மையான அணுகுமுறை சிறுபான்மையினரை அரவணைத்து அனைவரையும் சுமுகமாகச் செயற்படச் செய்கிறது. இத்தகைய போக்கிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்வது சுவிற்சர்லாந்து. பெரும்பான்மையினரிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் புரிந்துணர்வும் இல்லாத காரணத்தினால் பன்மொழித்துவம் பிரச்சினை புரையோடி விட்ட புண் போலக் 'கொதித்துக்' கொண்டிருப்பதற்கு இலங்கை தெளிவான உதாரணமாக விளங்குகின்றது. அரசியல் இலாப நோக்கங்கள் கொள்கை வகுப்பில் கண்களை மூடச் செய்ததனால் சமூக வாழ்வே சீர்குலைந்து விட்டமை கண்கூடு.

இத்தகைய நிலைமைகளில் கல்வியின் பொறுப்பு மிகவும் பாரியதாகும். கல்விக் கொள்கையானது இருக்கக் கூடிய வேறுபாடுகளைத் தொடர்ந்து அழுத்தித் தேய்க்காமல் அவற்றையும் கடந்து செல்லக்கூடிய தூரநோக்கில் செயற்படவேண்டும். வாழ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதியுயர் விழுமியங்களுக்கு முதன்மையிடம் கொடுத்து இளஞ்சந்ததியினரை நெறிப்படுத்தும் வகையினதாய் இருத்தல் வேண்டும். கல்வியை வழங்கும் பொறுப்பில் பெரும்பங்கு அரசினையே சார்ந்துள்ள இக்கால கட்டத்தில் கல்வியில் அரசியற் தலையீடு ஒரு பிரச்சினையாகவே காணப்படும். அந்தக் குறுக்கீட்டையும் கடந்து மேலே செல்வதில் வெற்றிகாண்பது கல்வியியலாளரின் கடமையாகும்.

## பல்லினப் பின்னணிகள்

மனித குலக் கூறு அடிப்படையில் தமக்கிடையே வேறுபட்டுக் காணப்படும் மக்கள் இனம் (race) என்ற வரையறையில் கணக்கிடப்படுவர் இவ்வேறுபாடுகள் உடல் அமைப்பு, நிறம், தலைமுடியின் தோற்றம் என்ற அம்சங்களுக்கூடாக வெளிப்படையாகத் தோற்றமளிக்கின்றன. இவ்விதம் பார்வைக்கு வெளிப்படையாகத் தோன்றும் வேறுபாடுகள் உலகின் பல நாடுகளிலும் மக்கள் மத்தியில் பிரிவினைகளையும் பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளன.

இன அடிப்படையில் வேறுபாடுகள் காணப்படும் இடங்களில் அவற்றிடையே உயர்வு தாழ்வுகள் கற்பிக்கப்படுவதைக் காணமுடியும். ஒன்று மற்றதிலும் பார்க்க உயர்ந்தது என்ற எண்ணம் அவற்றுக்கிடையிலான சமுக உறவுக்குக் குந்தகமான ஒன்றாகச் செயற்படுகின்றது. அதன் அடிப்படையில் பிரச்சினைகள் தீவிரமடைகின்றன, அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கல்விக்கும் பங்குண்டு என்பது மறுக்க முடியாத ஒன்று. கல்விக்கூடாகப் பிரிவினைகளைத் தாண்டி ஒன்றுசேரும் மனப்பான்மையை வளர்க்கச் செயற்படும் சமுகங்களும் உண்டு. அதே வேளை, பிரிவினைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் நிரந்தரமாக வைத்திருப்பதற்குக் கல்வியைக் கருவியாக்க முயலும் சந்தர்ப்பங்களையும் காணலாம். கல்வியின் சம வாய்ப்புக்களை வழங்குவதற்குப் பதிலாகச் சிலருக்கு வாய்ப்புக்கள் வசதிகள் மறுக்கப்பட்டதன் மூலம் அந்த இன மக்களைத் தாழ்த்தி வைத்திருக்க எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு உதாரணங்கள் பல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில் இனப்பிரச்சினை தோன்றுவதற்கு அரசியல் பின்னணியிலான சமூக பொருளாதார நோக்கங்கள் காரணமாயிருக்கக் காணலாம். தென்னாபிரிக்கக் குடியரசில் வெள்ளையர்களுக்கும் வெள்ளையரல்லாதோருக்கும் இடையில்-குறிப்பாக பண்டுக்கள் என வழைக்கப்பட்ட கறுப்பு இனத்தவர்கள் – காணப்பட்ட இனமுரண்பாடுகளுக்கு இதுவே காலானது என்று கொள்வது தவறாகாது. 20% அளவிலான வெள்ளையர்கள் தமது கைகளிலிருந்த ஆட்சி அதிகாரத்தையும் அதன் பயனான சமூக பொருளாதார பலத்தையும் இழக்காமலிருக்க பண்டுக்களைத் தாழ்த்தி வைத்திருக்க வேண்டியது அவசியமாயிற்று. அதன் வழியில் வந்ததே அங்கு தோன்றிய இனப்பிரச்சினை எந்த ஒரு வழியிலும் வெள்ளையர்களுடன் பண்டுக்கள் சம நிலைக்கு வரவோ அல்லது போட்டியிடவோ முடியாமல் செய்யவேண்டுமேயானால் அவற்றுக்கான தகைமைகளை இல்லாமற் செய்யவேண்டும். கல்வி வளர்ச்சிக்கான வழிகளை மறைத்து விடுவது அதற்குச் சுலபமான யுக்தியாயிற்று. அதுவே இனஒதுக்கல் கொள்கையின் மூலமாகும் (தென்னாபிரிக்கக் குடியரசில் அண்மைக் காலங்களில் உருவாகிவரும் அரசியல் மாற்றங்கள் இவ்விழி நிலையை அகற்றும் என்ற நம்பிக்கை குறிப்பிடத்தக்கது)

இன பேதங்கள் கல்வியில் வெளிப்படுவதற்குப் பிறிதொரு காரணமாகச் சமூகவியற் காரணிகளைக் குறிப்பிடலாம். ஒரு இனம் பிறிதொரு இனத்தைத் தன்னிலும் பார்க்கத் தாழ்வானது என்று கருதும் இடங்களில் இது வெளிவருகின்றது. அமெரிக்க ஐக்கிய அரசு இத்தகையதொரு போக்கிற்குச் சிறந்த உதாரணமாகும். அந்த நாட்டிலே வெள்ளையருக்கும் கறுப்பு இனத்தவருக்குமிடையே காணப்பட்ட பிளவுகளுக்குப் பிரதான காரணம் வெள்ளையர்கள் தம்மை உயர்வானவர்கள் என்று கருதியமையாகும். வரலாற்றுப் பின்னணியும் அதற்குப் பக்கபலமாக இருந்தமை மறக்கமுடியாதது. அமெரிக்க ஐக்கிய அரசுக்கு கறுப்பு இனத்தவர்கள் சென்று சேர்ந்த வழியே அதன் ஆரம்பம். தென்னாபிரிக்காவில் சிறைப் பிடிக்கப்பட்டு மேற்கிந்திய தீவுகளுக்கூடாகக் கொண்டு செல்லப்பட்டு அடிமைகளாக வெள்ளையரிடம் விற்கப்பட்டவர்களே அமெரிக்க ஐக்கிய அரசில் முதன் முதலாக வந்த கறுப்பு இனத்தவர்கள். அடிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக வந்த அவர்கள் வெள்ளையர்களுடைய பண்ணைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். காலப் போக்கில் ஆபிரகாம் லிங்கனுடைய காலத்தில் அடிமை விடுதலைச் சாசனம் இயற்றப்பட்டு அடிமை என்று எவரும் இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டாலும், 'விடுதலை' பெற்ற கறுப்பு இனத்தவர்களும் அடிமைகளின் வாரிசுகள்/வழித்தோன்றல்கள் என்ற சமூகவடுவிலிருந்து முற்றாக விடுபட முடியவில்லை. வெள்ளையர்களுடைய மனோநிலை இதனைத் தாண்டக் கூடியதாக விரியாத நிலையில் சமநோக்குச் சாத்தியப்படக்கூடியதாக இருக்கவில்லை/இருக்க முடியாது.

சமூக வடு என்ற கருத்தோட்டத்துடன் கறுப்பு இனத்தவர்கள் அறிவாற்றல்கள், விவேகம் என்பவற்றில் வெள்ளையரிலும் குறைந்தவர்கள் என்ற 'நம்பிக்கை'யும் இப் பேதத்தை வளர்த்தது. இவ் எண்ணம் கல்வி, சமூகவியல் ஆய்வுகளினால் நிராகரிக்கப்பட்டு விட்டாலும், ஒரு காலத்தில் வெள்ளையர்களிடையே பரவியிருந்தது. அதனால் வெள்ளையர்களும் கறுப்பு இனத்தவர்களும் சமமாகப் பழகுவது இயலாததாயிற்று. அதன் வெளிப்பாடே இரு சாராருக்கும் வெவ்வேறான பள்ளிக்கூடங்களை அமைத்த வழக்கு. சட்டப்படி அது அங்கீகரிக்கப்படாததாயினும் (அமெரிக்க உயர்நீதி மன்றம் பல தடவைகளில் பாடசாலைப் பிரிவினையைச் சட்டவிரோதமானது எனத் தீர்ப்புக்களை வழங்கியிருப்பினும்) இருசாராரிடையேயும் முழுமையான புரிந்துணர்வு இன்னும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பல்லினச் சமூகங்களில் காணப்படும் குழுக்களிடையே பெரும்பான்மை சிறுபான்மையைத் தன்னோடு இணைத்துக்கொள்ள முயலும் சந்தர்ப்பங்களும் உண்டு. அப்படியான முயற்சிகளை மேற்கொள்ளும் போது சிறுபான்மையினருக்குச் சம உரிமை, சம சந்தர்ப்பம், சமவாய்ப்பு என்றெல்லாம் வழங்கப்படுவதுடன் மேலதிகப் பிரத்தியேக சலுகைகளும் வழங்கப்படுவதுண்டு. இத்தகைய ஒரு நிலைமையை நியூசிலாந்தில் காணலாம். அங்கே பெரும்பான்மையினரான வெள்ளையர்கள் சிறுபான்மையினரான மவோரிகளைத் தம்முடன் இணைத்துக்கொள்ளப் பல வழிகளையும் கையாண்டனர்; ஆனால், மவோரிகள் தமது தனித்துவத்தைப் பேணுவதில் தீவிரமாக இருப்பதனால் வெள்ளையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் நோக்கம் நிறைவேறவில்லை. அதுமட்டுமல்லாமல், அங்கு பிரச்சினை வேறொரு பரிமாணத்தையும் பெற்றுள்ளது. கல்வியில் கிடைக்கின்ற சலுகைகளைப் பயன்படுத்தி மேற்கத்தைய அறிவுலகில் வாழும் மேலைவாரிப் பிள்ளைகள் தமது சுய கலாச்சார மரபில் பற்றி நிற்பதால் இரு உலகங்களுக்கிடையே தவிக்கும் உளவியற் பிரச்சினைகளுள் சிக்குண்டுள்ளனர்.

## பன் மதப் பின்னணிகள்

கல்வியில் மதப்பிரச்சினை இரு பரிமாணங்களில் வெளிப்படுகின்றது.

1. கல்வியை வழங்குவதில் பொறுப்பு அதிகாரம் என்ற அடிப்படைகளில் அரசுக்கும் மதபீடத்துக்குமிடையிலான போட்டி.

2. பள்ளிக்கூடங்களில் (குறிப்பாக அரசுப் பள்ளிக்கூடங்களில்) சமயபாடப் போதனை கல்விக்கும் மதபீடத்துக்குமிடையில் இருந்துவந்த நீண்டகாலத்தொடர்பு இப் பிரச்சனையின் அண்மைக்கால முனைப்புக்குக் காரணக் கொள்ளத்தக்கதாகும்.

கல்வியின் வளர்ச்சியினை வரலாற்றுக் கூடாகப் பின்னோக்கிப்பார்ப்பவர் அதன் தொடக்ககாலத்தில் மதகுருமாரே கல்வியை வழங்கும் பொறுப்பை ஏற்றிருந்தனர் என்பதைக் காண்பர். சமூகத்தில் கல்வியை வேண்டி நிற்பவர்கள் தொகை குறைவானதாக இருந்த காலத்தில் அக் கல்வியை வழங்கக்கூடிய அறிவு அனுபவம், அவகாசம் என்பவற்றை மதகுருமாரே கொண்டிருந்த வேளையில், மதகுருமார் அப் பொறுப்பினை ஏற்பது இயல்பானதாகவே இருந்தது. காலப்போக்கில் மதபீடம் நிறுவனமயமாகிக் கட்டமைப்பு ஒழுங்கில் வளர்ச்சியடைந்த பொழுது ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவன ரீதியான பள்ளிக்கூட அமைப்பிலும் மதபீடம் தொடர்ந்து அப் பொறுப்பினை நிறைவேற்றி வந்தது. தொடக்கத்தில் வழங்கப்பட்ட கல்விக்கான செலவு குறைவானதாக இருந்தமையால், மதபீடத்துக்கு அரசிடமிருந்து கிடைத்த மானிய உதவிகளும் மாணவர்களிடமிருந்து கிடைத்த கொடுப்பனவுகளும் செலவைச் சீர்செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப் போதுமானவையாயிருந்தன. கல்விச் செலவுகள் பெருகிய போது அரசிடமிருந்து கூடிய உதவிகளைக் கோரும் நிலை தோன்றியது.

மறுபுறத்தில், அரசின் நிலைப்பாட்டிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அரசு என்ற அமைப்பு குழந்தைப் பருவத்தில் இருந்த காலகட்டத்தில் அது குறிப்பிட்ட அளவுக்கு மேலான பொறுப்புக் களை ஏற்காமலிருந்தமையை அவதானிக்கலாம். நடைமுறை யதார்த்தத்தில் அது நியாயப்படுத்தக்கூடியதுமாகும். சமூக வளர்ச்சியில் அரசு பலம்பெற்று பொறுப்புக்கள், கடமைகள் ஆகியவற்றில் கூடிய சுமைகளை ஏற்றுக்கொண்டு அதிகாரங்களிலும் ஆதிக்கம் பெருக கல்விச்செயற்பாட்டிலும் பங்கெடுக்கும் நிலைமை உருவாகியது. கல்விக்கென நிதியுதவியை வழங்கியும், கல்வியை வழங்குவதில் நேரடியாக ஈடுபடும் அரசு கல்வி தொடர்பான தனது கடமையெல்லைகளை விசாலித்துக்கொண்டது. இந்தப் பின்னணியிலே கல்வியில் அரசு – மதபீடம் இரண்டும் போட்டியிடும் நிலைமை வளர்ந்தது.

மதபீடம் – அரசு தொடர்புகள் சுமுகமாக இருந்த / இருக்கின்ற சமூகங்களில் இரண்டுக்குமிடையே புரிந்துணர்வு அடிப்படையில் தீர்வுகள் காணப்பட்டன. அவ்விதமானவற்றுள் இரு வகைப்பட்ட அணுகு முறைகளைக் காணலாம்.

1. அரசினுடைய அனுமதியுடன் அரசின் நிதியுதவியையும் பெற்று மதபீடங்கள் தமது பள்ளிக்கூடங்களை நடத்துதல்.

2. அரசினுடைய அனுமதியுடன் நிதியுதவி எதுவுமின்றி மதபீடங்கள் தமது பள்ளிக்கூடங்களை நடத்துதல். இங்கிலாந்து ஸ்கொட்லாந்து, நெதர்லாந்து, இந்தியா போன்ற நாடுகள் இத்தகைய சமூகப்போக்கு எடுத்துக்காட்டுகளாகும். அரசுக்கும் மதபீடத்துக்குமிடையே புரிந்துணர்வு இல்லாத சந்தர்ப்பங்களில் அரசு தன்னுடைய ஆதிக்கத்தைப் பயன்படுத்தி மதபீடத்தின் கல்விச் செயற்பாடுகளைத் தடைப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ முயன்றுள்ளது. இதற்கு நெப்போலியன் காலத்து பிரான்சு நாடு உதாரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக அமையும். தொடக்கத்தில் இருந்த இறுக்க நிலை
காலப்போக்கில் மாற்றம் பெற்ற சூழ்நிலைகள் காரணிகள்
என்பவற்றின் தாக்கத்தினால் விட்டுக்கொடுத்து இசைவாக
இயங்கும் நிலை வளர்ந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

பன்மதச் சமூகங்களில் கல்வி தொடர்பாகக் காணப்படும்
மற்றைய பிரச்சினை பள்ளிக்கூடங்களில் சமயத்தை ஒரு பாட
மாகப் போதிப்பது. இதன் சாத்திரம் அரசினால் நடத்தப்படும்
பள்ளிக்கூடங்களுக்கே முக்கியமானதாகும். ஏனைய பள்ளிக்
கூடங்கள், நிதியுதவி பெற்றாலென்ன பெறாவிட்டாலென்ன, மதச்
சார்புப் பள்ளிக்கூடங்களாக அமையுமிடங்களில் தத்தம் மதத்தைக்
கற்பிக்கின்றன. அரசுப் பள்ளிக்கூடங்களில் மதம் கற்பிப்பது
தொடர்பாகப் பல்வகைப்பட்ட வினாக்களுக்குப் பதில்கூற வேண்
டும். ஒன்றுக்கும் மேற்பட்ட மதங்கள் வழக்கிலிருக்கும்போது எத
னைக் கற்பிப்பது? குறிப்பிட்ட ஒரு மதத்தினைக் கற்பிப்பதனால்
அரசின் நடுநிலைமைக்கோட்பாடு என்னாவது? எல்லா மதங்களை
யும் கற்பிப்பதனால் மாணவர் மத்தியில் பிரிவினையுணர்வுகள்
வலுப்படாதா? இவ் வினாவுக்குப் பதில் காணக்கூடிய வகையில்
கொள்கைகள் இருவகைப்பட்டுக் காணப்படுகின்றன. அரசுப்
பள்ளிக்கூடங்களில் சமயப்பாடம் கற்பிக்கப்படுவதில்லை என்பது
ஒரு நடைமுறை. அப்படியான இடங்களில் சமயத்துக்குப் பதிலாக
ஒழுக்கக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. பிறிதொரு வழக்கு எல்
லாப் பிரிவினர்க்கும் பொதுவான பாடத்திட்டம் ஒன்றின் அடிப்
படையில் சமயத்தைக் கற்பித்தல். இதற்குப் பிரத்தியேக உதார
ணம் இங்கிலாந்தில் கடைப்பிடிக்கப்படும் 'அங்கீகரிக்கப்பட்ட
பாடத்திட்டம்' இங்கிலாந்தின் நிலைமையில், மதத்தில் காணப்படும்
வேறுபாடு ஒரே மதத்தில் (புரட்டஸ்தாந்து, கிறிஸ்தவம்) காணப்
படும் பிரிவுகளேயன்றி வெவ்வேறு மதங்களல்ல என்பது நினை
வில் கொள்ளப்படவேண்டும். வெவ்வேறு மதங்கள் காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் எல்லோர்க்கும் பொதுவான, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பாடத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பது சாத்திய மான ஒரு விடயமாகாது.

## கல்வியின் கடமை

மேற்குறிப்பிட்ட நிலைமைகளிலும் சமூகங்களிலும் கல்வி யின் பங்கினைக் கணிப்பிடும்போது கல்வியின் இலட்சியம் சில சந்தர்ப்பங்களில் கேள்விக்குறியாவதைக் காணமுடியும். நாட் டினை எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை களை எடுப்பது அரசின் செயற்பாடாகும். அந் நடைமுறையில் அரசின் கொள்கைகளும் அவற்றின் சித்தாந்தங்களும் அடிப்படைக் காரணிகளாக அமைவது இயல்பே. அதன் வழியில் கல்வி கருவி யாகப் பயன்படுத்தப்பட்டதை / பயன்படுத்தப்படுவதை கண்டோம். எனின், கல்வியின் தத்துவார்த்த நோக்கம் என்னாவது என்பதே கேள்வி.

கல்வியின் பல்வகை நோக்கங்கள் செயற்பாடுகள் ஆகிய வற்றில் வேறுபட்ட குழுக்கள் இடையே இணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது பெரும்பொறுப்பாகும். ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களிடையே புரிந்துணர்வையும் விளக்கத்தையும் ஏற்படுத்த வேண்டியது கல்வியின் கடமையாகும். சமூகப் பொருத்தப்பாட் டினை வளர்க்க வேண்டிய கல்வியானது சமூகத்தில் பிரிவினையை நிலைநாட்டுவதற்குக் காலாக இருப்பது கவலைக்குரிய விடயமே யாகும். கல்விக் கொள்கைகளை உருவாக்கும்போது கல்வி நோக் கிலும் பார்க்க கல்வியல்லாத நோக்கம்-பெரும்பாலும் அரசியல் நோக்கம்-முதன்மை பெறும்போது மயக்கங்கள் மேலும் மருட்சிக் குக் காரணமாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சமூக அமைப்பில் யதார்த்த நிலையைப் பார்க்கும்போது எந்தச் சமூகத்திலும் அரசியல் நோக்கங்களும் அழுத்தங்களும் காத்திரம் பெறுவதே நடைமுறையில் காணப்படுகின்றது. அரசுகள் பற்றிப் பேசும்போது 'சமூகநல அரசு' என்று விதந்து பேசப்படுவதைக் கேட்கிறோம். அந்த விளக்கம் சமூகத்தின் நலனுக்காக அரசு என்பதையே சுட்டிக்காட்டுகின்றது. எனினும், சமூகத்தின் நலனைக் கவனிப்பதான/கவனிக்க வேண்டிய அரசு சமூகத்தைத் தன் திசையிற் கொண்டுசெல்ல முயற்சிக்கும் வேளைகளில் தான் தவறுகள் ஏற்படுகின்றன. அந்தச் சந்தர்ப்பங்களில் கல்வியின் விளக்கம் நன்னெறியை ஒளிரச்செய்வதாக இருத்தல் வேண்டும்.

இதில் இன்றைய காலகட்டத்தில், பன்மைச் சமூகங்களைப் பொறுத்தவரை, கல்வியைப் பாரிய அறைகூவல் எதிர்கொள்கின்றது. பன்மைச் சமூகத்தில் வாழும் மக்களிடையே பேதங்களை மறந்து ஒன்றித்து வாழ்வதற்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டிய எதிர்பார்ப்பு ஒருபுறம். அந்தச் செயற்பாடு வேறுபட்ட மக்களை இணைக்கும் வகையினது, மறுபுறத்தில் மனிதனுடைய சுயவளர்ச்சியையும் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் பேணலும் பெருக்குவதிலும், இது தனித்துவங்களைப் போற்றுவதனால் பிரிந்து நிற்கும் நிலைமையினை ஊக்குவிக்கின்றது. இந்த ஒன்றுக்கொன்று வேறான ஒன்றோடொன்று முரண்படுகின்ற, எதிர்பார்ப்புக்களைக் கல்வி எவ்விதம் நிறைவேற்றுகின்றது / நிறைவேற்றப்போகின்றது என்பது பலரும் அவதானிக்கும் அம்சம்.

பன்முக அமைப்பாக விளங்கும் சமூகங்களில் சமூக உறுதிப்பாடு பன்மைநிலையை அகற்றி அவற்றையெல்லாம் பெரிய சமூகத்தினுள் அடக்குவதை அவாவிநிற்கின்றது. இந்தச் சிந்தனையின் பின்னால் 'வேற்றுமையில் ஒற்றுமை' எனற தத்துவம் விளங்குகின்றது. அதே வேளையில், ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுப் பாரம்பரியங்கள் அவற்றின் வேறுபடுகின்ற கோலங்களால் செழிப்பையும் கவர்ச்சியையும் கொடுக்கின்றன. அந்தப் பார்வையில், பண்பாட்டுப் பன்மை நிலைகளை ஊக்குவிப்பது தேவையாகின்றது இவற்றில் கல்வி எதைச் செய்கின்றது/ எப்படிச் செய்கின்றது என்பதைப் பொறுத்தே பன்மைச் சமூகப் பின்னணிகளில் கல்வியின் போக்குக் கணிப்பிடப்படமுடியும்.

முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org